BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 79 28 Friday September 2007

விற்பனைக்கல்ல

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




**VISION TRAVEL & TOURS**
உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....
SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE
Part of Serendip Lanka Travels
Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

**EuroDebt**
08001218193
07949455366
24 மணி நேர இலவச அழைப்பு
கடனில் இருந்து விடுபட ஒரு வழி தேவையா?
வீட்டு உரிமையாளரோ அல்லது வாடகைக்கு வசிப்பவரோ எவராயினும்
எம்முடன் தொடர்பு கொள்ளலாம். உங்கள் கடனில் இருந்து தீர்வான மீள இலவச ஆலோசனைகளும், அபிப்பிராயங்களும் எம்மால் வழங்கப்படுகின்றன.

**SPICELAND**
for the Asian taste of Spice Curry
100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 மட்டுமே
020 8667 1700 | 020 8649 8895
07984 038 757
212 London Road, Croydon Surrey CR0 2TE

**ABBEY TRAINING. NET**
- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம் அத்துடன்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்.
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

**என்.எஸ்.ஆர்**
ENESAR
Tel: 020 8686 0873
Fax: 020 8239 3299
36 Grafton Rd, Croydon, CR0 3RP

**Mortgagelink**
The National Mortgage Network
எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566
Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident - Not your fault
Driver / Passenger - within last 3 years
- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected
NO WIN - NO FEE
Tel: 020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

**Key to Success**
Wishing to buy a business? Or Selling your business?
We can also arrange business finance for freehold & leasehold purchases or Re - Mortgages upto 85% loan to values.
We specialise in Commercial Sales
Business urgently required selling in confindence, strictly no sale no fee & no upfront charges.
Tel: 020 8942 1235 / Mob: 07957 594 881 / Fax: 020 8942 1234

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

## Properties and Financial Services Ltd.

- வியாபார வங்கிக்கடன்
- விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
- வாடகை வீடுகள்
- காப்புறுதி
- மோட்கேஜ் (Mortgages)

**100% Mortgage Specialist**

- 100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்
- வருமான அத்தாட்சி அவசியமில்லை
- முற்பணம் (Deposit) அவசியமில்லை
- ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்
- முத்திரை தீர்வு அவசியமில்லை
- உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்




74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk



*"ESRT Limited is a dynamic and rapidly expanding Recruitment and Training Agency"*

- Log in today to send your CV for any job you required.
- Our candidates database is daily accessed by many employers in each sector.
- Need training in Bookkeeping, Accountancy and Information Technology? For booking send us your details today. [Training is given in both Tamil and English]

உங்களின் தொழில் தேடும் முயற்சியை எங்களிடம் விட்டு விடுங்கள். நீங்கள் விரும்பு தொழில் மற்றும் உங்கள் தொடர்பு விபரங்களை குறிப்பிட்டு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்புங்கள்.

ESRT
Elite Staff Recruitment and Training Limited

Elite staff recruitment and Training Limited
55 Longley Road, Harrow. HA1 4TG
Tel : 020 8863 4648 Fax: 020 8863 4648
Email: Info@elitestaffrecruitment.com
Web: www.elitestaffrecruitment.com

**RECRUITING NOW**
Accounts assistant
Apply today

# MK IMPORT & EXPORT

www.mkpvtlimited.com

உங்கள் பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து கொடுக்கப்படும்

ஆடைகள்
பூமாலைகள்
குத்துவிளக்கு
இசைக்கருவிகள்
சமயல்பாத்திரங்கள்
மரக்கறிவகைகள் & மீன் வகைகள்
வீட்டுக்குத் தேவையான தளபாடங்கள்
கோவிலுக்குத் தேவையான தளபாடங்கள்

*Import & Export Your Personal or Commercial Goods from India by Airfreight & Shipping*

*Door to Door Air, Sea, Land Service to World Wide*

தொடர்புகளுக்கு: வேல் (Vel)
Mob: 07944008249
07738393289
Fax: 442087112077

# MK PARTY SERVICES

www.mkpartyservices.com



*"Give us your job to organise the Party Service on your behalf"*

- Hall & Boat Party
- Cards
- Decoration
- Dj, Music, Nathaswaram & Thavil
- Flowers & Maalai
- Cakes
- Drinks
- Catering
- Bridal Makeup
- Sarees
- Video & Photography
- Liminated Album
- Priest Arrangement
- Gift Ideal
- Banner Printing



தொடர்புகளுக்கு: வேல் (Vel)
Mob: 07944 008 249
07738 393 289
Fax: 44 20 8711 2077

**MK pvt limited**

www.mkpvtlimited.com, Email:mkpvtlimited@hotmail.com

# பூமாலை

## வணிகக் குரல்

கடந்த ஒரு பேப்பரில் இணைக்கப் பட்டிருந்த வணிகக்குரல் மிகவும் பயனுடையதாக இருந்தது. ஐக்கிய இராச்சியத்தில் வாழும் தமிழ் மக்களின் தேவை உணர்ந்து செயற் படும் உங்கள் நிறுவனத்திற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம்.

— தவரத்தினம்

## நன்றி

பாரதியின் நினைவு தினத்தை நினைவில் வைத்து நல்லதொரு கட்டுரையைப் பிரசுரித்ததற்கு நன்றி.

— சிவாணி

## படங்களைப் போடுங்கோ

நான் கனகாலமாக உங்கள் திருமண விளம்பரத்தில் எனக்குத் துணை தேடுகிறேன். உங்களின் கலியாண விளம்பரத்தால் நன்மை பெற்ற சோடிகளின் படங்களையும் வெளியிட்டால் எங்களுக்கும் ஒரு நம்பிக்கை வரும். நாங்களும் நம்பிக் கையோடை தொடர்ந்து தேடுவம்

— சுகந்தன்

## ஆயிரத்தில் ஒருவன்

'ஆயிரத்தில் ஒருவன் ஐயா நீ' என அவுஸ்திரேலியாவில் வாழும் மருத் துவர் பிரையன் செனவிரத்ன பற்றி எழுதியிருந்தீர்கள். இப்படி நம்ம வர்கள் தமிழருக்கு சேவை செய்ப வர்களை பாராட்டுவது அரிது. அந்த வகையில நீங்கள் வித்தியாசமான ஆக்கள் என்பதை நிருபித்து விட்டீர்கள்.

— பெனடிக்ற்

## ஏன் தான் இப்படி?

ஒரு பேப்பரின் முதல் பக்கத்தைப் பார்த்தால் முகமே தெரியாத படம். அந்தப் பெட்டை வடிவோ இல்லையோ ஒண்டுமாத் தெரியே ல்லை. அதுதான் தேடினாலும் கிடைக்காது என்று எழுதினீங்களோ? இப்படி முகம் தெரியாத படத்தைப் போட்டு எங்களைப் போன்ற இளை ஞர்களின் வயித்தெரிச்சலைக் கிளப் பாதேங்கோ

— வசீகரன்

## தொடருங்கள்

பல பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியதாய் வெளிவந்திருந்த வணிகக் குரலைத் தொடர்ந்து வெளி யிடுவீர்கள் என்று எதிர்பார்க் கிறேன். இது வெறும் வணிகர் களுக்குரியதாயில்லாமல் அனை வருக்கும் பிரயோசனமான ஆக்கங் களைத் தாங்கியிருந்தது.

— சுகுமார்

## வியாபார தந்திரமோ

சென்றவாரம் உங்கடை பேப்பருக்காக கடையிலை போய்க் காத்திருந்தது தான் மிச்சம். 2 நாட்களின் பின் வந்ததாகக் கேள்வி.

எங்களை ஒவ்வொரு நாளும் கடைக்குப் போகப் பண்ணுற துக்காகவோ இப்படிச் செய்தனீங்கள் அல்லது பேப்பரைத் தேடி கடைக்குப் போனால் ஏதாவது வாங்குவம் எண்டு கடைக்காரர் செய்த வியாபார தந்திரமோ?

— கலாதரன்

## நெடுமாறன் ஐயாவின் போராட்டம்

ஒரு விசயம் சொல்லோணும். நெடுமாறன் ஐயாவின்ர போராட்டம் தோல்வியிலை முடிஞ்சதாய்த் தான் எனக்குப் படுகுது. முதலிலை படகுப் பயணம். அது சரிவராதெண்டு எல்லாருக்கும் தெரியும்.

பிறகு உண்ணாவிரதம் அதுவும் இந்த கறுப்பு கண்ணாடி கோடீஸ்வரனை நம்பி கைவிட்டிட்டார்.

ஒரு நல்ல மனிசன்ர போராட்டம் வீணாய்ப் போனது எனக்கு சரியான கவலையைத் தந்தது.

— சிவராமலிங்கம்

## உருப்படியான கட்டுரை

ஆயிரத்தில் ஒருவன் அய்யா கட்டுரை பற்றி நீண்ட கட்டுரை எழுத வேண்டும் என்று நினைத்தேன். குறை நினைக்காதேங்கோ. நேரம் கிடைக்க வில்லை.

உண்மையில் தமிழர்கள் அனை வரும் வாசித்திருக்க வேண்டிய கட்டுரை. தமிழீழத்திற்காக ஒரு சிங் களக் குடிமகன் போராடுகின்றார். அது மிகப் பெரிய விசயம்.

டக்ளஸ், கருணா, சங்கரி என்ற தறுதலைத் தமிழர் தமிழ் மக்களை அவர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் செனவிரத்ன அவர்கள் தமிழீழத்துக்காகப் பிரச்சாரம் செய்து கொண்டு திரிகிறார் என்றால் அவர் எவ்வளவு போற்றப்பட வேண்டியவர்.

எங்களது தேசியத் தலைவர் செனவிரத்ன அவர்களை வாழும் போதே கௌரவிக்க வேண்டும் என்று ஒரு பேப்பர் ஊடாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு பேப்பர் இதுவரை காலமும் செய்த பணிகளுள் மகத்தான பணி இதுவென்றே கூறுவேன்.

— ஈழமைந்தன்

## ராமர் கட்டேல்லையாம்

சேது சமுத்திரத்திலை ராமர் பாலம் கட்டேல்லை என்ற நீங்கள் கட்டுரை பிரசுரிச்சது சரியாய் போச்சுது. கலைஞர் கருணாநிதியும் இதைத் தான் சொல்லப்போக அந்தாளின்ர தலையை கொய்யிறது எண்டு வெளிகிட்டிட்டாங்கள். இஞ்சை உங்க ளுக்கு பிரச்சனை வராது எண்டு நம்புறன். இருந்தாலும் ஏதும் அனுமான்கள் உங்களையும் போட்டு தாக்க வெளிக்கிடுதுகளோ தெரியாது.

— ரூபன்

## பெரியார் வேண்டாம்

பெரியார் இயக்கம் வரலாற்றுத் தேவை என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் பெரியார் தமிழ் மொழியைக் கொச்சைப்படுத்தும் விதமான பல கருத்துக்களை வெளியிட்டு இருக்கிற ாரே?

அப்படியானால் தமிழ் மொழி புலத்திலே கொச்சைப்படுத்தப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?

— பாமரன்

## சினிமா வேண்டாம்

'யார் இந்த ரஜனிகாந்' கட்டுரைத் தொடர் தேவை தானா? ரஜனிகாந் பற்றி நாங்கள் அறிந்து என்ன காணப் போகிறோம்? சினிமா பற்றி நாங்கள் அறிய விரும்பினால் நிறைய இணையத் தளங்கள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்து அறிந்து கோள்வோம்.

ஒரு பேப்பரில் நாங்கள் விரும்புவது அரசியலையும் யாரும் பார்க்காத புதிய பார்வையையும் தான்.

தயவு செய்து இரண்டு பக்கத்திற்கு மேல் சினிமாவிற்காக ஒதுக்காதீர்கள்

— சந்தியா

## யதார்த்தம்

தலைப்பைப் பார்த்து விட்டு என்னடா இது என்று நினைத்து உள்ளே சென்று பார்த்தால் ஒரு வித்தியாசமான பார்வையில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பார்க்கப்பட்டு இருந்தது.

உண்மையில் அவர்களது இலக்கு சிங்களப் பிரதேச அரசியலைக் கைப்பற்றுவது தான் என்பதும் அதை அடைவதற்காகவே இனவாதக் கோசம் போடுகிறார்கள் என்பதிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் தமிழரின் தேசிய விடுதலையை ஒப்புக் கொள்கின்ற எந்த ஒரு சிங்களத் தலைமையும் இல்லாத காரணத்தால் ஆயுதப் போரின் மூலமே எமது உரிமையைப் பெறலாம் என்பதே யதார்த்தமாகும்

— உதயன்.

# லா சப்பலில் லைலா

எல்லாருக்கும் வணக்கம்,

கோயில் காவடி விளையாட்டு விழா எல்லாம் முடிஞ்சு குளிர் தொட ங்கப் போகுது. நானும் ஒரு போர்வை வாங்க வேணும். சரி பாரிஸ் மாணிக்க பிள்ளையார் கோயில் திருவிழா நடந்த அண்டு யாரோ வாளுகளோடை வந்து இறங்கினவையை போலிசு பிடிச்சு கொண்டு போனதெண்டு போன பேப்பரிலை எழுதினனான் எல்லாருக்கும் தெரியும் தானே?

அதுமட்டுமில்லை பிரான்சிலை உள்ள சிறீலங்கா தூதரகத்தின்ரை கொடியையும் யாரோ கிழிச்சு போட்டினமாம். பிறகென்ன இலங்கை அரசாங்கமும் அவையின்ரை புலத்து ஒட்டுண்ணிகளும் சேந்து புலியளின்ரை வேலைதான் அது எண்டு தங்கடை தளங்களிலை ஒரு செய்தியை விட்டு பாத்தவை. ஒரு பிரயோசனமும் இல்லை. அதாலை இலங்கையிலை வெளிவாற விழங்காததீப(லங்காதீப) எண்டொரு பேப்பர் பிரெஞ்சு அரசாங்கத்தை திட்டித் தீர்த்திருக்கு.

அடுத்ததா நான் நெடுகலும் சோமாசிலை(அரசாங்க உதவிப்பணம்) இருக்கிறனெண்டு எல்லாரும் வயிறெரிஞ்சதாலை இப்ப கட்டாயம் வேலைக்கு போகவேணும் எண்டு சட்டத்தை கொண்டந்திட்டாங்கள்.


சும்மா இருக்க விடாமல் வேலைகளை தேடியெடுத்து அனுப்புறா ங்கள். வேலை வெட்டி இல்லாமல் இவ்வளவு காலமும் இருந்து பழகியாச்சு இனி யாருக்கும் கீழை போய் எப்பிடி வேலை செய்யிறது போசாமல் சொந்தமா ஏதாவது செய்வம் எண்டு நினைச்சு வங்கி யிலை ஏதாவது கடன் கேப்பம் எண்டு போனன்

நான் தமிழ் எண்டு தெரிஞ்சதுமே வங்கிக் காரன் தேவையில்லாத ஆவணமெல்லாம் கேக்கிறான் அவன் கேக்கிறதெல்லாம் இருந்தால் நானேன் கடன் கேக்கப் போறன். ஆனால் தமிழ் எண்டதும் ஏன் இவ்வளவு கேள்வி கேக்கிறாங்கள் எண்டது பிறகுதான் விளங்கிச்சுது

இஞ்சை இருந்த எங்கடையாக்கள் கனபேர் பாங்கிலை கடன் எடுத்து போட்டு மிச்சத்துக்கு கடன் மட்டையிலையும் முடிஞ்சதை விறா ண்டிக் கொண்டு கனடாக்கு ஓடிட்டினம் அதாலை இப்ப தமிழர் கடன் கேட்டா சில வங்கிகள் வேண்டா வெறுப்பாதான் பாக்கினம்.

எல்லாம் சரி கடனெடுத்தவன், சீட்டு போட்டவன், வட்டிக்கு எடுத் தவன்,சண்டித்தனம் செய்தவன், போலிஸ் தேடுறவன் எண்டு எல்லாருமே கனடாக்குதான் ஓடினம். அப்ப எனக்கு ஒரு சந்தேகம். கனடாவிலை கிரிமினலுகள் தான் இருக்கினமா?அய்யோ ஏதோ வாயிலை வந்ததை வஞ்சமில்லாமல் சொல்லிப் போட்டன். இனி கனடா பக்கம் போக ஏலாது.

- அன்புடன் லைலா




MCG
Open 7 Days
MONEY IN MINUTES TO SRI LANKA
India, USA, Canada, Australia
Transfers to
over 120 Countries
இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.
HSBC
HNB
SEYLAN BANK LIMITED
PEOPLE'S BANK
SampathBank
BOC BANK OF CEYLON
Head Office : 125 - 127 Bramley Road,
Oakwood, London N14 4UT
Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com
FAST CASH
SEND TODAY - COLLECT TODAY
PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்
A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, SEPTEMBER 28, 2007, ISSUE 79

## எந்த வடிவத்தில் வந்தாலும் அது பயங்கரவாதமே ..

நியுயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையின் 62வது கூட்டத்தொடரில் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆற்றிய உரையிலிருந்து பெற்றதே இந்தத் தலைப்பு. எதிர்பார்த்தபடி, அங்கு அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை சர்வதேசப் பயங்கரவாதத்துடன் இணைத்து தமது தவறுகளிலிருந்து தப்பிப்பதாய் அமைந்திருந்தன. சாதித்தது எதுவுமில்லாதவிடத்து, பொருளாதாரம், சமூக நியாயம், மனிதவுரிமை என எல்லா விடயங்களிலும் சரிந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டின் தலைவரிடமிருந்து நாம் அதிகமாக எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் சர்வதேசப் பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டி தமது மனிதவுரிமை மீறல்களை நியாயப்படுத்துவதை அனைத்துலக நாட்டு தலைவர்கள் பொறுத்துக் கொள்வது ஏற்புடையதாக இல்லை. உலகத் தலைவர்களின் இந்த நிலைப்பாடே இன்று இலங்கைத் தீவின் மனித அவலங்களுக்கு காரணமாக அமைகிறது.

சர்வதேச விதிமுறைகளை எதனையும் மதிக்காத, தனது சொந்த நாட்டு மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டுவிழ்த்து விடுகிற ஒரு நாட்டின் தலைவர் உங்கள் முன் பௌத்த தத்துவங்களை போதித்து விட்டுப் தப்பிப் போகிறார் எனின் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகள் எதற்கு இருக்கின்றன என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. ஒரு தேசிய இனத்தின் அழிவுக்கு இது போன்ற சர்வதேச அமைப்புக்கள் துணை போகுமாயின் அவை உலகில் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் நம்பிக்கையை இழந்து விடும் நிலை ஏற்படும்.

பயங்கரவாதம் எந்த வடிவத்தில் வந்தாலும் அது பயங்கரவாதமே என்ற மகிந்தவின் கூற்றுடன் நாம் உடன்படுகிறோம். அது நியுயோர்க்கில் மேற்கொள்ளப்பட்டாலும், லண்டனில் மேற்கொள்ளப்பட்டாலும் ஏன் வள்ளிபுனத்தில் செஞ்சோலை வளாகத்தின் மீது நடாத்தப்பட்டாலும், பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் மீது நடாத்தப்பட்டாலும் ஒன்றுதான். அரசு தமது மக்களின் மீது நடாத்துகிற பயங்கரவாதம் என்பது மட்டும் அவசியமான ஒன்றாக ஆகிவிடாது.

சர்வதேச பயங்கரவாதத்தை ஈழத் தமிழர்கள் நியாயப்படுத்தவில்லை அதற்கு ஆதரவும் வழங்கவில்லை. தாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளின் தேசிய பாதுகாப்பு விடயத்திலும் அவர்கள் முரண்படவில்லை. ஆனால் அவர்கள் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தை தொடர்ந்தும் எல்லா வழிகளிலும் எதிர்த்துக் கொண்டேயிருப்பார்கள்.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனிதவுரிமை மீறல்களை விளக்கி அவர்களது இறைமை மதிக்கப்பட வேண்டும் என ஐ.நா. மாநாட்டு பேராளர்களை தமிழர் தலைமை அறிக்கை மூலம் வேண்டிக் கொண்டமை பொருத்தமான நடவடிக்கையாக அமைந்தது.

## ஒரு பேப்பர் . . . . . . . . . .

*வணக்கம்!*

*கடந்த **ஒரு பேப்பர்** சில நாள் பிந்தி உங்களுக்கு கிடைச்சிருக்கும். இந்த முறை ஒரு கிழமை பிந்திக் கிடைக்கப் போகுது. அதுக்காக முதல் உங்கட காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்கிறோம். என்னடா இப்பிடி அக்கறையில்லாமல் பேப்பரை அடிக்கிறாங்கள் அல்லது அடிக்கிறாளுகள் எண்டு நீங்கள் அலுத்துக் கொள்ளிறது விளங்குது. போனமுறை பேப்பர் வடிவமைக்கிறதிலை ஏற்பட்ட தாமதத்தாலை இந்த நிலையேற்பட்டிட்டுது. இருந்தாலும் போன பேப்பரை பார்த்திட்டு பலபேர் எங்களுக்கு இப்பத்தான் உங்கட பேப்பர் வாசிக்கக்கிற மாதிரி இருக்குது எண்டு பாராட்டிச்சினம்.*

*விசயம் என்னண்டா லண்டன் பதிப்பிலை வணிக்கக் குரல் எண்ட இணைப்பை சேர்த்திருந்தம் அந்த நேரம் பாத்து நோதன் றொக் எண்ட வீடு வாங்க கடன் வழங்கிற நிறுவனம் சரிஞ்சு போக, சனம் எங்களுக்கு அடிச்சு தம்பியவை நீங்கள் Sub Prime Morgatge பற்றி எழுதினதாலை எங்களுக்கு இந்த பிரச்சினையள் விளங்கக் கூடியதாய் இருப்பதாய் பாராட்டிச்சினம். தொடர்ந்து மாதத்தின் முதலாவது பேப்பரில் வணிகக் குரல் இணைப்பாக லண்டன் பதிப்புடன் வரும். கனேடிய பதிப்பிலையும் இப்படிச் செய்ய முயற்சிக்கிறம்.*

*வழமையா மாதத்தின் முதலாவது, மூன்றாவது வெள்ளிக்கிழமைகளிலை வாற **ஒரு பேப்பர்** நொவம்பர் மாதம் வரை மாதத்தின் இரண்டாவது, நாலாவது வெள்ளிக்கிழமைகளில் வெளிவரும் என்பதை அறியத் தருகிறம். இதன்படி அடுத்த பேப்பர் ஒக்ரோபர் 12ம்திகதியும் பின்னர் ஒக்ரோபர் 26ம் திகதியும் வெளிவரும்.*

*என்னடா போட்டுக் குழப்புறாங்களே எண்டு புலம்பாமல் ஒரு கிழமை பிந்தி வருகிறது எண்டு நினைவிலை வையுங்கோ! இது ஒண்டு சனி மாறிற மாதிரியில்லை .. டிசம்பரிலையிருந்து பழைய மாதிரி வரும்.*

*இந்த பேப்பரில் 'விரியம்' என்ற புதிய பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு இளைஞர் குழுவின் இந்த முயற்சி அடுத்துவரும் பேப்பர்களில் இன்னமும் விரியும். இந்தப் பகுதி தொடர்பாகவும் உங்கட கருத்துக்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கோ! செய்யிற ஆக்கள் கொஞ்சம் புதுசு. ஆனாபடியாலை கண்டபடி திட்டிப் போடதேங்கோ. விட்டுட்டு போயிடுவாங்கள்.*

***ஒரு பேப்பர்** ஒரு சமூகப் பத்திரிகைதான் இருந்தாலும் உங்கட குடும்பப் பிரச்சினை யளை பேப்பரிலை போடுங்கோ எண்டு கேட்கிறது எங்களுக்கு நியாயமாய் படேல்லை. வேணுமெண்டா ஆச்சியிட்டை அட்வைஸ் கேளுங்கோ. ஒருத்தரும் தன்ரை புத்திமதியளை கேட்கிறேல்லை எண்டு மனிசி கோவிச்சுக் கொண்டு போயிட்டுது. தேடிக் கண்டுபிடிச்சு கூட்டிக் கொண்டு வாறம்.*

*மறந்திடாதிங்கோ அடுத்த பேப்பர் ஒக்ரோபர் 12ம் திகதி வரும்.*

*மீண்டும் சந்திப்போம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Democracy and Trust

The Sri Lankan nation state is only for the Sinhalese, more specifically Sinhalese Buddhists. The foundation for this ideal was seeded in the minds of the Sinhalese well before the dawn of independence by their democratically elected politicians. If you are a non-Sinhalese-Buddhist you may live in Sri Lanka but without equal rights! That was the subtle message then.

The first democratically elected government of independent Sri Lanka was led by D.S Senanayake, an England trained lawyer. This government initiated Sinhala domination straight away by various mechanisms, both legal and illegal.

It withdrew citizenship rights of hundreds of thousands of Tamils because their great grandfathers were not born in Sri Lanka. Most of these so called Tamils of Indian origin lived in the central part of Sri Lanka. By doing so in one stroke it reduced parliamentary representation of Tamils in the newly independent Sri Lanka.

The Northeast of Sri Lanka is the historical homeland and Tamils were the majority community there when Sri Lanka was granted freedom by the UK. They understood what would be in store for them in an independent Sri Lanka dominated by the majority Sinhalese. Thus they organised themselves accordingly and resisted the government peacefully. Their peaceful protests were ignored.

The Sinhalese politicians wanted to make the Tamils politically, economically and culturally impotent thus decided to make the Tamils a minority in their own land. In order to do so they started Sinhalese only state-sponsored colonisations of Gal Oya and Amparai in the Tamil East and Padaviya in the Tamil North. The bulk of these Sinhala colonists were convicted criminals and they were backed by the army and the police. Within a short period they violently drove out the local Tamils who had lived in these areas for generations. This was the beginning of the making Tamils a minority in their own land policy.

> Sri Lanka is only for the Sinhalese

In 1956 S. W. R. D. Bandaranaike came to power. The most important manifesto pledge of this Oxford University educated gentleman was to make the Sinhala language the only official language of the Sri Lankan nation state. He promised to do so within 24 hours of him coming to office. An overwhelming majority of Sinhalese people voted for him and he did exactly what he promised.

This democratic act effectively made the Tamil Language, which was the mother tongue of millions of Tamils and Muslims, useless in their dealings with the state. Thus the communication of the non-Sinhalese with the all powerful government machinery was cut off in one day.

All peaceful protests by Tamils against this legislation were ignored and some times they were violently crushed.

Further, this act closed the door for young Tamils who wanted to enter the Sri Lankan Civil Service. For those Tamils who were already in the service, this act blocked their promotions thus forcing them to seek premature retirement.

Again Tamils protested in peaceful means and demanded equal rights.

In response anti Tamil violence was sponsored by the state with the police and armed services ignoring these violations and in some cases actively taking part in looting, burning and killing innocent Tamil civilians.

Tamil members of parliament, who performed non-violent protests, were brutally assaulted by Sinhalese thugs opposite the parliament buildings, while the state security forces looked on.

In 1958 the government brought out the introduction of the Sinhala letter 'Sri' to all vehicle number plates. The Tamils correctly understood this as a symbolism of their subjugation and resisted this act peacefully. This act of resistance spawned even more violence against the Tamils. The Buddhist clergy gave this bloody enterprise active support. They even led the Sinhala mobs reading out from electoral lists, names of Tamil householders and Tamil businesses.

> Sinhalese politicians wants to make the Tamils politically, economically and culturally impotent

At this juncture many Tamils viewed their peaceful protests as impotent. They advocated an independent homeland so they could live safely and mind their own business peacefully. They promised to achieve this by all means necessary.

In 1975 the then Prime Minister Srimavo Bandaranaike (the wife of Mr S.W.R.D Bandaranaike) sent the army for the first time to the Tamil North to suppress the Tamils' demand of a recognised homeland.

In 1977 Mr Jayewardene came to power with a five-sixth majority promising to make every one equal. But within a few months his regime organised more anti Tamil legislations and anti-Tamil violence than any other regime of the past. The draconian prevention of Terrorism Act was brought into action during this time. The infamous anti Tamil pogrom of July 1983 was orchestrated by this democratically elected government. Thousands of young Tamils were arrested by the armed forces and later disappeared. Economic sanctions were brought in. Huge areas of Tamil land were colonised by Sinhala settlers while Tamils of these areas were killed and the remaining were made to become internally displaced. Indiscriminate aerial bombardments were started during the life of this democratically elected government.

In 1994 Mrs Kumaratunge, Paris educated, daughter of two democratically elected prime ministers (S.W.R.D Bandaranaike and Mrs Srimao Bandaranaike) came to power promising peace and reconciliation. Within a year her government embarked on a war against the Tamils. Her infamous 'War for peace' is the worst war the Tamil people had known until now.

We do not need to elaborate what Mr Rajapakse led government is doing to the Tamils. 'I was elected primarily by a Sinhala constituency' Mr Rajapakse recently said.

Even after all this the international community still wants the Tamils to trust in the Sri Lankan democracy and the leaders of Sri Lanka.

**Should we?**

# தெற்கிற்கு தண்ணி காட்டும் வன்னி



இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் யார் கையில் என்பதைத் தீர்மானிக்கும் திறமை வலிமை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமே உண்டு எனக் கொழும்புத் தலைவர்கள் நம்புகின்றார்கள். இந்த நாட்டில் அரசை அமைக் கவும், கவிழ்க்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் தென்னிலங்கைத் தலைவர்களுக்குத் தேவைப்படுகின்றார் என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தக் கருத்து ஊடாகத் தொனிக்கும் அம்சங்களை ஆராய் வது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதே.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலங்காலமாகத் தமக்கிடையேயான அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றன என்பதை இப்பத்தியில் ஏற்கனவே பலதடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

தமது அரசியல் செல்வாக்கையும் பதவி அதிகாரங்களையும் பலப்படுத்திக் கொள்வதற்காக தமிழர்களின் இனப் பிரச்சினையை இழுத்தடித்து, அவர்களின் உரிமைகளைப் பறிப்பதை அரசியல் சித்து விளையாட்டாக நடத்தி, அரசியல் காய் நகர்த்தல்களைத் தென்னிலங்கை அவ்வப்போது மேற்கொண்டு வந்தது என்பதே இந்தத் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தின் ஆரம்ப கால சரித்திரம்.

அதாவது, தமது தென்னிலங்கை அரசியல் பொம்மலாட்டத்தில் தெற்கு அரசியல்வாதிகளின் கைஅசைவுக்கு ஏற்ப ஆடும் பொம்மைகளாகத் தமிழரின் தலைமைகள் விளங் கின. அது அந்தக் காலம்.

அது இப்போது மலையேறி விட்டது என்பதையே சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டும் கருத்துக்கள் எடுத்துக் கூறுகின்றன.

இப்போது வன்னியின் கையசைப்புக்கு ஏற்பவே தென்னிலங்கையின் அதிகார மாற்றப்போக்கு அமைகின்றது என் பதுதான் கொழும்பின் விசன நிலைமை.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா ஆட்சிப் பீடத்துக்கு ஏறிய காலமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது விடுதலைப் போராட்டத்தில் தமது தலைமைத்துவத்தை ஊன்றிப் பதித்து நிலைநிறுத்திய காலமும் ஏறத்தாழ கிட்ட மட்ட ஒரே வேளைதான்.

அன்று முதல் தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் விவகாரத்தில் பிரபாகரனின் சிந்தனைப் போக்கும் கணிசமான பங்களிப்பையும் செல்வாக்கையும் செலுத்தி வந்திருப்பதை நாம் ஊகிக்க உணர முடியும்.

நீண்ட தசாப்த காலம் கடந்தும் ஆட்சி நடத்தியிருக்க வேண்டிய ஜனாதிபதி பிரேமதாஸவின் அதிகாரம் வெறும் மூன்று ஆண்டுகளோடு முடிந்து போனதும் அவருக்கு மாற்றீடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மைத்துவத்துக்கு வரக்கூடிய லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, ரஞ்சன் விஜேரத்தினா போன்ற செல்வாக் குள்ள தலைவர்கள் உயிரிழந்து பலமான ஐ.தே.கட்சி வலிமையான தலைமைத்துவத்தை இழந்ததும் அதனால் அதுவரை செயலிழந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அப்போது தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்துக்குள் புது உத்வேகம் பெற்றுப் பீறிட்டுக் கிளம்ப, அதன் தலைமையை ஏற்ற சந்திரிகா குமாரதுங்க இலகுவாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியமையும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சந்திரிகா, இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட நேரத்தில் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் ஒரு கண் பாதிப்புக்கு உள்ளான சந்திரிகாவுக்கு அனுதாப அலை அள்ளிக்கொட்ட ரணில் தோற்றுப்போனதும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கனி தமக்கே, அதிகாரம் தமது கைகளுக்கே என்று முற்று முழுதாக நம்பியிருந்த ரணில் விக்கிரமசிங்க, தேர்தலைத் தமிழர் தாயகம் பகிஷ்கரிக்க மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் மீண்டும் வெற்றியைக் கோட்டை விட்டு, பரிதாபமாக நிரந்தரமாக எதிரணியில் அமரும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடியான பங்களிப்புத் தீர்மானத்துடனோ அல்லது அவரின் பங் களிப்புத் தீர்மானம் இன்றியோ நடந்தேறிய நிகழ்வுகள்தாம்.

இப்போதும் கூட நாடாளுமன்றில் ஓர் ஆட்சி மாற்றம் நடக்க வேண்டும் என்றால் அதில் கணிசமான பங்கு வகிக்கக் கூடிய அளவில் 22 எம்.பிக் களையும் கொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மூக்கணாங்கயிறு வன்னியில்தான் இருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த புலிகள் உடன்பாட்டின் கீழ்தான் மஹிந்த ராஜபக்ஷவினால் மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்துடன் வெற்றியீட்டி ஆட்சிக்கதிரையைப்பிடிக்க முடிந்தது என்பது தென்னிலங்கை எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை அல்லது உண்மையற்ற தன்மையை அம்பலப் படுத்தி வெட்ட வெளிச்சமாக்கி மஹிந்தரின் ஆட்சியை ஸ்திரப்படுத்தியோ, அல்லது அதற்கு மாற்றாக பலவீனப்படுத்தி நிலைகுலைய வைத்தோ, தேவையான நிலைப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் சக்தியும் வன்னிக்கு இன்னமும் உண்டு என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

யுத்த களத்தில் தனக்குள்ள பலத்தைப் போல அரசியல் களத்திலும் தனது பலத்தைப் பிரயோகிக் கவும், தேவைப் படாத சமயத்தில் சுருட்டி, அடக்கி வைத்துக் கொள்ளவும் கூடிய வலிமையான நிலையில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பினரும் அதன் தலைவர் வே. பிரபாகரனும் இன்று உள்ளனர் என்பது தென்னிலங்கைக்கும் அதன் அரசியல் தலைமைத்துவங்களுக்கும் நன்கு தெரிந்த விடயங்களே.

*நன்றி - உதயன்*

# Supreme Court Becomes Political Decision Maker in Sri Lanka

**By Dr. Vickramabahu Karunaratne**

The intervention of Supreme Court to arrest teachers' trade union leaders was a temporary set back for the trade union movement. The government sector trade unions will definitely get together to face the challenge. Even GMOA leaders are quite concerned about the interpretation given by the Supreme Court ruling. It means all state employees are liable to be charged of fundamental rights violation, if they refuse to perform their service. Not only government employees but even state cooperation employees are considered agents of the government.

If any private individual or company is doing contract work for a state institute to provide any service such as cleaning, transport or security, etc. then such individual or company, again comes under the category of state agency that provides a service to the people. This means very large percentage of the proletariat is forced to become agents of the very bourgeois state that oppresses them. This ruling negates the social democratic interpretation of judiciary as a provider of civil protection to the oppressed proletariat. Very large number of those who made fundamental rights applications is state sector workers. Now the chicken has come home to roost.

All workers in the state sector, together with workers in all institutes with some connection with the state, could become respondents in fundamental rights appeals. Thus government servants in the broadest sense have been pushed back to the times of British Raj, without the right to any form of trade union action. In 1912 when railway workers struck work the British Raj took the same position that government workers have no right to strike. It is through generations of sacrifice and determination that state sector workers won the right to strike against injustice and indifference. We may be told that these negations are according to the cycle of impermanence given in Buddhism.

Politically speaking what we witness is the consolidation of Supreme Court as the political decision maker, at a time where executive presidency has become a virtual prisoner of JVP politics, and the parliament is moving towards a dead lock. It is a new kind of Bonapartism arising from judicial power. In several countries in the subcontinent we see a strong role played by the Supreme Court. Here too we see that political leaders are accused of both corruption and inability to make sensible political decisions.

However the Supreme Court decision in relation to examination boycott may create bigger problems. Correction of exam papers is not a routine job that can be easily evaluated by the commissioner of examinations. Academic judgments are as serious as judicial judgments. Both cannot be made under pressure and duress. Under pressure and unpleasant back ground judges may make partial decisions. In the case of examination work it may be worse. Best students may get bad marks while the failures get distinctions.

In any case, nobody can be sure of examination results given by a group of angry and disheartened examiners. So, it is going to be a protracted struggle in which both sides will be using open and hidden moves. Already strange things have happened. While the Supreme Court has ordered a bail of 50 000Rs for each trade union leader, money came instantly not from the oppressed trade unions or their supporters, but from a third party! So, while these leaders were threatened with imprisonment, all precautions were taken by the regime to see that no one is really imprisoned.

It is true that Mahinda regime was unwilling to give in to the teachers, as it could have a multiple effect creating waves of agitations, strikes, in the state sector. On the other hand if the exam work drags on, chaos can creep into the entire education system. However, more than the leaders of the government, the JVP leaders were scared of anarchy and the break down of the chauvinist regime they worked so hard to consolidate.

Out of the five teachers union one was dominated by the JVP elements. This union was not interested in challenging the arguments put forward against them. Obviously, the JVP in the final analysis has to defend the government. Wimal Weerawansa's pet statement is that they do not want to jump from frying pan to the fire. What else he can say, when he knows that his closest nationalist friend Dr Gunadasa Amarasekara in 1989 thanked the then defence minister Ranjan Wijeratne for eliminating Comrade Wjeweera, whom the good doctor thought a madman?

பண்டார
வன்னியனின் படை
நடந்த காடு
பணியாது ஒரு
போதும்
ஈழவள நாடு
ஒரு பேப்பர்
ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சாரங்கி
மணி - பாலா
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
சுகி - நிதி
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ஜனன் - செந்தூரன்
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்
உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# சற்று மாறுதலுக்காக. . .
# பின்வாங்குதல் அல்ல பதுங்குதல்

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

ஐரோப்பா எங்கணும் செய்மதி ஊடாக ஒன்பது வானொலிகள் இயங்குகின்றன. அவற்றில் ஐ.பி.சி, ஒரு ரேடியோ என்பன தமிழீழத் தேசிய விடுதலைப் போருக்கு இறுக்கமான ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளன. ரீ.பி.சி, இதயவீணை போன்றன தமிழின விரோதப் போக்கைக் கொண்டியங்கும் வானொலி. மற்றவை 'அப்படியும் இப்படியுமாக' இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்திய 'றோ' உளவுப்படையும், சிறீலங்கா சிங்கள இனவாத அரசும் தமிழர் விடுதலைப் போரை நசுக்குவதற்காகப் பணத்தை அள்ளி அள்ளிக் கொட்டி அமைத்த வானொலிகள் தான் மேற்கூறிய ரீ.பி.சி, இதயவீணை போன்ற வானொலிகள். வீசிய எலும்புத் துண்டுகளுக்காக நன்றாகக் குரைத்து தம் விசுவாசத்தைக் காட்டி வருகின்றன இந்த நாய்கள்.

புலம் பெயர் தமிழரின் பொருளாதார ஆதரவு தமிழர் விடுதலைப் போரை மேலும் முன்னோக்கி நகர்த்த உதவுகிறது என்பது யாவரும் அறிந்த ஒன்று. போராளிகளை எவ்விதத்திலும் எதிர்கொள்ள முடியாது திணறுகிறது சிங்கள அரசு. தமிழ்ப் போராளிகள் கொடுக்கும் ஒவ்வொரு அடியையும் வாங்கிக்கட்ட வலுவில்லாமல் துடித்துப்போய் நிற்கிறது சிங்கள அரசு. அமெரிக்கா, இந்தியா, சீனா என்று எவரிடம் ஆயுதம் வாங்கினாலும் போராளிகளின் ஓர்மத்திற்கு முன் இந்த ஆயுதங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஏனென்றால் சிங்கள கூலிப்படைகளுக்கெதிரே நிற்பது விடுதலை வேட்கை கொண்ட வலிய போர்ப்படை. போர் முனைக்குச் சென்றவர்கள் வெற்றி அன்றி வேறேதும் அறியார். தேவையேற்படின் பதுங்குவாரே ஒழிய பின்வாங்கார்.

உலகில், ஒடுக்குகின்ற எல்லா அரசுகளுக்கும் தெரிந்த ஒரு விடயம், நிரந்தர வெற்றி ஒருபோதும் தங்களுக்குக் கிடையாதென்பது. இறுதியில் நிரந்தர வெற்றி போராளிகள் பக்கமே.

நமது தேசியத் தலைவருடன் எதிர்த்துச் சமராட எத்தனை ஒடுக்குமுறை அரச அதிபர்கள் வந்துவிட்டார்கள். சிறீமாவோ, ஜே.ஆர், ராஜீவ், பிரேமதாசா, விஜயதுங்கா, சந்திரிக்கா, ரணில், மகிந்த...இன்னும் எத்தனைபேர் வர இருக்கிறார்களோ என்னவென்றால் நம் விடுதலை மூச்சை இந்த வீணர்களால் நிறுத்திவிட முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த ஒடுக்குமுறை அரசு நிகழ்த்துகின்ற அடுத்த யுத்தம் ஊடக யுத்தம். இணையத்தளம் முக்கிய ஊடகமாக இருக்க, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்னும் பிற ஊடகங்களிலூடாகவும் யுத்தம் புரிய சிறீலங்கா அரசு தீர்மானித்திருக்கிறது.

இதனூடாக புலம்பெயர் தமிழரைக் குழப்புவதே அதன் நோக்கம். சூசை, கப்பல், தமிழச்செல்வன், கே.பி என்று எத்தனை கற்பனைக் கதைகளை இவை பரப்பின.

இந்த இடத்தில் புலம் பெயர் தமிழர் நாம் செய்யக்கூடிய ஒரே ஒரு ஆக்கபூர்வமான காரியம் இப்படியான 'வதந்தி'க்களை பாராதிருப்பதே! புறங்கையால் தள்ளிவிடுவதே! இவற்றை ஒரு 'கதை'யாக எடுத்துக் காவாமல் விடுவதே சிறப்பான காரியம்.

இவ்வாறான வதந்திக்கள் சுவராஸ்யம் கூட்டி நம் காதில் வந்தடையும். கேட்கப் பயமாக இருக்கும். அப்படி நடந்திருக்குமோ என ஐமிச்சம் வரும். மன ஆறுதலுக்காக ஒருவருடன் கதைத்து ஆறுவோம் என்று இந்தக் கதைகளைப் பரப்புவோம். விடுப்பு கேட்போம், விண்ணாளம் !கதைப்போம்.

வேண்டாம், இவையெல்லாம் நமது போராட்டத்தைப் பின் தள்ளுகிற ஒன்றுதான். ஈரடி முன்னே போனால் ஓரடியாவது பின்ன கர்த்துகிற வேலைதான் இவை. நமது எதிரிக்கு மக்கள் விரோதிக்கு இது கூட ஒரு வெற்றிதான். வெல்ல விடவேண்டாம்.

நம்புவோம், நமது தலைவரை. முற்று முழுதாக நம்புவோம். அவர் எது செய்தாலும் சரியே என்று உறுதியாக நம்புவோம். விட்டுக் கொடுக்காத, விலகிப்போகாத, விடுதலையே மூச்சாகக் கொண்ட மக்கள் நலனையே கருத்தில் கொண்ட, ஒரு போரை அவர் நிகழ்த்துகின்றார். வீரம், ஓர்மம், அர்ப்பணிப்பு, இராஜதந்திரம் ஆகியன கொண்ட போராளிகளும், தளபதிகளும் அவரிடம் இருக்கின்றனர்.

ஆகையால் நம்புவோம், தலைவரை உறுதியாக நம்புவோம். அவர் செய்வன அனைத்தும் நல்லன என நம்புவோம். எவருக்கும் புரியாதன ஏதும் இருந்தால், அதற்குள்ளும் ஒரு பொருள் பொதிந்துள்ளது என நம்புவோம்.

துச்சாதனன் பாஞ்சாலியின் சேலையை உருவ, பாஞ்சாலி தன் சேலையைப் பிடித்தபடி "கண்ணா கண்ணா" என்று கத்தினாள். கூப்பிட்டக் குரலுக்கு கண்ணன் வரவில்லை. எப்போது கண்ணன் வந்தான்? இனி இயலாது என்று சேலையைப் பிடித்த கைகளை விட்டுவிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி, எப்போது கண்ணனே அபயம் என்று கத்தினாளோ அப்போதுதான் கண்ணன் காட்சி தந்தான். துச்சாதனன் உருவ, உருவக் குறையாது சேலை வந்தது.

அதுதான், அதேதான். முற்றாக மனதில் எந்த ஐமிச்சமும் இல்லாமல் தலைவரை நம்புவோம். தலைவர் கை காட்டிய தளபதிகளை நம்புவோம். போராட்டத்தை நம்புவோம். விடுதலையை வேண்டுவோம். அதுவே போராட்டத்துக்கு நாம் செய்யும் உயரிய பங்களிப்பாக அமையும்.

இந்திய இராணுவத்தை, அமைதிகாக்கும் படை என்றுதானே, அப்போது நாம் நம்பினோம். அல்ல என்றுதானே தலைவர் சொன்னார். நம்பினோமா? இல்லையே! மாலை சாத்தி அல்லவா அந்த மிருகங்களை வரவேற்றோம்! அந்த மிருகங்களால் வதைபட்ட கதைகள் எத்தனை?

எம்முன் உள்ள ஒரே பணி இது தான். வதந்திக்களைப் புறந்தள்ளுவது. எது சரி, எது திறம், எது நல்லம் என்று அவருக்குத் தெரியும் என்று நம்புவது. மற்றது முக்கியமானது: பின்வாங்கவில்லை; பதுங்குகிறார்கள் என்பதை முழுமையாக ஏற்பது. அவ்வளவுதான்.

# வாழ்க்கையின் அர்த்தம்

**இராம. கே. நாதன்**
*(ஒரு பேப்பர்)*

இருநண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடைய உரையாடல் வாழ்க்கை பற்றித் திரும்பியது. ஒருவர் சொன்னார்,

"வாழ்க்கையை சீரியஸ் ஆக எடுக்க வேண்டியதில்லை. ஏனெனில் எப்படி வாழ்ந்தாலும் கடைசியாக எல்லோரும் ஒருபிடி சாம்பலாகத்தான் போகிறார்கள்." என்று. உடனே அவரது நண்பர்,

"இது ஒரு மடைமைத்தனமான கூற்று. ஏனெனில் எல்லோருடைய முடிவும் ஒன்றாக இருந்தாலும் எல்லோருடைய வாழ்க்கையும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த ஒருவனது வாழ்க்கையும் துயரத்துடன் வாழ்ந்த ஒருவனது வாழ்க்கையும் முடிவில் ஒனறாக இருக்கலாம் ஆனால் அவர்கள் விட்டுச்செல்கிற எச்சங்கள் - பெயர், புகழ், நலன், தாக்கம் இவை வேறுபடும். ஆகையால் எப்படியும் வாழலாம் என்பது தவறு" என்று கூறினார்.

இவர்களில் யார் கூறுவது சரி? இங்கே வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்ற கேள்வி எழுகிறது. வாழ்க்கையின் அர்த்தம் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை உண்டாக்கிக்கொள்வதே! வேறு விதமாகச் சொல்வதானால் ஒவ்வொருவரும் முதலில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எல்லாவிதமான வசதிகள் இருந்தும் வாழத் தெரியாவிட்டால் அவற்றால் என்ன பயன் அப்படியானால் வாழ்வது என்றால் என்ன?

ஒரு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு மூன்று விடயங்கள் அவசியமானவை ஒரு மகிழ்வான வாழ்வு, ஒரு குறிக்கோள் உள்ள வாழ்வு, ஒரு உபயோகமுள்ள வாழ்வு.

### மகிழ்வான வாழ்வு.

வாழ்க்கையில் மேடுபள்ளங்கள் உண்டாவது இயற்கையே. சிலர் வாழ்வில் ஏற்படும் சிறுசிறு துன்பங்களையும், தடைகளையும் பெரிதுபடுத்தி தாமும் துயருற்று தம்மைச் சுற்றியுள்ள மற்றையோரையும் துயரில் ஆழ்த்துகிறார்கள்.

வெயிலில் போனால்தான் நிழலின் அருமை தெரியும். வாழ்க்கையும் அது போலத்தான். துன்பம் வரும் போது அதைத் தைரியத்துடன் எதிர்கொண்டு அதை ஒரு படிக்கல்லாக நினைத்து அதன்மேல் ஏறி நின்று அடுத்த படிக்கல்லில் காலை வைக்க முனைந்தால் தோல்விகள் துயர்தராது. துயர்வரும்போது துவளக்கூடாது. ஏனெனில் வாழ்வில் ஏற்படும் மகிழ்ச்சிகளை அநுபவிக்கமுடியாது போய்விடும்.

ஒருவன் மகிழ்ச்சியாக இருப்பானேயானால் அவனைச் சார்ந்திருப்போரும் மகிழ்ச்சியாக இருப்பர். அவனைத்தேடி நண்பர்கள் வருவர். அவனைச்சுற்றி ஒரு மகிழ்ச்சியான கூட்டம் இருந்துகொண்டிருக்கும்.

எந்த நேரமும் மகிழ்வாகவும் புன்சிரிப்புடனும் இருக்கும் ஒருவனுக்கு உடல் நோய்களும், உளநோய்களும் குறைவாகவே இருக்கும். எனவே வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது அவசியமானதாகும்.

### குறிக்கோள் உள்ள வாழ்வு

கடைசியில் எல்லோரும் ஒரு சாம்பலாகப் போகிறார்கள். ஆதலால் எப்படியும் வாழலாம் என்பது ஒரு குறிக்கோள் அற்றவாழ்வு. எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்தால், உலகில் முன்னேற்றம் கிடையாது. நாகரீகம் வளராது. மனிதர்கள் மிருகங்கள் போல் இருந்துவிடுவர்.

எனவே ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் தேவை. ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்லும்போது தான் அதை அடையும் வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான்.

எல்லோரும் ஒரே வல்லமையுடையவர்களாகப் பிறப்பதில்லை. ஆதலால் ஒவ்வொருவருடைய குறிக்கோளிலும் வேற்றுமைகள் இருக்கும்.

ஆனால் ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு குறிக்கோள் இருக்கவேண்டும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் விண்வெளிப் பிரயாணங்களும் ஒவ்வொருவரின் குறிக்கோளிலேயே தங்கியிருந்தன. ஆகையால் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் தேவையானது. ஆனால் அக்குறிக்கோள்கள் நமக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பனவாக அமையவேண்டும். பயன்தரும் குறிக்கோள்களாக அமைய வேண்டும். தீயன தவிர்ந்த குறிக்கோள்களாக இருத்தல் வேண்டும்.

### உபயோகமான வாழ்க்கை.


வாழ்க்கையென்பது தனிமனிதனுக்குப் பிரயோசனமானதாக அமைய வேண்டும். அதேநேரத்தில் மற்றையோருக்கும் பிரயோசனமானதாக இருத்தல் வேண்டும். நான் மட்டும் அனுபவித்தால் போதும். நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று எண்ணுபவனின் வாழ்க்கை பழந்தரும் ஒரு மரத்தில் எட்டாத உயரத்தில் தொங்கும் ஒரு கனியைப் போன்றதாகும். அக்கனி பழுத்தும் ஒருவருக்கும் பிரயோசனம் அற்றதாகி கடைசியில் அழுகிவிழும் நிலையை அடையும்.

எனவே வாழ்க்கை என்பது அதை அனுபவிப்பவனுக்கு உபயோகமாக இருக்கும் அதே நேரத்தில் மற்றையோருக்கும் உபயோகமாக இருத்தல் வேண்டும் வாழ்க்கையென்பது சானைக் கல்லைப் போன்றது. அதில் கத்தியைத்தீட்டவும் முடியும் மழுங்கடிக்கச் செய்யவும் முடியும்.

எமது வாழ்க்கையை வாழும் விதத்திலேயே அதன் பலன் தங்கியுள்ளது. என்றைக்கு ஒருவன் பிறர் முகத்தில் ஒரு புன்சிரிப்பை ஏற்படுத்துகிறானோ பிறரிடத்தில் தனது செய்கைகளினால் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறானோ அன்றுதான் அவனது வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் ஏற்படுகிறது.

எனவே வாழுதல் என்பது, மகிழ்ச்சியாக வாழுதல், ஒரு குறிக்கோளுடன் வாழ்தல், பிறருக்கும் தனக்கும் பிரயோசனமாக வாழ்தல் ஆகும்.

# சாத்தியம்தானா தமிழீழம்?



**வி. சபேசன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நியுயோர்க்கில் ஐக்கிய நாடுகள் சபையின் 62வது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரினை ஒட்டி விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் இறைமையை அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே விடுதலைப் புலிகளால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் 'இறைமை' பற்றி சற்று ஆராய்தல் பொருத்தமாக இருக்கும். தமிழீழம் என்கின்ற தனியரசு எவ்வாறு உருவாகும், எந்த நாடுகளும் அங்கீகரிக்காத போது அது எப்படிச் சாத்தியமாகும் போன்ற கேள்விகளும் பலரிடம் உள்ளது. இந்தக் கேள்விக்கான பதிலை புரிந்து கொள்வதற்கும் 'இறைமை' பற்றி புரிந்து கொள்வது அவசியம்

Sovereignty என்று அழைக்கப்படும் இறைமைக்கு அறிஞர்கள் பலவாறு விளக்கம் கொடுப்பார்கள். பொதுவாக ஒரு அரசு அல்லது மக்கள் தன்னுடைய நாட்டின் மீது கொண்டிருக்கும் உச்ச அதிகாரத்தையும், அந்த அதிகாரம் மற்றைய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் 'இறைமை' என்பதற்குள் அடக்குவார்கள்.

இந்த 'இறைமை' என்பது பலவிதமாக வகைப்படுத்தப்பட்டிருக்கும். இவைகளில் அனைத்து வகைகளையும் நாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

தமிழீழம் இன்றைக்கு கொண்டிருக்கும் இறைமையின் வகைகளை குறித்தும், அங்கீகாரம் பெற வேண்டிய இறைமையின் வகைகள் குறித்தும் எமது பார்வையை செலுத்துவோம்.

மக்களிடம் இறைமை இருக்கிறது என்று அரசியல் அறிஞர்கள் சொல்வார்கள். தமிழீழ மக்கள் பல முறை ஒருமித்து வழங்கிய தீர்ப்பின் மூலமும், தமிழீழத் தனியரசை உருவாக்குவதற்காய் போராடுவதற்கு ஒரு பலம் வாய்ந்த அமைப்பினை உருவாக்கியதன் மூலமும் தம்மிடம் உள்ள இறைமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

அதை விட முக்கியமாக தமிழீழத்தின் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஒரு நிழல் அரசை நடத்தி, அங்கு சட்டதிட்டங்களை உருவாக்கியிருப்பதன் மூலம் 'நிச்சயத் தன்மையுள்ள சட்ட வடிவ இறைமையை' (Defacto and De Jure Sovereignty) வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தேர்தல் மூலமோ, சட்டப்படியோ ஒரு அரசு ஆட்சிக்கு வரத் தேவையில்லை. புரட்சி, பலப் பிரயோகம் போன்ற வழிகளிலும் ஆட்சிக்கு வர முடியும். அப்படி ஒரு அரசு ஆட்சிக்கு வந்தாலும் கூட, அந்த அரசு உடனடியாகவே தனது மக்கள் மீது நிச்சயத் தன்மையுள்ள இறைமையை பெற்றுவிடுகின்றது.

இது போன்ற அரசுகளை சர்வதேசம் காலப் போக்கில் அங்கீகரித்தும் விடுகின்றன. சில அரசுகளை அனைத்து நாடுகளும் அங்கீகரிக்காது விட்டாலும், குறிப்பிட்ட காலம் வரை சகித்துக் கொண்டும் இருக்கின்றன.

பாகிஸ்தனின் அதிபர் முஸாரப் சட்ட ரீதியாகவோ, தேர்தல் மூலமோ அதிகாரத்திற்கு வந்தவர் அல்லர் ஆனால் அவருடைய அரசை சர்வதேசம் அங்கீகரித்தது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியையும் சில வருடங்கள் சர்வதேசம் சகித்துக் கொண்டு, ஒரு அரசுக்குரிய தொடர்புகளை பேணித்தான் வந்தன. இதற்கு காரணம் இவர்கள் தமது நாட்டின் மீது 'நிச்சயத் தன்மையுள்ள இறைமையைப் பெற்றுக் கொண்டதுதான்.

இதே போன்று மக்கள் புரட்சியின் மூலம் அதிகாரத்திற்கு வந்த ஈரானின் கொமெய்னி, கியுபாவின் பிடல்காஸ்ரோ போன்றோர் அமைத்த அரசுகளும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

இங்கே 'மக்கள் இறைமை' என்பதும், 'நிச்சயத் தன்மையுள்ள இறைமை' என்பதும் கருத்தில் எடுக்கப்பட்டு சர்வதேசத்தால் அங்கீகாரத்தை பெறுகின்றன.

**மக்கள் புரட்சியின் மூலம் அதிகாரத்திற்கு வந்த ஈரானின் கொமெய்னி, கியூபாவின் பிடல்காஸ்ரோ போன்றோர் அமைத்த அரசுகளும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்டன.**

தமிழீழ மக்களிடம் 'மக்கள் இறைமை' இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் 'நிச்சயத் தன்மையுள்ள இறைமை' இருக்கிறது.

இவைகளை விட இறைமையை 'உள்ளக இறைமை' (Internal Sovereignty) என்றும் 'வெளியக இறைமை' (External Sovereignty) என்றும் இரண்டாகப் பிரிப்பார்கள். 'உள்ளக இறைமை' என்பது ஒரு அரசு தன்னுடைய நிலப் பரப்பில் அனைத்துவிதமான அதிகாரங்களையும் செலுத்துகின்ற தன்மை ஆகும். ஒரு அரசினால் தன்னுடைய நிலப் பரப்பில் வாழுகின்ற மக்களை கட்டுப்படுத்த முடிகின்ற போது, அந்த அரசு 'உள்ளக இறைமை' கொண்ட அரசாகக் கருதப்படுகிறது.

'புற இறைமை' என்பது ஒரு அரசு பிற நாடுகளுடன் அரசுரீதியான தொடர்புகளை பேணுவது, தூதரக உறவுகளைக் கொண்டிருப்பது, பிற நாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்வது போன்ற விடயங்களைக் குறிக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிர்வாகப் பகுதிகளில் 'உள்ளக இறைமையை' கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்றைய நாடுகளுடன் அரசுரீதியான உறவுகளைப் பேணவோ, உடன்படிக்கை செய்யவோ அனுமதி அளிக்கின்ற 'வெளியக இறைமை' அற்றவர்களாக இருக்கிறார்கள்.

'மக்கள் இறைமை' பெற்றுள்ள தமிழீழ மக்கள் 'வெளியக இறைமை' பெறுவதற்கும் உரிமை உள்ளவர்களாக இருந்தும், இன்றுவரை சர்வதேசம் தமிழீழ மக்களின் முற்றுமுழுதான இறைமையை அங்கீகரிக்கவில்லை.

இங்கே ஒரு கேள்வி வருகிறது. சர்வதேசம் விடுதலைப் புலிகள் நடத்துகின்ற அரசின் 'நிச்சயத் தன்மையுள்ள சட்ட வடிவ இறைமையையும்' 'உள்ளக இறைமையையும்' அங்கீகரித்துள்ளதா என்பதே அந்தக் கேள்வி. இதற்கு பதில் 'ஆம்' என்பதுதான்.

இந்த இறைமை வகைகளை விடுதலைப் புலிகளின் நிர்வாகம் கொண்டுள்ளதை அங்கீகரித்ததனாலேயே 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' உருவானது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் அவர்களின் ஆளுமையை அங்கீகரித்தது. விடுதலைப் புலிகளின் படையணிகள், காவல்துறை, நீதிநிர்வாகம் போன்றவை செயற்படுவதை ஏற்றுக்கொண்டது. விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியல் சிறிலங்காவின் சட்டவடிவச் செயற்பாடுகளை நடைபெறாது என்பதை ஏற்றுக் கொண்டது. உதாரணமாக சிறிலங்கா அரசின் காவல்துறை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வது ஒப்பந்த மீறலாக சொல்லப்பட்டது.

இவ்வாறு சர்வதேசம் விடுதலைப் புலிகளின் நிர்வாக அரசை 'நிச்சயத்தன்மையுள்ள சட்ட வடிவ இறைமை' உள்ளதாகவும், 'உள்ளக இறைமை' உள்ளதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அங்கீகரித்தது.

போர் நடைபெற்று வருகின்ற இன்றைய மோசமான நிலையிலும் விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவிக்காது இருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். தமிழீழ மக்களின் இறைமையை சர்வதேசம் அங்கீகரிப்பதில் ஏற்பட்ட ஒரு சாதகமான திருப்பமாக விடுதலைப் புலிகள் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பார்க்கிறார்கள்.

இந்த இடத்தில் ஆழிப் பேரலை பொதுக்கட்டமைப்பு பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். தமிழீழ அரசு தன்னுடைய 'வெளியக இறைமையை' வெளிப்படுத்துவதன் ஒரு படியாக இந்த பொதுக்கட்டமைப்பு அமைந்திருக்கும். ஆனால் சிறிலங்கா அரசு நீதிமன்றம் மூலம் அதை தடுத்து விட்டது.

தமிழீழம் 'வெளியக இறைமை' நோக்கி பயணிப்பதன் ஆரம்பமாக பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் அமைந்து விடும் என்று சிறிலங்கா அரசு கருதியதானேலேயே, சர்வதேச அழுத்தங்களையும் மீறி நீதிமன்றம் மூலம் பொதுக்கட்டமைப்பு உருவாகாமல் தடுத்தது.

ஆகவேபுரிந்துணர்வுஒப்பந்தமாக இருக்கட்டும், பொதுக்கட்டமைப்பாக இருக்கட்டும், விடுதலைப் புலிகள் பல விட்டுக் கொடுப்புக்களோடு இவைகளுக்கு சம்மதிப்பதை, தமிழீழத்தின் முற்றுமுழுதான இறைமையை சர்வதேசம் அங்கீகரிக்கச் செய்வதற்கான போராட்டத்தின் பகுதிகளாகவே பார்க்க வேண்டும்.

விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் கொண்டுள்ள இறைமையை பார்க்கின்ற அதே நேரம், மறுபக்கமாக சிறிலங்கா அரசின் இறைமையைப் பார்ப்போமாக இருந்தால், சிறிலங்கா அரசு தன்னுடைய பகுதி என்று சொல்கின்ற நிலப் பரப்புகளில் 'இறைமை' இழந்த நிலையில் இருப்பதைக் காணலாம்.

தமிழீழத்தில் சிறிலங்கா அரசு 'மக்கள் இறைமையை' கொண்டிருக்கவில்லை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 'நிச்சயத் தன்மையுள்ள சட்ட வடிவ இறைமையை' கொண்டிருக்கவில்லை, 'உள்ளக இறைமையை' கொண்டிருக்கவில்லை. இவைகளை எல்லாம் சிறிலங்கா அரசு இழந்து விட்டது.

தமிழீழம் தன்னுடைய இறைமையை காப்பதற்கும், சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பதற்கும் போராடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழீழத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் நிலைநாட்டப்பட்டுள்ள 'நிச்சயத்தன்மையுள்ள சட்ட வடிவ இறைமை' மற்றும் 'உள்ளக இறைமை' ஆகியன தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நிலைநாட்டப்படுகின்ற போது, தமிழீழத்தின் முற்றுமுழுதான இறைமையை சர்வதேசம் அங்கீகரிக்கும். 'மக்கள் இறைமை' மூலம் இது நிலைநாட்டப்படுவதால், சர்வதேசம் தமிழீழத்தை அங்கீகரிப்பதற்கு சட்டரீதியான காரணங்கள் முற்றுமுழுதாக இருக்கின்றன.

ஆகவே புலம்பெயர்ந்துள்ள தமிழர்களாகிய நாம் தமிழீழம் உருவாவது குறித்த தேவையற்ற சந்தேகங்களை விட்டுவிட்டு, தமிழீழ மக்கள் தமிழீழப்பிரதேசம் முழுவதையும் நிர்வாகிப்பதற்கு எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

**எம்மை நாமே**
**ஆள்வதனை**
**எவர்தான்**
**தடுக்கத்**
**துணிவாரோ?**

ஒரு பேப்பர்
ORU PAPER

# மகிந்தாவின் கோட்டுக்குள் இருந்த மங்களா ரணிலின் கூட்டுக்குள்

உமா மகாலிங்கம்
( ஒரு பேப்பருக்காக )

இணைத்தலைமை நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் எதிர்பார்த்துக்காத்திருக்கும் இனப் பிரச்சனைக்கான தீர்வு யோசனைகளை, சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள், ஐக்கியநாடுகள் சபையின் கூட்டத்தொடரில் இம்மாதம் வெளியிடவிருக்கிறார்.

65 பரிவாரங்களுடன் அங்கு செல்லும் ஜனாதிபதி சமீபகாலமாக சிறீலங்கா அரசாங்கத்திற்கெதிராக முடுக்கி விடப்பட்டுள்ள பிரசாரங்களை முறியடிக்கும் நோக்கமாகவே அவரது முயற்சி இருக்கப்போவது தெளிவு.

அதேசமயம் எதுவித பிரயத்தனமுமின்றி, ஆர்பாட்டமுமின்றி, ஈழத் தமிழர்களின் பிரச்சினையை அம்மகாநாட்டில் அங்குரார்ப்பணம் செய்து வைக்க அரசின் இந்நடவடிக்கைகள் மறைமுகமாக உதவி புரிவதை மதிநுட்பம் கொண்ட மக்கள் அறியாமல் இல்லை.

இனப்பிரச்சனைக்கான தீர்வு யோசனைகளை சமர்ப்பிக்கக்கூடிய அரசியல் கட்சிகளில் பிரதான கட்சிகளான ஐ.தே.க.வும், ஜே.வி.பியும் ஏற்கனவே தமது புறக்கணிப்பைத் தெரிவித்த நிலைமையில், ஒருமித்த இணக்கப்பாட்டை, ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் தீர்வு யோசனைகளில் எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

இதைவிட பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பை புறந்தள்ளியே சமர்ப்பிக்கப்படவிருக்கும் தீர்வு யோசனைகள் ஒரு கண் துடைப்பு நாடகமென்பதில் சந்தேகமில்லை.

60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை ஏமாற்றிய சிங்களக் கட்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையை ஏமாற்றுவது பெரும் கஷ்டமா?

எனினும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆக்கபூர்வமான கண்டனங்களுக்கு மகிந்தாவின் பதில் எப்படி அமையும் என்பதை அறிய ஆய்வாளர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்திய பெருமைக்கும், சி.ல.சு. கட்சியை அரசுபதவியில் அமர்த்திய பிரச்சாரத்துக்கும் அதிக உரிமை கோரும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள், வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கெதிராக நாடு நாடாகச் சென்று அவிழ்த்துவிட்ட பொய்ப்பிரச்சாரங்களை, தமிழ் மக்கள் இன்னமும் மறந்து விடவில்லை.

அன்று மகிந்தாவின் கோட்டுக்குள் இருந்த மங்கள சமரவீர இன்று ரணிலின் கூட்டுக்குள் அடைபட்டது எதனால்.? சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

தான் தலைமை வகித்த பாரம்பரியமிக்க ஐ.தே. கட்சிக்குள் நெடுங்காலம் குடிகொண்ட, பலம் வாய்ந்த சகாக்களையே தனது பிடிக்குள் வைத்துக்கொள்ள வலிமைகுன்றிய ரணில் விக்கிரமசிங்க அவர்கள், மங்கள சமரவீர போன்ற எதிர்த்தரப்பு கொள்கையுடையவர்களுடன் எவ்வளவு காலம் நட்பு வைத்திருக்க முடியுமோ யார் அறிவர்.?

பொம்மலாட்டப் பாணியில் இந்தியாவின் வல்லரசு ஆதிக்கம் இலங்கை அரசியலில் உள்வாங்கப்படுவது வெளிப்படையாகத் தெரியாது போனாலும் மறைமுகமாகக் கவரப்படுவதை அரசியல் நோக்கர் அறிவர்.

வங்காள விரிகுடாவில் முடிந்துபோன யுத்தப் பயிற்சி முகாமில், மிக அருகில் இருக்கும் இலங்கையும் பாகிஸ்தானும் இணைந்து கொள்ள முடியாமல் போன காரணம் எதுவாகவிருக்கும். இக்கூட்டுப்பயிற்சியின் நோக்கங்களில் ஒன்றான, பயங்கரவாத நடவடிக்கைக்கெதிராகக் கடைப்பிடிக்கத் தேவையான பயிற்சி எனக்கூறப்பட்டாலும், அதிகளவு அக்கறை கொண்ட இலங்கையும் பாகிஸ்தானும் தவிர்க்கப்பட்டதின் காரணத்தை அறிய ஆய்வாளர்கள் தேடுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை இந்தியாவின் சிறீலங்காத்தூதுவர் சமீபத்தில் சந்தித்தமையும், அதைத் தொடர்ந்து அவருடைய இந்தியாவிற்கான திடீர் விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையும், இலங்கை அரசியலில் பரபரக்கும் செய்திகள்.

பதவியில் இல்லாத, பல் பிடுங்கப்பட்ட பாம்பு போன்ற ஒரு அரசியல் பிரமுகரை இந்தியா புதுடெல்லிக்கு அழைப்பது வெறும் குசலம் விசாரிப்பதற்கென யாராவது கூறினால் யார் காதில் பூ? எதற்கும் மகிந்தாவின் கொம்பனி ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக, ஏ9 பாதை மூடப்பட்ட பின்னால், அத்தியாவசிய உணவுத் தேவைக்கும், மருந்துகளின் தட்டுப்பாட்டுக்கும் தாங்கொணாத இன்னல்களை அனுவிக்கும் யாழ்ப்பாண மக்களின் உடனடித் தேவைக்கு உதவுமுகமாக, தமிழக மக்கள் வீடுவீடாகச் சென்று சேகரித்த உதவிப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்கமூலம் அனுப்பி வைக்க எடுத்த நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் அனுமதிக்கத் தவறியது.

சேகரிக்கப்பட்ட கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த பொருட்கள் வீணாகிப் போகாமல், தேவைப்படும் மக்களைச் சென்றடைய ஈழத் தமிழ் விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்பின் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் இம்மாதம் 12ம் திகதி காலை 10.00 மணியளவில் படகுகள் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடக்கப் பயணமாக, கடந்த 7ம் திகதி முதல் தமிழகத்திலிருந்து இரு பிரிவுகளாக, ஒன்று இராமேஸ்வரம் கடற்கரைக்கும், மற்றையது நாகப்பட்டினத்துறைக்கும் பயணம் தொடங்கியது. இப்பயணத்தின் முடிவு எதிர்பார்த்ததுபோல இந்தியப் பாதுகாப்புத் துறையினரால் கடற்கரையிலேயே தடுக்கப்பட்டது

தன்னுடைய நியாயமான மனிதாபிமானக் கோரிக்கையை நிறைவேற்றும்படி கோரி நெடுமாறன் ஐயா அவர்கள் தொடர்ந்த உண்ணாவிரதம் முதல்வர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று கைவிடப்பட்டுள்ளது

இதன்மூலம் நெடுமாறன் ஐயாவினால் தொடங்கப்பட்ட பயணமும் அதனைத் தொடர்ந்த உண்ணாவிரதமும் முற்று முழுதாக வீண் போய்விடவில்லை

தன்னால் வழங்கப்பட்ட உத்தரவாதம் தொடர்பாக முதல்வர் கருணாநிதி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.



வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......!
அழையுங்கள் கரன் 07879683739 / 02089234013
- Mortgages
- Re- Mortgages
- Mortgages for European Residents
- Secured Loan
- Commercial Loan

வீடு வாங்குவதற்கு குறைந்த முதலீட்டோடு Mortgage செய்து கொடுத்தல்
குறைந்த வட்டி வீகிதத்தோடு கடன் வசதி செய்து கொடுத்தல் மற்றும்
வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இலண்டனில் வீடு வாங்க ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
TAJ PROPERTY SERVICE
97 ST JOHNS ROAD,
WALTHAMSTOW, E17 4JH.

"இது உங்களுடையது தானா?
ஸ்பெல்லிங் மிஸ்டேக் இருக்கா?"
உங்கள் விபரங்களை நீங்களே சரி பார்த்துக் கொள்ளவும்
www.orudirectory.com

# நீலன், லக்ஸ்மன், கேதீஸ்... புத்திஜீவிகளா? புறம்போக்குகளா?

எழுபரிதி
*( ஒரு பேப்பருக்காக )*

முன்னர் வீரகேசரி பத்திரிகையில் செய்தியாளராய்பணிபுரிந்த டேவிட் ஜெயராஜ் என்பவர் தற்போது ரொறொன்ரோ நகரில் வசிக்கிறார். தொலைபேசி வாயிலாகவும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் கிடைக்கப் பெறும் செய்திகளை வைத்துக் கொண்டு ஏற்கனவே தான் சேர்த்து வைத்திருக்கும் சில தகவல்களையும் சேர்த்து இலங்கைத் தீவில் நடைபெறும் விவகாரங்கள் பற்றி அருகிலிருந்து பார்த்தது மாதிரி ஆங்கிலத்தில் வாராந்தம் எழுதித் தள்ளுகிறார்.

சரித்திரக் குறிப்புகள் சிலவற்றை வைத்துக் கொண்டு கல்கி கிருஸ்ணமூர்த்தி, சாண்டில்யன் போன்றோர் எப்படி சரித்திர நாவல்கள் படைத்தார்களோ அதேபோன்று இவரது ஆக்கங்களும் விடயம் தெரியாது படிப்பவர்களுக்குச் சுவையாக இருக்கும்.

பெரும்பாலும் ஈழத்தமிழரல்லாத வாசகர்களுக்காக எழுதும் ஜெயராஜ் செய்தியின் உண்மைத் தன்மை பற்றி அதிகம் அக்கறை கொள்ளாமல் அடையாளங் காணப்பட்ட சில தரப்பினரை திருப்பதிப்படுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்.

அவரது கட்டுரை தனிநபர் பற்றியதாக இருக்கும் போது சம்பந்தப்பட்டவரது குலம் கோத்திரம் தகப்பனாரது தொழில் என பிற்போக்குத்தனமான விடயங்களை ஆங்கில Tabloid களின் பாணியில் விபரித்து விடுப்புப் பிடுங்க முயல்பவர்களுக்கு தீனி போடுகிறார்.

இப்பொழுது நான் சிலாகிக்க விரும்புவது ஜெயராஜ் பற்றி அல்ல. ஈபிஆர்எல்எப் அமைப்பின் முக்கியஸ்தராகவிருந்த, கடந்த வருடம் கொழும்பில் கொல்லப்பட்ட திரு கேதீஸ்வரன் லோகநாதன் பற்றி ஜெயராஜ் அண்மையில் எழுதிய ஒரு கட்டுரை பற்றியது.

இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களை பரவவிடுவது தொடர்பானது. 'ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் உரிமைகளுக்காக போராடியவர்' (Ketheesh: Champion of Tamil Rights in United Lanka) என்ற தலைப்பில் கேதீஸ்வரனை போற்றுவதாக இந்த கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

இது போன்ற கட்டுரைகளை முன்பும் ஜெயராஜ் போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள். சாராம்சம் இதுதான். மேலைத்தேச நாடுகளில் உயர்கல்வி கற்ற மேல்தட்டைச் சேர்ந்த தமிழ் கல்வியாளர்கள் விடுதலைப்புலிகளால் வேட்டையாடப்படுவதே தமிழ் மக்களின் இன்றய அவல நிலைக்கு காரணமாக இருக்கிறது.

நீலன் திருச்செல்வம், லக்ஸ்மன் கதிர்காமர், போன்றவர்களின் பட்டியலில் கேதீஸ் லோகநாதனும் சேர்க்கப்பட்டிருக்கிறார். முன்னையவர்கள் போன்று பிரசித்தி பெற்ற ஹவார்ட், ஒக்ஸ்போர்ட் பட்டதாரியாக இல்லாதவிடத்தும் சென்னை லயோலா கல்லூரியில் பட்டப் படிப்பை படித்த கேதீஸ் விடுதலைப்புலிகளை எதிர்த்தவர் என்பதால் பெரும் கல்வியாளராய் ஜெயராஜ் போன்றவர்களால் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறார். (கேதீஸ் நெதர்லாந்து ஹேக் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு அபிவிருத்தித்துறை பற்றி கற்றிருக்கிறாராம்.)

**தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களது முனைவர் பட்டம் பற்றி அறிய ரத்னஜீவன்கூல் பட்டபாடு அவர் இன்னொரு முனைவர் பட்டத்தினை பெறுவதற்கு தேவையான அளவு உழைப்பாக இருந்தது.**

ஜெயராஜ் மட்டுமல்ல அமெரிக்காவில் வாழும் அகிலன் கதிர்காமர், வாசுகி நேசையா போன்றோரும் மேற்குலகை திருப்திப்படுத்தும் வகையில் இந்தப் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இனந் தெரியாதவர்களால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வம், லக்ஸ்மன் கதிர்காமர், கேதீஸ்வரன் மட்டுமல்ல ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதியாகவிருக்கும் ராதிகா குமாரசாமி, பாக்கியசோதி சரவணமுத்து போன்றவர்களும் ஈழத் தமிழர்கள் மத்தியிலுள்ள விரல் விட்டு எண்ணப்படக்கூடிய கல்வியாளர்களாக இந்த எழுத்தாளர்களால் சித்தரிக்கப்படுகிறார்கள்.

மற்றய தமிழர்கள் எத்தனை உயர்கல்வித் தகமை உள்ளவர்களாக இருப்பினும் தமிழ் தேசியத்தை பற்றி நிற்பவர்களாக இருப்பின் அவர்கள் தேசியவாத பாசிஸ்டுகளாக (Ethno facists) இவர்களால் வகைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் கல்வித் தகைமைகள் தரம் குறைக்கப்படுகின்றன.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களது முனைவர் பட்டம் பற்றி அறிய ரத்னஜீவன் கூல் பட்டபாடு அவர் இன்னொரு முனைவர் பட்டத்தினை பெறுவதற்கு தேவையான அளவு உழைப்பாக இருந்தது.

இத்தனைக்கும் தமிழ் மக்களின் நேசிப்பினை பாலசிங்கம் பெற்றது அவரது பட்டங்களால் அல்ல என்பது இவர்களுக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை.

மேற்குறிப்பிட்ட கல்வியாளர்களிடத்தில் ஒரு பொதுமைப்பாடு உள்ளது. இவர்கள் அனைவரும் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த அனுபவமோ அடிமட்டத்தில் உள்ள மக்களுடன் பழகிய அனுபவமோ இவர்களுக்கு கிடையாது.

இவர்களில் சிலருக்கு தமிழில் உரையாடவே தெரியாது. இருப்பினும் சிங்கள மேல்வகுப்பினருடன் உறவு வைத்திருந்தவர்கள் என்பதனால் சிறிலங்காவின் ஆங்கில ஊடகங்களும், இந்திய மேல்தட்டினர் குறிப்பாக பிராமணிய கல்வியாளர்கள், ஊடகவியலாளர்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்கள் என்பதனால் இந்திய ஊடகங்களும், தங்களது நலனை பாதுகாக்க கூடியவர்கள் என்ற வகையில் மேற்கத்தைய ஊடகங்களும் இவர்களை உயர்த்திப் பிடிக்கின்றன.

நீலன் இறந்தபோது பிரித்தானிய கார்டியன் பத்திரிகையில் இரங்கற் கட்டுரை எழுதிய மைல்ஸ் லற்வினப் என்பவர் அண்மைக் காலத்தில் எனது நண்பரானார்.

நீலன் சாதாரண தமிழ் மக்களுடன் தொடர்புகளை வைத்திருக்காத மக்கள் ஆதரவற்ற ஒருவர் என நான் அவரைப்பற்றி குறிப்பிட்ட போது மைல்ஸ்க்கு இத்தகவல் நம்ப முடியாததாக இருந்தது. (நீலன் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட Minority rights group என்ற அரசு-சாரா அமைப்பின் தலைவராக இருந்தபோது மைல்ஸ் அதன் பணிப்பாளராக கடமயாற்றினார்.)

**நீலன் இறந்தபோது பிரித்தானிய கார்டியன் பத்திரிகையில் இரங்கற் கட்டுரை எழுதிய மைல்ஸ் லற்வினப் என்பவர் அண்மைக் காலத்தில் எனது நண்பரானார்.**

நீலன், ராதிகா ஆகியோர் இயக்குனர்களாக இருந்த கொழும்பில் இயங்கும் International Centre for Ethnic Studies, (ICES) என்ற அமைப்பிலும் பாக்கியசோதி சரவணமுத்து இயக்குனராய் இருக்கும் Centre for Policy Alternatives(CPA) என்ற அமைப்பிலும் கேதீஸ் பணிபுரிந்திருக்கிறார்.

இவை வெளிநாட்டு நிதி உதவியில் இயங்கும் நிறுவனங்கள். மேலைத்தேச 'சனநாயகத்தை' அது தேய்வடைந்துள்ள மூன்றாம் உலக மக்களுக்கு கற்றுத்தர இந்த நிறுவனங்களுக்கு பாரிய நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இவற்றினை கொண்டு உலகம் சுற்றி கருத்தரங்களில் கலந்து கொள்ளுதல், அறிக்கைகள் வெளியிடுதல் என சுகமாகக் காலம் கழிக்கும் இவர்கள்தான் தமது மக்களின் நலனில் அக்கறை கொண்ட மிதவாதிகளாக மதிக்கப்படுகிறார்கள்.

பதிலுக்கு மேற்கத்தைய அரசுகள் இவர்களின் தகவல்களைக் கொண்டே அரசியல் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

இவர்களது அறிக்கைகள் நாட்டின் அரசியல் உறுதிநிலை, வெளிநாட்டு முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் போன்ற தகவல்களை மேற்குலக கொள்கை வகுப்பாளர்களுக்கு தெரிவிக்கிறதே தவிர இலங்கைத்தீவின் தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டுக்கு இதுவரை எந்தத் தீர்வையும் தரவில்லை.

**தமிழர்கள் எத்தனை உயர்கல்வித் தகமை உள்ளவர்களாக இருப்பினும் தமிழ் தேசியத்தை பற்றி நிற்பவர்களாக இருப்பின் அவர்கள் தேசியவாத பாசிஸ்டுகளாக வகைப்படுத்தப்படுகிறார்கள்.**

உண்மையில் இந்த கல்வியாளர்கள் சுயநலத்திற்காக தமது இனத்தின் நலனை ஏன் தமது சுயமரியதையையே விற்று வாழ்கிறர்கள். நீலன் தலைசிறந்த அரசியல் சட்ட வல்லுனராக இருந்திருக்கலாம் ஆனால் அவரது ஆற்றல் சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு உதவியதே தவிர தமிழ்மக்களுக்கு உதவவில்லை. சந்திரிகாவின் ஆலோசகராக இருந்த நீலன் அவரது சமாதானத்துக்கான யுத்தத்துக்கு ஆதரவு செலுத்தி வந்தார்.

வெறுமனே கல்வித் தகமைகளும் சான்றிதழ்களும் ஒரு இனத்தின் விடுதலைக்கு உதவப் போவதில்லை என்பதனை ஈழத்தமிழ் மக்கள் உணர்ந்திருந்தமையால் இவர்கள் கொல்லப்பட்டபோதுகூட பெரிதாக அனுதாப அலை வீசவில்லை.

சமூகவியல், வெளிநாட்டு அபிவிருத்தி, அரசியற் சட்டம் போன்ற துறைகளில் கல்வி பயின்றவர்களே மேற்குறிப்பிட்ட கல்வியாளர்கள். ஏனைய துறைகளில் சாதனை படைத்தவர்கள் பொது விடயங்களில் ஈடுபடுவதில்லை என்பதால் அவர்கள் பற்றி ஊடகங்களும் அரசியல் வாதிகளும் கண்டு கொள்வதில்லை.

இன்று புலம் பெயர்ந்துள்ள நாடுகளில் வளர்ந்து வரும் நமது இளைய தலைமுறையினர் மேற்கண்ட துறைகளிலும் நாட்டம் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்தின் ரஸ்ஸல் கல்லூரிகளிலும், அவுஸ்திரேலிய, வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உள்ள முன்னணி கல்விநிறுவனங்களிலும் கல்வி கற்கும் இந்த இளையவர்கள் முன்னையவர்களை விஞ்சும் வண்ணம் கல்வியாளர்களாய் திகழ்வார்கள் என்பதனையும் இந்த இளையவர்கள் தங்கள் தன்மானத்தை இழந்து சமரசம் செய்ய தயாராய் இருக்க மாட்டார்கள் என்பதனையும் உறுதியாக நம்பலாம்.

*வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.*
*ஒரு பேப்பர் அழிக்கவும் விளம்பரம் வேண்டும்.*
*ஒரு பேப்பர்*



INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**

வாசகர் கடிதம்

# தமிழன் இல்லா நாடில்லை

யூலை 19ம் திகதிய ஒரு பேப்பரில் ஆச்சியின் அட்டைவணில் ஸ்கொட்லாந்தில் கூட தமிழ்ப்பாடசாலை நடக்கும் அளவிற்கு... என்று பெருமையாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அதை வாசிக்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சியோடு ஸ்கொட்லாந்தில் உள்ள கிளாஸ்க்கோவில் சில வருடங்களாக வசிக்கின்ற வகையில், சில விடயங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

கிளாஸ்க்கோவில் மட்டும் சுமார் 90 இலங்கைத் தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன என்ற விடயம் உங்களை ஆச்சரியப்படுத்தும். கிளாஸ்க்கோவை விட அபடின், எடின்பரோ என்று மேலும் பல இடங்களிலும் தமிழர்கள் இங்கு பரந்து வாழ்கின்றார்கள்.

எனவே கிளாஸ்க்கோவிலில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சைவ மக்கள் ஒன்று கூடி 2005ல் முதலில் ஒரு சைவக் கோவில் இல்லாத குறையைப் போக்க ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயத்தை ஆரம்பித்தனர்.

பின்பு காலத்தின் தேவைக்கேற்ப சமூகப்பணிகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளதால், ஒன்று பட்ட இலங்கைத் தமிழ் மக்களால் ஸ்ரீ மங்கள விநாயகர் சமூக நிலையமாகி, எமது வருங்காலச் சந்ததியினர் எமது மொழி, இனம், கலாசாரப் பண்புகளை அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக தமிழ் வகுப்புகள், சமய வகுப்புகள், பரத நாட்டிய வகுப்புகள், கராட்டி வகுப்புகள், கலாச்சார விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என்று நடாத்தப்பட்டு வருகின்றன.

இப்படியான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு வந்ததன் பிரதான நோக்கம், எமது இளஞ் சந்ததியினருக்கு தமிழ்க் கலாசாரத்தை அறியப் படுத்துவதும், அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு தலைமுறை இடைவெளி வந்து விடக்கூடாது என்பதற்காகவும் ஆகும்.

வீட்டில் தமிழ் பேசாத பெற்றோர், தமிழ் பேசத் தெரியாத பிள்ளைகளை உருவாக்குகிறார்கள். தமிழ் தெரியாத தமிழர்கள் என்ற இனம் ஒன்று ஏற்கனவே உருவாகிவிட்டது.

நாங்கள் சிறுவயதில் தமிழ் படிக்க ஆரம்பிக்கும் போதே ஆத்திசூடி போன்ற நல்ல பண்புகளை இலகுவாகக் கூறுவனவற்றைத் தெரிந்து கொண்டோம்.

இங்கே நீண்ட நேரம் வேலைக்குப் போகும் பெற்றோர் களும், படிப்பு இல்லையென்றால் கணணி Play station என பல்வேறுபட்ட விளையாட்டுகளில் மூழ்கி இருக்கும் பிள்ளைகளும் என பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் தொடர்பாடல் குறைந்து வருகின்றது.

எனவே நல்லது, கெட்டது, அறிவுரை, எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்று எதையும் பின்பு சொல்ல முடியாமல் போகின்றது.

சுமார் 12 அல்லது 14 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்குத்தான் நாம் அறிவுரை ஏதும் சொல்லக் கூடியதாக இருக்கும் என்ற காலம் வந்து விட்டது. இதற்குக் காரணம் மாறுபட்ட கலாசாரத்தில் அவர்கள் வாழ்வதுமாகும்.

இதை மாற்ற முயற்சிக்க வேண்டுமானால் ஒவ்வொரு பெற்றோரும் நல்ல கருத்துக்களை சிறுவயதில் இருந்தே பிள்ளைகளுடன் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

தங்கள் தங்கள் சமயத்தில் உள்ள விடயங்களை பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அனைத்து மதங்களும் மனிதனை நல்வழிப்படுத்த உருவாகியவைதானே.

-ஆதி

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

# றிச்ரர் என்றால் என்ன?

எப்போதாவது வானொலிகளையும் பத்திரிகைகளையும் அச்சப்படவைத்த புவிநடுக்கம் என்ற சொல் தற்போது அடிக்கடி உச்சரிக்கப்படுகின்ற சொல்லாக மாறி விட்டது. புவி நடுக்கம் என்ற சொல்லுடன் சேர்த்தே றிச்ரர் (Richter) என்ற சொல்லும் அடிக்கடி உச்சரிக்கப்பட்டு வருகின்றது.

சரி றிச்ரர் என்றால் என்ன? வெப்பநிலையை செல்சியசிலும் மழை வீழ்ச்சியை மில்லி மீற்றரிலும் அளவிடுவதைப் போல புவிநடுக்கத்தை அளவிடப் பயன்படும் அலகே றிச்ரர் ஆகும். 1935ம் ஆண்டில் Calofornia Institute of Technology அமைபபைச் சேர்ந்த Charles Richter எனபவர் Beno Gutenberg மற்றும் சிலருடன் சேர்ந்து இந்த அலகினை கண்டுபிடித்தார்.

அடுத்ததாக றிச்ரர் அலகின் படி புவிநடுக்கத்தின் அளவு எப்படி உணரப்படும் என்று பார்ப்போம்

| றிச்ரர் அளவு | ஏறபடுத்தும் தாக்கம் |
|---|---|
| 2.0 வை விடக் குறைவு | உணரப்படுவதில்லை |
| 2.0 – 2.9 | பெரிதாக உணரப்படுவதில்லை |
| 3.0 – 3.9 | மிகவும் மெதுவாக உணரப்படும். பாதிப்பு இல்லை |
| 4.0 –4.9 | உணரப்படும் ஆனால் சேதங்கள் ஏற்படுவதில்லை |
| 5.0 –5.9 | சரியாகக் கட்டப்படாத கட்டடங்களில் பெரிய சேதத்தையும் பலமான கட்டடங்களில் சிறிய சேதத்தையும் எற்படுத்தக் கூடும் |
| 6.0 – 6.9 | 100 மைல் சுற்றுவட்டாரத்தில் பாரிய சேதங்களை எற்படுத்தக் கூடியது |
| 7.0 – 7.9 | மிகப் பெரும் சேதங்களையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியது |
| 8.0 – 8.9 | பல மைல் தூரத்திற்கு பெரும் சேதங்களையும் பெருத்த உயிரிழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியது |
| 9.0 – 9.9 | பல ஆயிரம் மைல்களுக்குப் பெரும் சேதங்களையும் பாரிய உயிரிழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியது |
| 10.0+ | இதுவரையில் இடம்பெறவில்லை |

10ம் ஆண்டாக Greenford நகர மண்டபத்தில் ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்

இளைய கானக்குயில் 2007




டிக்கற்றுகள் 20ம் திகதி மாலை 5 மணிமுதல் மண்டப வாயிலில் வாங்கலாம்.

Iynkaran International
Tharany Jewelers
Air Lanka Travels
London Baba Suresh
Veokay Autos
Ratna & Co Solicitor
Rasam Gayathri Silks
Saraswathy Bavan
Prime U.K. Estate Agent
Lucky Windows
Vaishna Super Food

ஆகியோர் ஆதரவில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் 10 சின்னஞ் சிறிசுகளும் 10 இளைஞர், யுவதிகளும் போட்டியாளர்களாகக் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

ஊடக அனுசரனை
DEEPAM TV

ஈழத்திருநாட்டிலிருந்து எமது பெற்றோர் புலம் பெயர்ந்து வந்தாலும், எங்கள் உயிரான தமிழை நாம் மறக்கவில்லை. எமக்கு தமிழ்ப் பாடல் பாட மேடை வழங்கி லண்டனில் முன்னனி இசைக்குழுவான "சித்ராலயா இசைக் குழுவினரின்" பின்னனி இசை வழங்கி, ஒலி அமைப்பில் முதன்மையானவர்களான Sooriya Sound இன் ஒலி வழங்கி, 10 ஆண்டுகளாக உற்சாகப்படுத்தும் கானக்குயில் அமைப்பாளர்களின் கானக்குயில் நிகழ்ச்சிக்கு வருகை தந்தது போல் 20.10.2007 Greenford நகரமண்டபம் வருகை தந்து எம்மை உற்சாகப்படுத்துங்கள் என அன்போடு அழைக்கின்றோம், என்று குரல் எழுப்புகிறார்கள் இந்த சின்னஞ் சிறிசுகள்.

ரசிகர்களால் தெரிவு செய்யப்பட்ட கடந்த ஆண்டுகளின் பால, இளைய, கானக்குயில்களின் சிறப்புப் பாடல்களும் இடம் பெறுகின்றது.

OCTOBER
20
சனிக்கிழமை
மாலை 6 மணி

தொடர்புகட்கு
020 8390 5823

# சமயப் பணியில் சைவ முன்னேற்றச் சங்கம்

கடந்த 30 வருடங்களாக பல சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகின்ற சைவ முன்னேற்றச் சங்கம் தன்னுடைய முப்பதாவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் அக்டோபர் ஆறாம் திகதி கொண்டாடுகிறது.

இந்த நேரத்தில் சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றி வரும் பணிகள் குறித்தும் எதிர்காலத்தில் ஆற்ற இருக்கும் பணிகள் குறித்தும் அறிந்து கொள்வதற்காக சங்கத்தின் பொருளாளரும் அறங்காவலர்களில் ஒருவருமான திரு. வ.இ. இராமநாதன் அவர்களைச் சந்தித்தோம்

-ஆ-ர்

*சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆரம்பம் பற்றி...*

70ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மிகக் குறைவான இலங்கைத் தமிழர்களே இங்கு வசித்தோம். அப்போது ஆலயங்கள் எதுவும் இங்கு இருக்கவில்லை. இதனால் எமது குழந்தைகளுக்கு சமய அறிவைப் புகட்டுவதற்கோ தமிழ்க் கல்வியை ஊட்டுவதற்கோ நிறுவன மயப் படுத்தப்பட்ட அமைப்பெதுவும் இருக்கவில்லை

இந்த நேரத்தில் நானுட்பட 5 பேர் இணைந்து சைவ முன்னேற்றச் சங்கம் என்ற அமைப்பை விக்போர்ட் (Wickford) என்ற இடத்திலே 1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி ஆரம்பித்தோம். இந்தச் சங்கம் இன்று வரை தொடர்ந்து இயங்கி வருகிறது

*இது வரை ஆற்றியுள்ள பணிகள்...*

எமது சங்கத்தின் சார்பில் 1979 ம் ஆண்டில் தமிழ் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தோம். 1983 ம் ஆண்டுக் கலவரத்திற்குப் பின்னர் இந்த நாட்டிற்கு பெருமளவான ஈழத்தமிழர்கள் வந்து சேர்ந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் லண்டனில் குடியேறினர். இந்த நிலையில் 1987ம் ஆண்டு நால்வர் தமிழ்க் கலை நிலையத்தை அமைத்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் தமிழ், சைவம், மிருதங்கம், வயலின் போன்ற வகுப்புகள் நடைபெறுகிறது.

அத்துடன் ஒவ்வொரு மாதமும் சமய வழிபாடுகள் ,நாயன்மார் குருபூசைகள் உள்ளிட்ட சமய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சமயப் பணிகளுக்கப்பால் சமூகப்பணிகளாக மரணச் சடங்குகளை நடத்தக் கூடிய சைவக் குருக்களை இலங்கையிலிருந்து வரவழைத்திருக்கிறோம்.

எனவே ஒரு மரண நிகழ்வு தொடர்பாக எங்களை அணுகும் பட்சத்தில் அதற்குத் தேவையான பொருட்களையும் நாங்களே கொண்டு சென்று அந்தக் கிரியைகளை நடத்தி வருகிறோம். அந்தியேட்டிக் கிரியைகள், திவசம் முதலானவற்றையும் நடத்த உதவுகிறோம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை பத்து மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை 'நால்வர் மூத்தோர் நிலையம்' என்ற பெயரில் முதியோர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வொன்றை நடத்துகிறோம். கருத்துப் பரிமாறல்கள் அறிவூட்டும் உரைகள் கலை நிகழ்ச்சிகள் என இந்த ஒன்று கூடல் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

அத்துடன் 'கலசம்' என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருகிறோம். அதில் 8 பக்கங்களை சிறுவர்களுக்காக ஒதுக்கி 'சிறுவர் கலசம்' என்ற பெயரில் அவர்களது ஆக்கங்களைப் பிரசுரிப்பதன் மூலம் அவர்களையும் எழுதத் தூண்டுகிறோம்.

இந்த இடத்தில் எமது நிறுவனம் No2, Salisbury road, Manor Park, London என்ற முகவரியில் இயங்கி வருவதனையும் குறிப்பிட விரும்புகிறேன்.

*எதிர்காலத்தில் ஆற்ற உத்தேசித்திருக்கும் பணிகள்...*

அடுத்த ஆண்டு முதல் சைவ சமயப் பரீட்சை ஒன்றை நடத்தத் தீர்மானித்து அதன் முதற் கட்டமாக பாடத் திட்டத்தை தயாரிக்கும் பணி பூர்த்தியாகி இருக்கிறது. இப்பொழுது பொதுவான ஒரு சமயப் புத்தகத்தை தயாரிக்கும் பணியில் உள்ளோம். அனேகமாக 2008ம் ஆண்டு முதல் பிரித்தானியா முழுவதற்குமாக இந்தப் பரீட்சையை ஒரே நாளில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

*இன்றைய சூழலில் எம்மவர்களின் சமயம் மற்றும் சோதிடம் தொடர்பான மூட நம்பிக்கைகளைப் பயன்படுத்தி போலிச் சோதிடர்களும் சாமியார்களும் பெருமளவிலான பணத்தை இவர்களிடமிருந்து அபகரிக்கிறார்கள். இது தொடர்பான அறிவூட்டலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இருக்கிறதா?*

உண்மைதான். இது போன்ற விடயங்களையும் அதாவது சோதிடக் கலை என்றால் என்ன? அதன் உண்மைத்தன்மை என்ன? அது இப்பொழுது எப்படி பணம் சம்பாதிக்கும் துறையாக மாறியிருக்கிறது என்பது போன்ற அறிவூட்டல்களை எமது 'மூத்தோர்' நிலையத்தினூடாக செய்கிறோம். அதுமட்டுமன்றி வளர்ந்து வரும் சிறார்களிடையே சமய வகுப்புகளின் ஊடாக இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

*தற்போது ஆலயங்களில் பெரும்பாலானவை வணிக நோக்கில் இயங்குவதான குற்றச்சாட்டுக் குறித்து...*

இங்கே பெரும்பாலான கோயில்கள் தாயகத்தைப் போல சமூகத்தோடு இணைந்ததாய் இல்லை என்பதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

சுலபமாகப் பணம் சேர்க்கக்கூடிய இடமாக ஆலயங்கள் இருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் அந்தப் பணம் எந்த வகையில் பாவிக்கப்படுகிறது என்பதிலே தான் இது தங்கியிருக்கிறது.

உதாரணமாக இங்குள்ள சில ஆலயங்கள் இவ்வாறு சேரும் பணத்தைக் கொண்டு தாயகத்தில் பல நல்ல பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. இது வரவேற்கத் தக்கது.

அதே நேரம் இன்னும் சில ஆலயங்கள் சொத்துச் சேர்ப்பதிலே தான் ஆர்வத்தைக் காட்டுகின்றன என்பதும் கசப்பான உண்மையே

*ஆலயங்களில் தமிழில் மந்திரங்கள் ஓதப்பட வேண்டும் என்பது குறித்து ...*

இங்கே ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டும். மக்கள் மத்தியில் இது தொடர்பான ஆர்வம் ஏற்படும் வரை இதனை இலகுவில் செய்ய முடியாது.

உதாரணமாக லூசியம் சிவன் கோயிலிலே முழுமையாகத் தமிழிலே அர்ச்சனை செய்யக் கூடிய ஒரு அர்ச்சகர் இருக்கிறார். ஆனால் நீங்கள் போய்ப் பார்த்தால் தெரியும் எங்களுடைய மக்கள் இப்போதும் சமஸ்கிருதத்திலே அர்ச்சனை செய்வதிலே தான் ஆர்வம் காட்டுகிறார்கள்.

எனவே இது மக்களின் மனநிலை தொடர்பான பிரச்சினை. உடனடியாகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவது கஸ்டம்.

# வித்தியாசமான அரங்கேற்றம்







செப்ரெம்பர் 22ம்திகதி சனிக்கிழமை மாலை பெக் தியெட்டரில் நிகழ்ந்த கர்நாடக இசை அரங்கேற்றம் பற்றி எழுத முனைகிறேன். நான் தொழில் முறை கலைத்திறனாய்வாளன் அல்ல, மிக பாமரத்தனமான கலை ஆர்வலன். எனவே 'சுப்புடு' க்களைப்போல சுற்றி வளைத்து பிய்த்துக் குதற முடியாது. நான் கண்டு உணர்ந்ததை அப்படியே கூறி விடுகிறேன்.

அன்று தனது வாய்ப்பாட்டிசையை அரங்கேற்றியவர் மானசி பாலேந்திரா. நிகழ்ச்சி யாழ்ப்பாணத்து சைவமரபுப்படி கணபதி, கலைவாணி பூசைகளுடன் தொடங்கியது. மானசியின் அன்னை ஆனந்தராணி அடக்கமாக அனைவரையும் வரவேற்று நிகழ்வைத் தொகுப்பாளரிடம் கையளித்தார். ஏற்கனவே தங்கள் பெயர்களை இசை உலகில் பொறித்திருக்கும் வாத்தியக் கலைஞர்கள் சூழ்ந்திருக்க மானசி கம்பீரமாக - அடக்கமாக அமர்ந்திருக்கிறார். குரு. இசைவலர் ரேணுகா சிறியானந்தா அருகமர்ந்து மாணவி மானசியை ஆற்றுப்படுத்துகிறார்.

கணீரென்ற - கலக்கமற்ற குரலில் மானசி பாட ஆரம்பிக்கிறார். ராகங்கள் தாளங்கள் எல்லாம் ஆற்றொழுக்காக கைவர சபையை வசப்படுத்துகிறார. சுருக்கமாக நேரடியாகச் சொல்கிறேன். மிக நன்றாக இருந்தது. தடுமாற்றமே இல்லாமல் வர்ணத்தில் தொடங்கி தில்லானா ஊடாக திருப்புகழ் வரை சீர்மையாக நிறைவாக தனது முதலாவது கர்நாடக இசை நிகழ்ச்சியை மானசி எமக்கு வழங்கினார்.

'காத்திருப்பு' மனோகரன் மனுவற்பிள்ளையின் மகத்தான மறுபக்கத்தை அவரது சிறப்பு விருந்தினர் உரையூடாக அறிய முடிந்தது. மானசியை அருகிருந்து அவதானித்த வரலாற்றை கூறியிருந்தார்.

முதன்மை விருந்தினராக வந்திருந்தவர். பன்னாட்டு இசைமரபுகளைப் பயின்றவர் கிழக்கு - மேற்கு இசையில் சித்து விளையாடுபவர். நெடுந்தீவு சிற்றூரிலிருந்து புறப்பட்டு ஹொலிவூட்டின் இசைக் கொடுமுடி தொட்டவர். அன்றைக்கு பாடாமல் பேசினார் மாணிக்கம் யோகேஸ்வரன்

மானசியை நம் மண்ணுக்கு, ஊரில் உள்ள அவள் தங்கை தம்பிகளுக்கு உதவ அழைத்தார். ஒளிர் மேடையில் நின்று இன்று இருண்டு கிடக்கும் நம் மண்ணுக்கு ஒளியேற்ற இந்தக்கலைஞன் ஒரு இளங்கலைஞரை அழைத்தது என் மனதைத் தொட்டது. இது பலரை நினைவுலகுக்குக் கொண்டு வந்திருக்கும்.

ஒரு நல்ல நிகழ்ச்சியை - அரங்கேற்றத்தை எப்படித் திட்டமிட்டு அளந்து வழங்க வேண்டும் என்பதற்கு மானசியின் அரங்கேற்றம் ஒரு உரைகல்.

- கூத்தபிரான்

ஒரு பேப்பர் சமூக செய்திப் பிரிவு




Habib Bank AG Zurich (Tooting)
Maestro Card

You can top-up your card with cash or cheque in any of our branches, any post office, or at paypoint joints. Or On-line by credit or debit card.

**Call us on 0800 1 601 701 or visit our site www.hbz-money.com**

This card is issued on behalf of Prepay Technologies Ltd. by Clydesdalebank Plc pursuant to licence by MasterCard International Incorporated.

Authorised and regulated by the Financial Services Authority.

*யாவருக்கும் ஒரு நற்செய்தி!*

வந்து விட்டது HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்"

முன் கூடியே முதலீடு செய்த உங்கள் வைப்புப் பணத்தை நல்ல முறையில் பாதுகாத்து மேற்பாத்து உங்கள் தேவைக்கு எங்கை எங்கையே எப்ப எப்பவோ பாவிப்பதற்கு உங்கள் வசதிப்படி செலவு செய்ய வழிவகுக்கும் அருமையான காட் (Prepaid)

இதின் செய்முறை நீங்கள் ஏற்கனவே பாவித்து பழகிய ரெலிபோன் காட் போன்றது.

நாடு முழுவதிலும் உள்ள 39000 இடங்களிலும், உங்கள் பாங் கணக்கில் இருந்து முதலீடு செய்யலாம்.

HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்" chip and pin கட்டுப்பாட்டு முறையில் வலு பாதுகாப்புடன் செயல் பண்ணபடுகிறது.

உலகில் எங்கு எங்கோ "மய்ஸ்றோக் கார்ட்" ஏற்று கொள்ளபடும் இடங்களில் எல்லாம் நீங்கள் பாவிக்கலாம்.

நீங்கள் HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்" விண்ணப்பிக்க UK உள்ள எங்கள் கிளைகளில் இன்றே விண்ணப்பிக்கலாம்.

# Commentary: Can the U.N. Human Rights Council help Sri Lanka?

By: Basil Fernando
DIRECTOR OF THE ASIAN HUMAN RIGHTS COMMISSION

At the United Nations Human Rights Council several European Union countries attempted to assist Sri Lanka out of its present serious crisis by suggesting human rights monitoring by the United Nations to buttress local law enforcement, which has suffered a serious collapse. While the Sri Lankan government, for reasons difficult to comprehend, resisted this move the country's law and order situation was manifestly degenerating.

This was starkly demonstrated in an incident in which Minister of Labor Mervyn Silva and President Mahinda Rajapakse himself were exposed by the media for trying to subvert the due process of law regarding an incident in which the minister's son allegedly pistol-whipped a person, causing serious injuries.

The media alleged that the minister attempted to influence the Mt. Livinia Magistrate to allow bail for his son despite the fact that he was facing charges of a non-bailable nature. Several reports said that when the magistrate refused to comply, a group of goons, allegedly employed by the minister, forced their way into the home of the magistrate's mother and instructed the lady to tell her daughter to grant bail. They went so far as to return the following morning to ask if she had complied.

This "demand" was refused and the elderly lady then registered a report to the police. While all this was going on, President Rajapakse himself allegedly telephoned the relevant police station, reprimanding officers for taking action against the minister's son and removing the police officer who had initially handled the case. Further, Silva is reported to have forced his way into the Canadian Commission in Colombo with a handgun and demanded a visa for his son to enable him to leave the country.

The Judicial Service Commission, the highest authority relating to the judiciary in Sri Lanka, and the Judicial Service Association have condemned "attempts to influence the judiciary through thuggery." However, no legal action has so far been taken against the minister for his actions.

This incident reveals that even in a simple investigation into a criminal charge regarding a private individual, political muscle can be used to frustrate the normal functioning of the criminal justice system. If this is the case with what should be a simple, straightforward investigation, it is safe to assume that the pressures exerted in investigations into more serious matters such as abductions, forced disappearances, extrajudicial killings and other forms of gross abuses of human rights, will be considerably heavier.

The conclusion of the third report of the International Independent Group of Eminent Persons, issued on Tuesday, would come as no surprise to anyone who is familiar with the present circumstances in the country and who could afford to speak honestly on these matters. The IIGEP wrote as follows:

"Taking into account the areas of concern identified in this public statement, the IIGEP concludes that the investigation and inquiry process to date fails to comply effectively with international norms and standards. The IIGEP calls upon the Commission of Inquiry [the Presidential Commission of Inquiry to Investigate and Inquire into Alleged Serious Violations of Human Rights] and the Government of Sri Lanka, in order to achieve the objectives of the Commission's mandate, to take urgent steps to remedy these concerns."

Under these circumstances the most sensible course for the Sri Lankan government is to work out a formula for the involvement of U.N. human rights monitors, thereby winning the goodwill of the local community as well as the international community, to deal with the catastrophic situation it now faces. The local community, which has completely lost faith in the government's capacity to bolster the administration of justice, may be encouraged by a genuine attempt to find assistance, in order to overcome the present deadlock relating to criminal investigations and prosecutions.

There is skepticism about the ruling regime's willingness to deal with law and order problems as it is itself frequently accused of abuse of power and corruption. All attempts to normalize the situation will also affect the type of abuse of power which has become part of Sri Lankan politics since the introduction of the executive presidency by J. R. Jayawardene, the first executive president in 1978.

However, the present regime may find it difficult to attempt any solution with the help of the United Nations, as the regime has quite blatantly demonstrated its lack of adherence to the U.N. conventions it has signed. This was made apparent when, with regard to the implementation of the Human Rights Committee's recommendations in the case of Nallaratnam Singarasa, the Supreme Court held that the president's signature to the Optional Protocol had no legal significance within Sri Lanka, and even required an amendment to the Constitution through a referendum in order to validate the president's signature on this matter.

Despite the government's promises to correct this situation nothing has been done. Instead the Sri Lankan government, in its replies to new individual applications to the Human Rights Committee, has taken the position that it is under no obligation to reply to such communications as it is bound to honor the verdicts of the local courts.

The recommendations of the U.N. Human Rights Committee have been ignored by the government on this same basis. Meanwhile, senior government officers are even making statements to the effect that Sri Lanka was bullied into signing the U.N. conventions.

All this puts the Sri Lankan citizens in a quandary. Is there no solution to the state of lawlessness they now face? It is up to the Human Rights Council to find an acceptable answer to that quandary. However, if the government of Sri Lanka blatantly obstructs any attempt by the intentional community to extend support, the people may be reminded of a local metaphor which says, "If the fence and the bunt eat the paddy, to whom can we complain about that problem?"

*Courtesy: www.upiasiaonline.com/*

# Ms Coomaraswamy the voice of the U.N.?

By: Wakeley Paul



Ms Radihika Coomaraswamy's superlative efforts to justify the bankrupt passions of the Sri Lankan government to convince the world on how human they are in their inhuman efforts to uplift the fate of the Tamil community presently in their midst, is another example of how government supported candidates become high level, supposedly impartial bureaucrats of the U .N. Almost every other independent U N. official who has any knowledge of the conditions in Sri Lanka , has contradicted her absurd pronouncements of the Sri Lankan government's efforts to be desirous of uplifting the fate of The Tamils under their dictatorial control.

The Northeast was as alien to her as were the lowly ignored rooms occupied by her servants.

Yet, she is fanned and fated as one of God's own heroines by the leader of the S. L government, whose predecessor pumped her up to this position. Her future was guaranteed by her constant and well planned biased condemnation of the the Tamil determination to avoid discriminatory dictatorial rule over them. She was immune from this fate as a faithful, seemingly impassioned adoring follower of every anti Tamil action of every successful Sinhalese government that she lived under in Colombo. The Northeast was as alien to her as were the lowly ignored rooms occupied by her servants.

All I can ask of this distinguished lady, who I knew as a loud mouthed but well intentioned human rights undergraduate, when her father was a much respected top level U N Director, is whether she has any conscience left, in her shameless effort to uplift her career by making such heartless pronouncements? Are titles more important than the quest to stand up for right? Has she lost all respect for humanity? How does the U.N tolerate such an obviously partial fraud? How does she live comfortably with her own brazen expression of fraud?.

Are titles more important than the quest to stand up for right? Has she lost all respect for humanity?

The sad part of her position is that it reflects poorly on the independent U.N Secretariat as an impartial body, designed to select impartial officials to make impartial pronouncements on partial governments. The Secretary General was warned well of her partiality before her appointment. These were bureaucratically ignored and she was appointed to this high level position regardless of her questionable past. We can only ask the new Secretary General to review her position in the light of other independent evaluations of the disgraceful attitudes and actions of the current brotherly controlled government of Sri Lanka, which she disregards with contempt. To her, this government run and controlled by three thoughtless brothers, is a monument of decency.

As someone wittily replied to the present President's statement, "My party isn't controlled by any one family" his answer was "But the country is". His brothers. all never do wells, now live and travel like sons of monarchs. The question is, with appropriate international opposition, condemnation and sanctions, how long can they and Radhika survive this popped up lifestyle?




For Sale

Freehold Shop and Flat
2 Holders Hill Parade,
Holders Hill Road
MillHill,
London NW7 1LY

கடையுடன் கூடிய வீடு (Flat) விற்பனைக்கு உண்டு.
தற்போது News Agents ஆக இயங்கும் இக் கட்டடத்திற்கு ( கடந்த 30 வருடங்களாக ஒரே நிர்வாகம்) A3 உட்பட கடை/வீடு விஸ்தரிப்பதற்கு ஏற்கனவே விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விலை £410,000 (Free hold)

தொடர்புகளுக்கு:

T.CONSTANTINE
0208 905 0452
email: tarrin@desilugroup.com

# India - New US deputy sheriff in Asia

Poongothai
ORUPAPER.COM

During eighties in Jaffna as a general rule for all Jaffnites my father was a regular listener of Indian radio programmes. Some times I was also attracted to some of those programmes; when I look back those programmes most of them were boasting about Indian 'power' and praising the glory of socialist India's fight against imperialism.

The controversial 123 agreement (civilian nuclear project) between US and India has stirred up the already muddled Indian political establishment. The proposed agreement will allow India to gain access to US technology and skills to produce nuclear power (civilian project). This is in violation of nuclear non proliferation treaty (NPT) of 1954 and will allow the IAEA to inspect all fourteen nuclear sites in India annually; this is clearly a disgraceful end to Indian ambition to become a global super power. India –US relations started to warm up in early nineties with economic liberalisation by then congress led government of PV Narasimha Rao and later right wing BJP led NDA government initiated more closer defence and strategic relationship. The current 'strategic partnership' was started with the10-year India-U.S. defence framework agreement signed in 2005. The 123 agreement was aggressively pushed by Prime Minister Manmohan Singh and his advisers with the blessings of Sonia Gandhi despite the strong opposition from left parties and dissent from some constituents of UPA. Even a lay person will notice the change in Indian foreign policy during last decade and now it is more 'congruent' with US strategic interests. The US government dictates the Indian foreign policy and even demands certain issues to be done specifically in order to suit the American needs. The following excerpts from the Frontline magazine will give some idea about the extent of this new phenomenon.

"U.S. policy in West Asia today is focussed on combating Iran. Japan has always been supportive of the Bush administration's policies. India also seems to be on the verge of jumping onto the anti-Iran bandwagon. India has already voted with the U.S. in the IAEA against Iran's nuclear programme. In May, key U.S. Congressmen who have been supportive of the India-U.S. nuclear deal wrote a strongly worded letter to Manmohan Singh, expressing their "grave concerns" about India's ties with Iran and warning him that this could adversely impact on the deal. The letter listed a series of meetings between Indian and Iranian officials. "It is difficult to fathom why India, a democracy engaged in its own fight against terrorism, would want to enhance security cooperation with a repressive government widely regarded as the world's most active sponsor of terrorism," the letter stated. Indian Foreign Secretary Shiv Shankar Menon had to dismiss reports of a close military cooperation with Iran to placate the Congressmen soon after the contents of the letter became public. Other backchannel assurances must have been given to the U.S. by the Indian government to get the "nuclear deal" expedited"

The "Malabar CY 07-2" naval exercise in the Bay of Bengal held in the first week of September of 2007 is important indicator of emerging multi polar strategic alliances in Asia and the realisation by the Indian ruling elite (politicians, bureaucrats and technocrats) about the limitations of India's influence in global politics. Now India's role in global politics has been reduce to Asia minus Middle Eastern conflict (west asia) as a US deputy 'sheriff'.

## The decadence in Indian governance

The gap between the super rich and the poor is on the rise and being exacerbated by the reckless open market economy; India is still far from achieving her goal of poverty eradication. Millions of people are struggling to get decent housing, health care, education, clean water and livelihoods. The representatives elected by the millions of ignorant and poverty stricken Indian 'citizens' will also reflect the poor quality of the governance. There is hardly any Indian politician escaped fraud and corruption allegation. I would like to highlight the decadence of the Indian political establishment with an example.

### SELVI, SMT. V. RADHIKA



I thought Ms Radhika will be a perfect example to show the current state of Indian political establishment. She was a typical Tamil Nadu housewife until the killing of her husband Vengadesh Panniyar by the police with the tacit approval of then AIADMK government led my maverick politician Jayalalitha. Mr Panniyar was a prominent politician, mafia kingpin and head of a Nadar (a caste in southern India) community organisation. At that time of his killing Ms Radhika was pregnant despite that she was given prominence during the funeral of Vengadesh Panniyar by Nadar community leaders. The DMK party exploited the visible anger of Nadar community against AIADMK to its favour by giving her candidacy for the Trichendur parliamentary constituency at the next general election ignoring its senior members including 'Supreme Star' Sarathkumar (He is also from Nadar community).

Now she holds the office of Minister of State, Home Affairs in the central government. The following information given about her in the official website;

## Special Interests

Spending time with public and downtrodden people in particular; reading books and viewing movies


## Favourite Pastime and Recreation

Watching TV
Sports and Clubs
Kabbadi and Javelin throw

I wonder if India wants to become a global super power including a permanent member status in the Security Council with the leadership of people like Ms Radhika then it will be a very long walk.

Cincinnati Enquirer's Editorial

# Naziism, apartheid still exist in Sri Lanka



If you think Naziism or apartheid are long gone, you would do well to continue reading. Last month in Sri Lanka, 500 Tamils were forcibly evicted by police from the capital city of Colombo. They, along with 300 others who were detained, either lived in the capital or had been visiting for reasons including medical treatment. The police chief's explanation: ethnic minority Tamils cannot stay in the capital "without a valid reason."

"Police didn't listen to us. They tried to beat us, they where scolding and they put us into the vehicles," explained a 54-year old mother. "They made us to leave the place with whatever cloth we were dressed with. We didn't even take our clothes."

> Tamils know it is just the latest in a decades-long story of state terrorism

Although Naziism may be dead in name, the philosophy behind it is alive and well in Sri Lanka. Even that country's opposition leader agrees, comparing this to the treatment of Jews in Germany and blacks in South Africa. Norway and America condemned the mass eviction, and several non-governmental organizations called it a disgrace to humanity.

So should all of us simply join the chorus of condemnation, and then proceed to forget Sri Lanka? If the eviction were an aberration, perhaps. But Tamils know it is just the latest in a decades-long story of state terrorism that amounts to genocide.

If you don't care much for Sri Lanka, consider this: the U.S. is sending $60 million in aid to the Sri Lankan military. As the Tamils fight a war of liberation, exactly what kind of military has Sri Lanka shown itself to have? It's not pretty. The armed forces have been criticized repeatedly for murdering journalists, professors, students and members of parliament. The air force is known for bombing schools, churches, refugee camps and orphanages. The army blocks food and medicine from reaching hundreds of thousands of Tamils displaced by the war. Last year soldiers massacred 17 non-governmental organization workers by lining them up and shooting them at close range.

> Naziism may be dead in name, the philosophy behind it is alive and well in Sri Lanka


Surely it is reasonable that, when I give up hard-earned money to taxes, I assume it goes to improving our country or maybe helping the needy overseas, not to filling the coffers of a wildly murderous military. Especially at a time when our own forces are near breaking point in Iraq and Afghanistan, why are we throwing money at Sri Lanka?

And let's not forget the Indian Ocean tsunami - how well do disaster victims, many still in temporary camps, fare when an army that kills civilians is given free money? I don't like seeing my taxes go to random pork barrel spending, let alone foreign military oppression.

During the Holocaust or apartheid in South Africa, the international community did not act fast enough. After the atrocities of Rwanda, we said "never again." As the horrors of Darfur unfold, Americans are finally taking action. We must do the same for Sri Lanka.

The Nazi-style mass eviction of Tamils is one part of a long genocidal streak, and we cannot sit back and watch. As our government funds the Sri Lankan military, inaction implies not just neutrality, but complicity.

Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# KINGSTONS
SOLICITORS

* குடும்பத்துடன் தஞ்சம், கோருவதற்கு, வசிப்போருக்கு புதிதாக அறிமுகக்படுத்தப்பட்டுள்ள Home office சட்டத்தின் கீழ் குடும்ப விசா (Family Visa) பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகள்.
* உங்கள் விண்ணப்பம் 2001 ஜனவரியிற்கு முன் நிராகரிக்கப்பட்டிருந்தால், Home office இன் புதிய நடைமுறையின் கீழ் விசா பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகள்.
* புதிதாக தஞ்சம், கோருவோருக்கான, Home office ல் விசாரணை, ஒழுங்குகள் மற்றும் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள்.
* தஞ்சம் நிராகரிக்கப்பட்டோருக்கு மேன் முறையீடு (High court Appeal) மற்றும் (Judicial Review) செய்தல்.
* நீண்ட காலமாக தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டோருக்கு புதிய மனு. (Fresh Application)
* ஐரோப்பிய நாடுகளில் குடியுரிமையோடு வசிப்போரின் இங்கிலாந்து உறவினர்களுக்கு விசா விண்ணப்பம்.
* சிறைச்சாலையில் வைக்கப்பட்டோர் தொடர்பில் பிணை மனுச்செய்தல் (Bail)
* நாட்டை விட்டு வெளியேற்றப்படுவோர் தொடர்பில், அவர்களைத் தடுத்து நிறுத்தவதற்க்கான மனு மற்றும் விடுவிப்பதற்கான விண்ணப்பம்
* இங்கிலாந்தில் உயர்கல்வி கற்பதற்கான விசா ஏற்பாடுகள். (Student visa)
* இங்கிலாந்தில் நீண்டகாலமாக தொழில் செய்வோருக்கு வேலை புரிவதற்கான விசா (Work Permit) மற்றும் வியாபாரம் செய்வதற்கான விசா (Business visa)



இது தவிர பல்வேறு சட்ட சேவைகளை உங்களுக்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.

KINGSTONS
SOLICITORS
269 A, Haydens Rd, Wimbledon, London SW19 4TY

Contact: **Chrishanthi Vincent** (LLB Hons)

Tel: **0208 540 0577** Mobile: **0777 5777 188** Fax: **0208 540 7504**

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது என்னவெனில்...**

# ஒப்புதல் வாக்குமூலம்-3:

## பேசாப் பொருள்

1997 நவம்பர் இறுதி வாரத்தில் மிக்க மனவருத்தம் தரும் சம்பவம் நிகழ்கிறது. பல்வேறு அழுத்தங்களால் விக்கி திருநாவுக்கரசு பணியில் இருந்து விலகுகிறார் அல்லது விலக்கப்படுகிறார். அவர் விலகிய அல்லது விலக்கப்பட்ட அந்த இரவை என்னால் மறக்க முடியாது. தொடருந்து நிலையம் வரை அழுதபடி நான் நடந்தேன். நான் அறிந்த மிகச் சிறந்த வானொலிக் கலைஞர்களில் விக்கி ஒருவர் அல்லர், மிக முக்கியமானவர். குரல் வளம், கற்பனை ஆற்றல், புதுமை தேடல், புதியன செய்தல், திறமை, தனக்கென்ற பாணி, இவை யாவும் இருக்கின்ற ஒருவர் விக்கி.

ஐ.பி.சி பணிப்பாளர் தாசீசியஸ் ஐந்து துறைகளாக (Departmnet) ஐ.பி.சியை பகிர்ந்தார். பொறுப்பாளர்களாக ஐவரை நியமித்தார்.

| | |
|---|---|
| மகிழ்வூட்டல்: | எஸ்.கே. ராஜன், |
| செய்தி: | ஜி.எஸ் குமார் |
| உரை: | இரவி அருணாசலம் |
| இசை: | யசோதா மித்திரதாஸ் |
| சமயம்: | செல்லத்துரை நாவரசன் |

ஆதாரம் : வேண்டுமெனில் புலம் 4 ஆடி ஆவணி 98

ஐ.பி,சி.யால் புலம் சஞ்சிகை வெளியிடப்பட்டது. மொத்தம் 13 இதழ்கள். அவற்றில் முதல் 9 இதழ்களுக்கு நான் ஆசிரியராக இருந்தேன். ஒரு வானொலிச் சஞ்சிகை எப்படி வரவேண்டும் என்று வரைவிலக்கணப் படுத்திய சஞ்சிகை அது.

புலம் இதழ் கொண்டு வருவதற்கு நான்பட்ட மகா இன்னல்களை கோபு, நாவரசன், சிறி, யசோ, கிருஷ்ணா. கணேஷ், தாசீசியஸ், வாசன் அச்சக உரிமையாளர் வாசன் ஆகியோர் அறிவர்.

இரண்டு மாதங்களுக்கொருமுறை புலம் வெளி வரும். அப்போது வாசன் அச்சகம் இந்தளவு வசதி யுடன் இல்லை, வாசனின் மனைவி ஒருவர்தான் அச்சுக் கோர்ப்பவர். ஒரு மாதம் முழுமையாக 'புலம்' வேலை யுடன் ஓடும். அந்த ஒரு மாதமும் காலை பத்து மணியிலிருந்து மதியம் ஒரு மணிவரை அச்சகத்தில் வேலை செய்துவிட்டு இரண்டு மணிக்கு ஐ.பி.சி.க்குப் போய் கலையகத்தில் அறிவிப்புச் செய்ய வேண்டும், நிகழ்ச்சிகள் தயாரிக்க வேண்டும். அப்போது நான் வாரத்திற்கு 10 நிகழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கின்ற காலம், சாமம் கடைசி தொடருந்து 12.07 இற்கு வரும், அதில் ஏறி வீடு போவேன்.

புலம் சஞ்சிகை தயாரிக்க நான் பட்ட இன்னல் சொல்லி மாளாது. எழுத்தில் அடங்காது. எழுதாமல் விடுவோம். ஆனால் இவ்வளவு உழைப்பும், இவ்வளவு சிரமமும் கொண்டு கட்டப்பட்ட புலம் சஞ்சிகையின் சரித்திரத்தை யாருக்கும் எதுவும் தெரியாமல் புதைத்து விட்டால், என் வயிறு எரிகிறது. நெஞ்சு வலிக்கிறது. உழைத்து வாழாமல் பிழைத்து வாழ்பவரால் இந்த வலியை புரிய முடியாது.

ஐபிசி யில் 10 நிகழ்ச்சிகள் தயாரிக்கிறேன் என்றா சொன்னேன். அல்ல வாரத்திற்கு 13 நிகழ்ச்சிகள் தயாரிக்க வேண்டிய நேரமும் தேவையும் வந்தன.

1999 நடுக்கூறில் தமிழின விரோதியான ராம்ராஜ் அவர்களால் ரீபீசி என்ற வானொலி தொடங்கப்படுகிறது. மேலே சொன்ன ஐந்து துறைகளில் இரண்டு துறை களின் பொறுப்பாளர்களான ஜி.எஸ் குமாரும் எஸ்.கே. ராஜனும் ரீபீசி வானொலிக்கு பணிப்பாளர்களாக பணிபுரியச் சென்றனர். ராம்ராஜ் ஐபிசியில் பணிபுரிந்த பலருக்கு வலை வீசிக் கொண்டிருந்தார். சிலர் மதில் மேல் ஏறி அங்கால் பாய்வதோ இங்கால் பாய்வதோ என்ற பூனைகளாக இருந்தார்கள். ஐபிசியில் குழப்பமும் கொட்டுண்டு வீழ்ந்து விடுமோ என்ற பயமும் இருந்த நேரம் அது. சிவரஞ்சித் அப்போது ஐபிசி பொறுப்பாளராக இருந்தார். சிவரஞ்சித்தும், யசோதா மித்ரதாசும், நானும் ஐபிசி வீழ்ந்து விடாதிருக்க மிக்க சிரமப்பட்டோம். ஐபிசிக்கு ஐபிசி நேயருக்கு உரப்பு ஏற்படுத்த ஒரு விளம்பரம் செய்தேன்.

நான்: முத்தமிழ்கள் எவை?

யசோ: இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ்

நான்: நான்காவது தமிழ்

யசோ: ஐபிசித்தமிழ்

நான்: ஹா அதுவா?

மேலும் வேறும் சில செய்தேன். அவற்றில் முக்கியமானவை நிகழ்ச்சிகள் தயாரித்தல், மற்றை யோரும் நிகழ்ச்சி தயாரிக்க ஊக்கம் கொடுத்தல், உதவி புரிதல். இவ்வாறு என் வேலைகள் இருந்தன. இந்தவகையில் யசோதா மித்திரதாஸ் (கூவாயோ குயிலே) போல் சுகி (கடி கடி) கலா புவனேந்திரன் (அக்கினி) சுமதி சுரேசன் ( வணக்கம் ஐபிசி) கணேஷ் தேவராஜா (குதூகல நேரம்) ஈஸ்வரதாஸன் (வாசற்படி) பரா பிரபா (முதற்பொழுது) உமா காந்தி (ஊரோடு உற வாட) சந்திரா ரவீந்திரன்(சமுத்திரா) ஆகியோருக்கு உதவி புரிந்தேன். இவற்றில் பல பெயர்கள் என்னால் வைக்கப்பட்டன. இதில் இன்னும் பலவற்றை மறந்தும் விட்டேன்.

அதே சமயம் சிவரஞ்சித்தின் ஆலோசனையின் பேரில் வானொலி நாடகம் ஒன்றைத் தயாரித்தேன். 'வல்லமை தாராயோ' என்பது நாடகத்தின் பெயர். ஐபிசி வானொ லியாளர்களிடையே இறுக்கத்தையும் உறவையும் பேணச் செய்ய அம்முயற்சியின் ஊடாக முனையலாம் என்பது சிவரஞ்சித்தின் கணிப்பு. செய்தேன்.

யசோதாமித்திரதாஸ், கலாபுவனேந்திரன், சுமதிசுரேசன், செல்லத்துரை நாவரசன், சுந்தரம் சிறீஸ்கந்தராசா, கணேஷ் தேவராஜா, போல் சுகி(சுவேந்திரா) இரவி அருணாசலம் ஆகியோர் அந்நாடகத்தில் நடித்தனர். இவ்வாறெல்லாம் ஐபிசி வீழ்ந்து விடாதிருக்க கடும் பிராயத்தனப்பட்டோம்.

இவ்வேளையில் நான் வாரத்திற்கு பதின்மூன்று நிகழ்ச்சிகள் செய்ய நேர்ந்தது. ஐபிசி ஆண்டு மலரில் நான் மூன்று நிகழ்ச்சிகள்தான் செய்தேன் எனத் தோற்றம் காட்ட முற்பட்டனர். ஒருவரின் உழைப்பை மறுப்பது மனிதகுல தர்மத்துக்கு ஆகாது அதனை பிழைத்து வாழ்வர் பொறுப்பர். உழைத்து வாழ்வோர் கொதிப்பர்.

நான் தயாரித்த நிகழ்ச்சிகளாவன:

கவிதை சிந்தும் நேரம், யன்னல்களைத் திறவுங்கள், நாலுவார்த்தை, நெடும்புனல், தமிழ் இனி, கதை சொல்லும் காலம், ஊர்வலம், கேட்டிருப்பாய் காற்றே, பேசாப் பொருள், நாடக நேரம், சலனம், நதிஓரம், புதியதோர் உலகம் செய்வோம்.

இப்பதின் மூன்று நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் எவ்வொரு வகையாவன. அவை பற்றிய விளக்கம் அடுத்த ஒரு பேப்பரில்

- வரும்

# கலை இலக்கியப் போட்டிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின் குரலின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டிக் கலை இலக்கியப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இது குறித்த விபரம்:

தமிழீழத்தில் வாழ்பவர்களுக்கான போட்டி, புலம்பெயர்ந்து பன்னாடுகளில் வாழ்பவர்களுக்கான போட்டி, தமிழகத்து தமிழர்களுக்கான போட்டி என மூன்றாக வகுத்துத் தனித்தனிப் போட்டியாக நடாத்தப்படும்.

ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சான்றிதழும், பரிசும் வழங்கப்படும்.

இந்த ஆண்டு வானொலி நாடகம், சிறுகதை, கவிதை ஆகிய துறைகளில் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

ஆக்கங்கள் யாவும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீச்சாக்கக் கூடியதாகவும், தமிழின மேம்பாடு கருதியதாகவும் அமைய வேண்டும்.

ஆக்கங்கள் எழுதுதாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும்.

ஆக்கத்தை எழுது தாளில் கையெழுத்துச் சுவடியாகவோ, தட்டச்சுச் சுவடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

ஆக்கங்களைச் சுவடியாக்கும் போது பிறமொழிச் சொற்களைத் தவிர்ப்பது சிறப்புக்குரியதாகும்.

போட்டிக்கான ஆக்கங்களை எழுதுபவர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தனியான தாளில் எழுதிச் சுவடியோடு இணைக்க வேண்டும்.

எந்தப் போட்டிக்கான ஆக்கம் என்பதை மடல் உறையின் மேல் இடப்பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

**வானொலி நாடகம்:**

20 நிமிடங்களுக்கு அமைவாக எழுதப்பட வேண்டும்.

எழுதுதாளில் பத்துப் பக்கங்களுக்குக் குறையாமலும் பன்னிரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் சுவடி அமைய வேண்டும்.

**சிறுகதை:**

நான்கு பக்கங்களுக்குக் குறையாமலும், ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமலும் சுவடி அமைய வேண்டும்.

**கவிதை:**

மூன்று பக்கங்களுக்குக் குறையாமலும், நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் சுவடி அமைய வேண்டும்.


கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம். ஆக்கங்களை 31.10.2007-க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

போட்டிகளில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய எங்கள் முகவரிகள்:

புலிகளின்குரல் நிறுவனம்
நடுவப்பணியகம்
முதன்மைச்சாலை
கிளிநொச்சி
தமிழீழம்.
மின்னஞ்சல் முகவரி: info@pulikalinkural.com

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!




# ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**


கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.



**07951 631 883 / 020 8470 5209**

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# திலீபன்! எங்கேயய்யா போனாய்?



த.அகிலன்
( ஒரு பேப்பருக்காக )

ஆயுதப் போரில் ஈடுபட்ட ஒரு அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அஹிம்சைப் போரில் உயிர் துறக்கிறார். ஆயுதப் போரில் இவர் வித்தாகி வீழ்ந்திருக்கலாமே என்று சிலர் புரியாது பறைகின்றனர். அப்போது சிங்கள இந்திய இராணுவத்துடன் புலிகள் போர் புரியாத நேரம். தமிழர் அனைவரும் இந்தியா தமிழருக்கு நன்மை செய்யுமென நம்பிய காலம். இவ்வேளை அஹிம்சைப் போரை மாத்திரமே கையில் எடுக்க முடியும்.

ஒரு இராணுவ முகாமைத் தாக்கி வெற்றி கொள்வதிலும் வலிமையானது திலீபனின் உண்ணாவிரத வாழ்வு.

ஒரு பொதுக்கூட்டம்.

பேச்சாளர் கரகரவென்று அழுது கொண்டிருக்கிறார் 'அந்தப் பிள்ளை சொன்னவன் நான் இரண்டு மூன்று நாட்களில் நினைவிழந்து தண்ணீர் தண்ணீர் என்று அரற்றினாலும் தண்ணீர் தராதீர்கள் என்று'

ஓம்.. அந்தப்பிள்ளை திலீபன்.

அவன் அப்படித்தான் செத்துப்போனான். தண்ணீரும் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து செத்துப்போனான். அவர் அழுதழுது சொன்னதைப்போல திலீபன் அவனது இறுதி நாட்களில் நினைவிழந்து அரற்றினான்.

தண்ணீர் தண்ணீர் என்று அவன் நினைவிழந்து அரற்றுகையில் யாரும் தரவில்லை அவனது வார்த்தைகள் அவனைச் சுற்றியிருந்தவர்களைக் கட்டுப்படுத்தியது. ஆயிரக்கணக்கானவர்கள் அவனது சாவுக்கு சாட்சியாய் இருந்தர்கள். அவனது சாவு தடுக்கப்பட முடியாததாயிருந்தது.

'ஐயா தீலீபா எங்கய்யா போகின்றாய்'

திலீபன் உண்ணாவிரதமிருந்த மேடைக்கு அருகில் இப்படி ஒரு கவிதை அழுது கொண்டிருந்தது.

அவன் அதைக் கேட்டானோ கேட்கவில்லையோ தெரியாது. ஆனால் அவன் செத்து விடக் கூடாதே என்று அத்தனை பேரும் துடித்தர்கள்.

முதல் நாள் திலீபன் மிகுந்த உற்சாகமாகப் பேசுகிறான். எனது மண் விடுதலை பெற வேண்டும். மக்கள் புரட்சி இங்கே வெடிக்க வேண்டும்

பிறகு நாளாக நாளாக அவன் பேசும் சக்தியை இழந்து கொண்டு போகும் நாட்களிலும் அவனது முகத்தின் புன்னகை மாறாதிருந்தது. நம்பிக்கையிழந்துவிட்டதன் சாயல் துளியும் இருக்கவில்லை. மரணத்தின் வாசனை தனது நாசிகளில் ஏறுவதை அவன் மறைத்தான் உண்மையில் மக்களிடம் அவன் பிழைத்து விடுவான் என்கிற நம்பிக்கைகள் வீழ்ந்துகொண்டிருந்தன.

திலீபன் தனது நம்பிக்கைகள் சாகும் கணத்தில் சொல்கிறான்

'உறவுகளே நான் நம் நாடு மலர்வதை எனது தோழர்களொடு வானத்தில் இருந்து பார்ப்பேன்'

## 'எனது மண் விடுதலை பெற வேண்டும். மக்கள் புரட்சி இங்கே வெடிக்க வேண்டும்'

அவன் மரணம் நிச்சயமானது என்று அவனுக்கு புரிந்திருந்தது. அது அவனால் தானே நிச்சயிக்கப்பட்டது. அந்த தெளிவுதான் அவன் பலம் அது தெளிவா அல்லது சாகும் துணிவா? எனக்கு சொல்லத்தெரியவில்லை. ஆனால் அது மரணத்தை அதன் நிரந்தரத்தை அதன் மீதான மனிதர்களின் அச்சத்தை வென்றுவிட்டது.

திலீபனிடம் கடைசியாக ஒரு வைத்தியர் வருகிறார். அவர் திலீபனைப் பார்த்தார். அவன் சாந்தமாக கிடந்தான் நிரந்தரமான அவனது அந்தப்புன்னகை அவரால் எதிர்கொள்ள முடியாததாயிருந்தது.

காலம் அவனைக் கொண்டு போய் விட்டது விடுதலையின் மூச்சென்று மேடைகளில் முழங்கியவன் மூச்சடங்கிப்போனான் அவன் மரணத்தை அறிவிக்க வேண்டும். தன் உறவுகளை தன் அன்பான மக்களை துடிக்கவைத்து விட்டு மெழுவாத்தி அணைந்து விட்டது. அதைச் சொல்ல வேண்டும்.

வைத்தியர் இப்போது என்ன செய்வார்?. அவரைச்சங்கடத்துக்கும் துக்கத்துக்கும் உள்ளாக்கப்போகும் அந்தக்கணங்கள் வந்துவிட்டன. மரணம் அவ்னை முழுவதுமாக ஆட்கொண்டு விட்டது.

மரணம் கொடியைப்போல அவன் மீது படர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக கணீர்க்குரல் வலுவிழந்து தொய்ந்து சீணித்து கடைசியில் மௌனித்தது. அந்தப் பெரும் மௌனம் கூடிக்கதறிய மக்கள் வெள்ளத்திடம் கொடுந்தீயெனப்பற்றியெரிகிறது இன்றைக்கும். எப்படி முடிந்தது அவனால்.? மரணம் அத்தனை இலகுவானதா? காதலியைக் கட்டிக்கொண்டதைப்போல மரணத்தை இலகுவில் முத்தமிட்டானே. அது சாத்தியமா? மரணம் அத்தனை சாதாரணமா.?

திலீபனை அவனது கால்களை தொட்டு கும்பிட்ட வைத்தியரின் உடல் குலுங்கிக்கொண்டிருந்தது அவனது மரணம் அறிவிக்கப்பட்டது. அந்த திடுக்கிடும் கணங்களில் ஓஓஓஓஓ என எழுந்த கூக்குரலும் கதறலும் அடங்க நாளானது.

அத்தனை பேரும் அழுதார்கள் மரணத்தை விருந்துக்கு அழைத்த அவனுக்காய் வழிந்த எந்தத்துளிக் கண்ணீரிலும் பொய்யில்லை. அத்தனையும் துயரம். நல்லூரின் தெருக்களில் வாாத்தைகளுக்குச்சிக்காத கண்ணீர் வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. உறைந்து போன அந்தக்கணங்கள் இன்றைக்கும் நல்லூரின் தெருக்களில் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது.

மிகப்பெரும் மனோபலமிக்க தலைவனால் வளர்க்கப்பட்ட திலீபனின் மனோபலம் இதனை சாத்தியமாக்கியதா? இந்தப்பூமியின் சுகங்களை தவிர்த்து அவன் முன்பு கூடியிருந்து கதறும் குரல்களைத் தவிர்த்து மரணத்தை எதிர்பாாத்து காத்திருப்பதற்கு அது அத்தனை இன்பமானதா? மரணம் சிலருக்கு ஆச்சரியம் மரணத்துக்காக புன்னகையுடன் காத்திருக்க எத்தனை மனிதரால் முடியும்?

ஒரு சில அதிசயர்களால் மட்டும் தான் முடியும் போலிருக்கிறது இல்லையா?.

FORWARD
REAL ESTATES
Sales, Lettings, Management

"அழியாத செல்வம் மனையொன்றே"...
அதைப் பெற்றுத் தரும் உங்கள் நண்பன்....

PROPERTY & FINANCE CONSULTANTS
With 25 years of combined experience of providing services to the business and community.

1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052
www.forwardrealestates.co.uk and e-mail address:mail@forwardrealestates.co.uk.

GROCERY/OFF LICENCE - WILTSHIRE
£80,000
Forward Real Estates are pleased to present this Grocery and Off-Licence shop in Wiltshire.
The property comprises of a ground floor trading area of about 1,500 sq ft, storage area and 3/4 bed flat on the first floor.
The takings from the shop are £7,000 per week.
The rental income from the flat is £7,200 per annum.



GROCERY/OFFLICENCE - SOUTHALL - £75,000 L/H




NEWSAGENT/OFF LICENCE, RICHMOND £77,500


BUSHEY - £249,950



NEWSAGENTS/OFF LICENCE - BARNET £99,450


WILLESDEN £245,000



LAUNDERETTE AND DRY CLEANERS - EDGWARE £240,000



GROCERY/OFFLICENCE - ACTON- £64,950

INAUGURAL OFFER 0.6% ON SALES 5% ON LETTINGS
* Limited Time Only
Try us, be surprised!!!
020 8900 9052
FindaProperty.con

## யாழ் இணையத்தின் விரியம்

# சிறிலங்கா போகும் பாதை

எந்த அரசியல் முரணிற்கும் அடிநாதமாக இருப்பது பொருளாதார உறவுநிலைகளே என்னும் வரலாற்று இயங்கியல் உண்மையே, இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் விடுதலைப்போராட்டத்தின் அடிப்படையாகவும் இருக்கிறது. இந்த நிலையில் சிங்கள தேசத்தின் பொருளாதார நிலையே இந்தப் போரிலும் முதன்மை பெறுகிறது.

அண்மையில் பெரும்பாலான செய்தி நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்த பிரதானமான செய்தி சிறிலங்காவின் பொருளாதாரம் பற்றியது.இங்கே அடிப்படையாகச் சொல்லப்பட்ட விடயங்கள், சிறிலங்கா நாணயத்தின் மதிப்புக் குறைந்திருப்பது, விலைவாசி ஏற்றம், வெளிநாட்டுக் கடன் சுமை என்பவையே.

சிறிலங்காவின் கடந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த வருட ஆரம்பத்தில் வளர்ச்சி விகிதம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கே சில அடிப்படையான விடயங்களைப் பார்ப்போம்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதமே அந்த அரசுக்கான வரிகளின் மூலமான வருமானத்தைத் தீர்மானிக்கிறது.

அரசுக்கு வருமானம் குறைந்தால் செலவினங்களுக்கான செலவை இட்டுக் கட்ட கடன் பெற வேண்டும்.மேலும் கடந்த வருடங்களில் பெருமளவிலான வெளி நாட்டு வட்டித் தொகைகள் சுனாமியின் நிமிர்த்தம் பிற்போடப்பட்டு இருந்தன. மேலும் பல வெளி நாட்டுக் கடன்கள் குறிப்பாக யப்பானால் வழங்கப்பட்டு இருந்தன. இவை எல்லாமும் சேர்ந்து வரவுக்கும் செலவுக்கும் இடையேயான இடை வெளியை நிரப்பின.

ஆனால் இந்த வருடம் பெருமளவிலான வெளிநாட்டுக்கடனுக்கான வட்டியைச் செலுத்த வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. மேலும் அரசின் வருமானம் சிறிலங்கா நாணயத்தில் இருக்கிறது. ஆனால் கடன்கள் அமெரிக்க டொலரில் இருக்கிறது. குறைந்து வரும் சிறிலங்கா நாணயத்தின் வீழ்ச்சியானது, முன்னரை விட பெருமளவிலான பணத்தை வட்டியாகச் செலுத்த வேண்டிய நிலைக்கு அரசை இட்டுச் சென்றிருக்கிறது.

குறைந்து கொண்டு வரும் சிறிலங்காவின் நாணயப் பெறுமதியை நிமிர்த்திவிட சிறிலங்காவின் மத்திய வங்கி எடுத்த முயற்சியும் தோல்வியிலேயே முடிந்திருக்கிறது.

அதாவது மத்திய வங்கியே தனது இருப்பில் இருக்கும் டொலர்களை விற்று சிறிலங்கா நாணயத்தை வாங்கி, சிறிலங்கா நாணயத்திற்கான தேவையை சந்தையில் அதிகரிக்க முயன்றது. ஆனால் இதன் மூலமும் சிறிலங்காவின் பொருளாதாரச் சிக்கலை சீர்செய்ய முடியவில்லை

சிறிலங்காவின் நாணய வீழ்ச்சியானது மத்திய வங்கியின் கட்டுக் கடங்காமல் சென்று விட்டது என்பதற்கான அத்தாட்சியாகவும் இது இருக்கிறது.

முதலீட்டாளர்கள் மத்தியில் இது அரசின் நிதிக் கொள்கை பற்றிய விசனத்தையும், நம்பிக்கையீனத்தையும் வளர்க்கிறது.

இந்த நிலையினாலேயே சிறிலங்காவின் முதலீடுகளுக்கான தரம் என்பது 'குப்பை முதலீடுகள்' அதாவது 'ஜங் பொண்டின்' தரத்திற்க்கு தரம் இறக்கபடுவதற்கான காரணியாக இருக்கிறது.

இங்கே சிறிலங்கா அரசானது தூர நோக்கற்று, தனது அரசியல் இருப்பிற்காகத் தொடுத்திருக்கும் போரே பொருளாதார வளர்சியை பின் தள்ளும் பிரதானமான காரணியாக இருக்கிறது.

அரசு போரை முன் எடுப்பதற்காகப் பெருமளவிலான யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்துள்ளது.படையின் வலுவை அதிகரிக்க புதிதாக ஆட்களைச் சேர்க்கிறது. இவை எல்லாமும் சேர்ந்து பாதுகாப்புச் செலவினத்தை திட்டமிடப்பட்ட தொகைக்கு அப்பால் நகர்த்தி உள்ளது. இதற்கு அப்பால் போர் நிகழக்கூடும் என்னும் செய்தியானது முதலீட்டாளர்கள் மத்தியிலும் சலனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இத்தனைக்குள்ளும் சிறிலங்காவின் பொருளாதாரத்தைத் தாங்கி நிற்பவை இரு பெரும் தூண்கள். ஒன்று சிறிலங்காவிற்கு வெளியே வேலை செய்யும் இலங்கையரால் அனுப்பப்படும் வெளிநாட்டுச் செலவணி மற்றும் ஜப்பானிய அரசால் வழங்கப்படும் கடன் உதவித் தொகைகள்.இந்த இரண்டிலும் நிகழக்கூடிய தாக்கமே சிறிலங்கா பொருளாத்தரத்தை வெட்டிச் சரிக்க வல்லது.

யப்பானிய அரசின் உதவி என்பது மேலோட்டமாக, மதம் சார்ந்ததாகவும், இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஜப்பானுக்கு ஆதரவாக சிறிலங்கா ஐநா சபையில் கொடுத்த ஆதரவினாலும் என்று சொல்லப்பட்டாலும்,அடிப்படையில் இந்த உதவியானது அமெரிக்காவின் நலன்களின் பாற்பட்டதே.

அமெரிக்காவின் உலகளாவிய நலன்களை இந்தப் பிராந்தியத்தில் தனது நிதி வலுவினால் நிலை நிறுத்தும் செயலையே யப்பான் செய்து வருகிறது.ஆகவே சிறிலங்காவைத் தனது ஆளுமையின் கீழ் வைத்திருக்கும் தனது மூலோபாயத்தின் ஒரு அங்கமாகவே யப்பானை அமெரிக்கா பாவிக்கிறது என்பதினூடாகத் தான் நாம் யப்பானின் நிதி உதவிகளைப் பார்க்க வேண்டி இருக்கிறது.

அடுத்ததாக சிறிலங்காவிற்குக் கிடைக்கும் இலங்கையரால் அனுப்பபடும் வெளி நாட்டுச் செலவணி பற்றிப் பார்ப்போம்.

இது பெருமளவில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அனுப்படும் பணமாகவே இருக்கிறது. வேலை வாய்ப்பின்மை வறுமை போன்ற காரணிகளால் இன்று பல குடும்பங்களில் கணவனோ, மனைவியோ குடும்பத்தைப் பிரிந்து மத்திய கிழக்கில் வேலை செய்து வருகின்றனர்.

இவர்கள் தமது குடும்பத்திற்கு அனுப்பும் பணமே பல குடும்பங்களையும், சிறிலங்காவையும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

2006 ஆம் அண்டு மத்திய வங்கியின் நிதி நிலை அறிக்கையின் படி மொத்த உள் வருகையில் ஏறக்குறைய அறுபது சதவிகிதம் மத்திய கிழக்கில் இருந்தே வருகிறது. இருபது சதவிகிதம் அய்ரோப்பாவில் இருந்தும் ஐந்து சதவிகிதம் வட அமெரிக்காவில் இருந்தும் செல்கிறது.இவ்வாறு சிறிலங்காவிற்கு உள்வருகையாகக் கிடைத்த மொத்த அன்னியச் செலவாணி 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.

சிறிலங்காவின் ஏற்றுமதிகளை விட இறக்குமதிகளே அதிகமாக இருக்கின்றன, இங்கே வர்த்தக நிலுவையானது சிறிலங்காவிற்குப் பாதகமான முறையில் 3.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கிறது.இந்தப் பாதகமான வர்த்தக நிலுவையை இட்டுக் கட்டும் அளவிற்கு சிறிலங்கா அரசிற்கு கைகொடுப்பது இந்த அன்னியச் செலவாணி உள் வருகையே.

இங்கே புலத் தமிழர்கள் சிறிலங்காவின் வங்கி நடைமுறைக்கு உட்பட்டதாக அனுப்பும் பணமே இவ்வாறான உள் வருகை நிலுவைகளில் காட்டப்படும்.ஆகவே வங்கி நடைமுறைகளுக்கு உட்பட்டதாக அனுப்படும் பணமானது சிறிலங்காவின் இராணுவ வல்லாண்மையை தக்கவைக்கும் ஒரு விடயமாகவே புலத் தமிழர்களால் பார்க்கப்பட வேண்டும்.

மேலும் சிறிலங்காவின் ஏற்றுமதி விளை பொருட்களைப் புறக்கணிப்பது என்பதுவும் சிறிலங்காவின் வர்த்தக நிலுவையில் தாக்கத்தை உண்டு பண்ணும் ஒரு நடவடிக்கையாகப் பார்க்கப்பட வேண்டும்.

சிறிலங்காவின் இராணுவ வலுவைத் தாங்கி நிற்பது அதன் பொருளாதரமே.அந்தப் பொருளாதார நிலையில் ஏற்படும் பாதிப்பே சிறிலங்காவின் இராணுவ வலுவை தளம்பச் செய்யும்.

கிழக்கில் சிறிலங்கா இராணுவம் ஈட்டி இருபதாகச் சொல்லும் வெற்றியானது, ஒரு உள் அடக்கம் அற்ற ஒரு கோறையான வெற்றி.இதனை வேண்டுமென்றே விடுதலைப் புலிகள் ஊக்கப்படுத்தி உள்ளனர்.இது சிறிலாங்காவின் பொருளாதார,,இராணுவ வலுவை சிதைத்து சின்னா பின்னப் படுத்தக் கூடிய போர் உக்தியின் ஓர் மூலோபாயமாகவே இன்று பலராலும் பார்க்கப்படுகிறது.

ஆனால் தனது அரசியல் இருப்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் மகிந்தவுக்கோ இனவாதப் பிணியினால் பீடிக்கப்பட்டிருக்கும் சிங்கள பேரினவாத்திற்கோ அனைவருக்கும் தெரியும் உண்மைகள் இன்னும் கண்ணுக்குப் புலப்படாமலேயே இருகின்றன.

ஆனால் சிறிலங்கா மேல் மூலோபாய ரீதியாக் கரிசனை கொண்டிருக்கும் அமெரிக்காவிற்கு இது விளங்குகின்றது. அதனாலேயே அது பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எதோ ஒரு தீர்வைத் திணித்து இலங்கைத் தீவில் அமைதியை நிலை நாட்ட விரும்புகிறது.

ஆனால் மகித்தவின் அரசோ புலிகளை இராணுவ ரீதியாக அடக்கி ஒடுக்கி விடலாம் என்று கற்பனை காண்கிறது.அதனாலேயே அது அமெரிக்கா சொல்லும் ஆகக் குறைந்த அரசியற் தீர்வையே முன் வைக்காமல் இராணுவ முனைப்புக்களை இப்போது வடக்கே நகர்த்தி உள்ளது.

இந்தப் போக்கு சிறிலங்கா அரசை எங்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்த அமெரிக்காவும் சர்வதேசமும் இந்தத் தறி கெட்ட அரசை வழிக்குக் கொண்டு வர பாவிக்கும் ஆயுதமே இந்த மனித உரிமைகள் பற்றிய சர்வதேசத்தின் அண்மைய கரிசனைகள்.

இதன் நீட்சியாக தற்போது ஐரோப்பிய யூனியன் சிறிலங்கா ஏற்றுமதி ஆடைகளுக்கான சில விசேட சலுகைகளை நீக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது.ஆனால் எவ்வளவு தூரத்திற்கு இவை சிறிலங்கா அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஒரு கேள்விக் குறியே.

மேலே தந்த தரவுகளின் அடிப்படையில் சிறிலங்காவின் பொருளாதார பலத்தைத் தாங்கும் பெரும் தூண்கள் அசையாத வரை எந்தப் பாரிய மாற்றமும் ஏற்பட்டு விடும் என்று எதிர்பார்க்க முடியாது.

அண்மைய செய்திகளின் படி மகிந்த அரசானது சர்வதேச தனியார் வங்கிகளிடம் கடன் வாங்கியோ, சீனாவிடம் இராணுவ தளபாட, பயிற்சிகளைப் பெற்றோ எப்படியாவது வடக்கிலும் இராணுவ வெற்றிகளைப் பெற்று விடலாம் என்று நம்புகிறது.


ஆனால் இவை எல்லாவற்றையும் மாற்றி அமைக்கக் கூடியது விடுதலைப் புலிகளின் போரியல் நடவடிக்கைகளே. சிறிலங்காவின் பொருளாதாரத்திலும் அதன் அடிப்படையில் அமைந்த அதன் இராணுவ வலுவிலும் பல மாறுதல்களை இவை ஏற்படுத்தலாம்.

இதன் காரணமாய் வெளிநாட்டினர் சிறிலங்காவின் மீது வைத்திருக்கும் நம்பிக்கைகள் பாரிய சரிவைக் காணக் கூடும். புதியகள நிலைமைகள் குறிப்பாக கிழக்குக் கரையில் நிகழும் மாற்றங்கள் யப்பானையும், அமெரிக்காவையும் புதிய கோணத்தில் சிந்திக்கத் தூண்டலாம் யப்பான், அமெரிக்கா, இந்தியா என்னும் அச்சு முற்று முழுதாக மறுவளம் திரும்பலாம்.

இவை எல்லாவற்றையும் மாற்றி அமைக்கும் வல்லமையை தமிழ் தேசம் பெற களத்திலும், புலத்திலும் ஒன்று பட்ட ஆதரவு என்பது இன்றி அமையாதது.

சிறிலங்காவைப் பொருளாதரா ரீதியாகப் பலவீனமாக்கும் நடவடிக்கைகளையும், மாறும் கள நிலமைகளை எமக்குச் சாதகமாக அறுவடை செய்ய வேண்டிய அரசியற் செயற்பாடுகளையும் புலத்தில் மேற் கொள்ள வேண்டியது புலத் தமிழர்களின் இன்றி அமையாத கடமை ஆக இருக்கிறது.

*- நாரதர் (யாழ் இணையத்திற்காக)*
*www.yarl.com*



துர்க்கா ஜோதிடம் மஞ்சுநாத சுவாமிகள்

SRI THURGA DEVI JOTHISH MANDIR SRI MANJUNATHA SWAMY



*துர்க்கா ஆசீர்வாதத்தில் இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள மஞ்சுநாத சுவாமிகள் அவர்கள் துர்க்கா மாதாவினதும் அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும்*
*விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். அவர் பல நாடுகளில் விஜயமிட்டு பலரினது பிரச்சனைகளையும் தீர்த்து வைத்திருக்கிறார். வீடு, கடை மற்றும் தனி நபர்களின் நலனுக்காகவும், பாதுகாப்பாகவும் தகுந்த பூஜைகளை செய்வதிர் வல்லுநர். நீங்கள் எத்தனையோ ஜோதிடர்களைப் பார்த்திருந்தாலும்*

*ஒருமுறை சந்தித்து விசேசத்தை நேரில் அறிந்திடுங்கள்.*

He visited so many countries and had successfully solved problems for many people. An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem, Sickness, Promotion, Visa, Court, Lottery , Money, Removal of enemy. All types of black magic and evil things removed. He does protection thing for house, shop and personal matters will not be kept in confidence. SPOKEN LANGUAGES TAMIL, HINDI & ENGLISH.

**அகிலன் எண்டர்பிரைசஸ்** (Near Lakshmis Jewellers) 274 High Street North, Easthamn, London E12 6SA
Tel: **07984685157** Opening Hours; **9.30 am-8.30pm**-7days

# எதிர்ப்பாலின ஈர்ப்பு அப்படியெண்டால் என்னங்க....



எதிர்பாலினம் மேல் எப்போதுமே ஒரு ஈர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. எந்த வயது ஆனாலும் பருவத்துக்கு ஏற்ப அது மாறுபடுகிறது. வாலிபத்தில் பெண்களை கவர ஏகப்பட்ட யுக்திகள் செய்கிறார்கள்.

அன்பை பெற, காதலைப் பெற, நட்பைப் பெற என எந்த பருவத்திலும் ஏதாவதொன்றை செய்து கொண்டேதான் இருக்கிறோம் தன்னிச்சை செயல்போல.

எந்த மாதிரி நண்பனா இருந்தாலும் பக்கத்துல ஒரு பொண்ணு இருந்துட்டா லெவல்காட்டுறானுங்க. எங்களை கழட்டிவிடு றானுங்க

ஒரு பைக் சண்டியர் அவரும் நம்ம ப்ரெண்டு த்தான். தலைகீழ ஓட்டுவாரு அதுவும் பொண்ணுங்க ட்யூஷன் விட்டு வர்ற நேரம் வீலிங், ஸ்கிட்டிங்னு இல்லாத ரவுசு ஒருநாள் எக்குத்தப்பா ஒரு பிகர் முன்னாடி வீலிங் பண்றேன்னு சில்லறை வாங்கி ரெண்டு பல்லு அவுட்.

ஏன் இப்படி இயல்புக்கு மாறா நடக்கிறாங்க. எல்லாமே ஒரு ஈர்ப்புதான், எந்த நேரத்துலயும் நாம அடுத்தவங்க கவனத்துல இருக்கணும்.

நம்மள பத்தி நாலு பேர் நினைச்சிட்டே இருக்கணும். ஆனா இந்த பொண்ணுங்க பாருங்க எந்த கவலையுமில்லாம அதுக பாட்டுக்கு இருக்கும். நம்மாளுங்கதான் உழுந்து பிறண்டு வித்தை காட்டுவானுங்க.

சுகந்தி க்ராஸ் பண்ணான்னா பாண்ட்ஸ் பவுடர் வாசனை அடிக்குதுன்னு அடுத்த மாச மளிகை லிஸ்ட்ல அதை சேக்க சொல்லி அடம்பிடிச்சி அடிவாங்கியிருக்கேன்.

நாமளும் அதே பவுடர் போட்டா வாசனையாவும் இருக்கும். மேட்சிங்காவும் இருக்கும்னு ஒரு எண்ணம்.

நம்ம பய ஒருத்தன் இருக்கான் கார்த்தி கார்த்தின்னு சதா க்ளாஸ் பொண்ணுங்களுக்கு சேவை செஞ்சிகிட்டே இருக்கணும்னு நல்ல எண்ணம். பயாலஜி லேப்ல எலி, தவளை சோதனையின் போது அவங்கவங்க கண்டிப்பா எலி, தவளை பிடிச்சிட்டு வரணும்.

நம்ம பய வீட்டுல எலி ஜாஸ்தி. மச்சி எனக்கும் சேர்த்து புடிச்சிட்டு வாடான்னு சொன்னா எங்க வீட்டுல இருக்கறதே ஒரே ஒரு எலி. அதையும் உங்கிட்ட குடுத்துட்டா நான் எங்க போறது? வேற எங்கனா பாத்துக்கன்னு சொல்லுவாரு.

மறுநாள் மஞ்சுளாக்களுக்கும், கவிதாக்களுக்கும் பொறில இருந்து பக்குவமா உசுரோட எலிய எடுத்து குடுப்பாரு அவ்ளோ நல்லவரு.

இதே தவளை பரிசோதனைன்னா கேக்கவே வேணாம் பக்கத்துல எதாச்சும் ஏரி, குளம், குட்டைன்னு விழுந்து எந்திரிச்சி ரெண்டு கைலயும் அஞ்சாறு தவக்களைய பிடிச்சிகிட்டு வீரமா நடந்து வருவாரு. இப்படி டிஸ்ட்ரிபியூட் பண்றதாலயே அவர் பேர் தேவர் பிலிம்ஸ்னு ஆகிப்போச்சு.

அஞ்சாப்பு படிக்கும்போது மதியம் கணக்கு வாத்தி பீரியடுன்னா டவுசர் ஈரமாகும் எல்லாருக்கும். ஒரு காதுல பெரிய ஓட்டை இருக்கறதுனால அவர் பேர் தொளக்காது வாத்தி.

இவர் குடுக்கற தண்டனையே வித்தியாசமா இருக்கும். அதாவது ஒரு கேள்வி கேட்டு நமக்கு தெரியலன்னு வச்சிக்கோங்க அந்த கேள்விக்கு எவன்/எவள் சரியாக சொல்றாங்களோ அவங்க வந்து ரெண்டு கன்னத்துலயும் ஒரே நேரத்துல அடிக்கணும்.

பையனே சரியான விடை சொல்றான்னா முன்பகைய பொறுத்து அடி பலமாவும்,சன்னமாவும் விழ வாய்ப்பிருக்கு. ஏதோ ஒரு புள்ளைக்கு விடை தெரியாம போய் பையன் சரியா சொல்லிட்டான்னு வைங்க அந்த புள்ளைக்கு கன்னம் நோகாம தடவி குடுத்துட்டு வருவான்.

தம்பி இங்க வா 'இப்படி' அடிக்கணும்னு செவுளே கிழியற மாதிரி அடிப்பாரு தொளக்காது வாத்தி. இந்த மாதிரி பொண்ணுங்கள்னா மட்டும் தியாகி ஆகி வாத்திகிட்ட அடிவாங்கறது எதனால?

நானே என் சட்டைய இஸ்திரி பண்ணா சுருக்கம் சரியா போகமாட்டேங்கதுன்னு இஸ்திரிகாரன்கிட்ட போட ஆரம்பிச்சது சரியா மீசை அரும்பற வயசிலதான்.

யாராச்சும் நம்மள கவனிக்கணும், யாராச்சும் நம்மள நினைக்கணும். இந்த மாதிரி ஏன் ஹார்மோன் திடீர்னு மாறிப்போகுது.


ஏண்டா இம்புட்டு பேசறியே நீ மட்டும் என்ன ஒழுங்கான்னு யாரும் கேக்காதிங்க நான் அதே மாதிரிதான்னாலும் ஓவர் பந்தா விட மாட்டேன். சில பேர் இருக்கானுங்க

பிகர்கள பாத்தா ப்ரெண்ட்ஷிப்ப மறந்து ஏத்தமா பேசுவானுங்க பாருங்க அவன்களுக்கு எல்லாம் ஆம்புளைப் பசங்களின்ரை சார்பா கண்டனம் தெரிவிச்சு கொள்ளுறன். திருந்துங்கடா அரைடவுசர் மண்டையனுங்களா... திருந்துங்க

- *குறும்பன்*

## ஹா ஹா ஹா...

| | |
|---|---|
| நபர்1 | நான் தோடி ராகம் பாடட்டா? |
| நபர்2 | வேண்டாம் அது எனக்குப் பிடிக்காத ராகம் |
| நபர்1 | அப்ப கல்யாணி ராகம் பாடட்டா? |
| நபர்2 | வேண்டாம் அது எனக்குப் பிடிச்ச ராகம் |


**Obtain a British Degree!**
**Your best investment in life.**

British Degrees are recognized worldwide and can provide excellent career benefits, and it is the guaranteed way to become a real professional.

KMS 9 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயில விரும்பும் இளம் மாணவர்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வந்திருக்கிறது.

கடந்த 4 ஆண்டுகளாக 300க்கு மேற்பட்ட மாணவர்கள் பிரித்தானியாவில் தகைமை பெறுவதற்கு உதவி செய்திருக்கிறது. எமது மாணவர்களில் பெரும்பாலோர் தமது முதல் நிலை பாடத் திட்டங்களைப் பூர்த்தி செய்து தமது தொழில்களில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

KMS திரு. P.K Suhanthan அவர்களால் தொடங்கப்பட்டது. இவர் தனது முது நிலைப் பட்டத்தை Masters Degree கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார். இவர் ஸ்ரீலங்காவிலும், ஐக்கிய இராச்சியத்திலும் 14 வருட அநுபவம் வாய்ந்தவராவர்.

Knowledge Management Systems has offices in London, Sri Lanka, and India.

You can contact him to get expert advice and guidance from choosing the right course to the right College. KMS is also pleased to offer all the services including English Training and Computer training under one roof.

A team of Experts consists of some eminent and experienced UK Academics can guide the students in all the possible way to become a British Graduate!

We welcome students from both Sri Lanka and India

**KNOWLEDGE MANAGEMENT SYSTEMS**
5 Station Chambers, Station Parade, Eatham E6 1JD
London: **+447905038050** | **020 8821 0107**
Colombo: **+94112553106** | Chennai: **+919841199594**

# எங்கள் கூப்பன் கடை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இந்த ப. நோ. கூ. சங்கங்கள் பற்றி நமது நகைச்சுவை நடிகர் 'சக்கடத்தார்' இராசரத்தினம் ஒரு சுவையான விளக்கம் சொல்லுவார்.

'சக்கடத்தார்.. ப. நோ. கூ. சங்கம் என்றால் என்ன?'

'பழுதான, நோயுள்ள, கூடாத சாமான்கள் விற்கும் சங்கம்..'

இந்தப் ப.நோ.கூ.சங்கங்கள் வருவதற்கு முதலில் எங்கள் ஊர்களில் கூப்பன் கடைகள் இருந்தன. அவை தனியாருக்கு சொந்தமானவை. அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களைப் பொறுத்து விதானையார் மூலம் கொடுத்த கூப்பன்களை ஒவ்வொரு வாரமும் கொண்டுபோய் கூப்பன்கடையில் கொடுத்து, அதற்குரிய அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.

ஆனால் மேலதிகமாக இந்தப் பொருட்களை வாங்குதற்கோ, உழுந்து, பயறு, சவர்க்காரம் வாங்கவோ பணம் கொடுக்க வேண்டும். கூப்பன்கடை நடத்துபவர்க்கு லாபம் இவற்றால் மட்டும் வருவதில்லை. இலவசமாக அரசாங்கம் கொடுக்கும் முன்னர் குறிப்பிட்ட சாமான்களிலும் வெட்டு, கொத்து என்றும் மிஞ்சும்.

இந்தக் காலத்தில் விமானங்கள் வாங்கும் வியாபாரங்களிலேயே வெட்டு, கொத்துக்கள் இருக்கிறதாமே ?

இப்படி ஒரு கூப்பன் கடை எங்களிடமும் இருந்தது. இது ஒரு பரம்பரைச் சொத்து, எங்கள் அப்பாவின் அம்மா (அப்பாச்சி) தான் ஆரம்பத்தில் இதை நடத்தினார். கடன் கொடுப்பது, கடன் வசூலிப்பது என்று வந்தவிட்டால் அவ கறாராக நடந்து கொண்டாலும், ஏழை, பாளைகளின் வயிற்றில் அடிக்கிற மாதிரி நடந்து கொள்ளமாட்டா.

**இப்படி இருக்கும்போது எங்கள் ஊரில் தேர்தல் வந்தது. அத்தோடு ஒற்றுமையாக இருந்த ஊர் மக்களே ஒவ்வொரு சின்னத்திற்கும் பின்னால் பிரிந்து சின்னா பின்னமாகிப் போனார்கள்.**

புதுவருசம், தைப்பொங்கல் என்று பண்டிகைக் காலங்களில் வடை, முறுக்கு, அரியதரம் என்று செய்து கடகங்களில் நிரப்பி வைத்து தனது வாடிக்கையாளர்களான ஏழைகளுக்கு அள்ளிக் கொடுப்பா. அவர்களும் வாழ்த்திச் செல்வார்கள். இப்படி அன்னியோன்யமாக நடந்து கொண்டார்கள்.

நான் பள்ளிக்கூடத்தால் வந்தவுடன் அப்பாச்சியின் கடைக்குப் போய் விடுவேன். கடையோடு சேர்ந்ததாக வீடு இருந்தது. என்னைக் காவலுக்கு விட்டுவிட்டு அவ சாப்பிட, தேத்தண்ணீர் குடிக்க என்று பின்பக்கம் போனதுதான் தாமதம் - நான் கல்லாப்பெட்டியில் கை வைப்பேன்.

கல்லாப்பெட்டி என்று பெரிதாக ஒன்றுமில்லை. ஒரு பழைய தகரப்பேணி. மேல்மூடியில் அரைப்பகுதி வெட்டப்பட்டு, கைவிட்டு காசை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஒரு நாணயத்தோடு மற்ற நாணயங்கள் மோதி ஒலி எழுப்பாமல் மெதுவாக ஒரு இருபத்திஐந்து சதக்குற்றியோ, ஐம்பது சதக்குற்றியோ எடுத்து விடுவேன். அது அக்காலத்தில் பெரிய காசு.

பிறகு ஒரு நாள் கொழும்பில் நான் வேலை பார்க்கும் காலத்தில் ஒரு பிச்சைக்காரனுக்கு ஐம்பது சதம் போட, அவன் அதை திருப்பித்தந்து 'வைத்து தேத்தண்ணீர் குடியுங்கோ' என்று சொன்னதும் ஞாபகத்திற்கு வராமலில்லை. அதை நான் பக்குவமாக வாங்குவதைக் கண்ட என்னோடு வேலை பார்த்த நண்பன் ஒருவன் -

'மச்சான் என்னதானிருந்தாலும் நீ இந்த நிலைமைக்கு வருவாயெண்டு..' என்று பல நாட்களாக அறுத்துக் கொண்டிருந்தான் என்பது தனிக்கதை.

அப்படி அப்பாச்சியின் கல்லாப்பெட்டியில் எடுத்த ஐம்பது சதக்காசை பின்னேரம் இங்கிலீசு ரியூசனுக்குப் போகும்போது வழியில் இருந்த ஐயரின் கடையில் பல்லிமுட்டை இனிப்பு வாங்குவேன்.

ஐந்து சதத்திற்கே 'சிறங்கை' (கையால் அள்ளும் அளவு) நிரம்பி வழிய தருபவர், ஐம்பது சதத்திற்கு என் சாரத்தின் சண்டிக்கட்டில் அள்ளி நிறைத்து விடுவார்.

எனக்குள்ள ஒரே ஒரு பிரச்சினை. எங்கள் வீட்டிலிருந்து நாலைந்து ஒழுங்கை முடக்கு தாண்டியிருந்த இங்கிலீசு வாத்தியார் வீட்டுக்கு போவதிற்கிடையில் சாறத்து சண்டிக்கட்டில் உள்ளதை முடித்து விடவேண்டும். அங்கே போய் நிற்க வாத்தியார் -

'என்னடா சண்டிக்கட்டிலை.. அவிழ் ஒருக்கா' என்று கேட்டு, விசயம் தெரியவந்து வீட்டுக்கு செய்தி போனால் 'தோலுரித்தல்' தான் நடக்கும் என்று தெரியும்.

அள்ளி, அள்ளி சிறங்கைக் கணக்கில் வாயில் போட்டாலும் பல்லிமுட்டை இனிப்பு முடிகிற பாடாய்த் தெரியவில்லை. ஒரே ஒரு வழி. அள்ளிக் கொட்டுவதுதான். அதுவும் ஒரே இடத்தில் போட்டால் வில்லங்கம் என்று வழி, வழியே இருக்கிற பன்னை, பாவட்டை, அண்ணமுண்ணா (ஏன் இந்தப் பெயர் வந்ததுதென்று எனக்குத் தெரியவில்லை - எந்த அண்ணா உண்ணாமல் விட்டாரோ) மரங்களின் அடியில் எறிந்து கொண்டே போவேன். அந்த அண்ணமுண்ணா மரங்களின் பழங்கள் மிகவும் இனிப்பாக இருந்ததிற்கு நான் எறிந்த இனிப்புகளும் காரணமாக இருக்கலாம்.

## கடந்தது நடந்தது

எழுதுவது: **கே.எஸ்.பாலச்சந்திரன்**

நல்லதோ, கெட்டதோ எதற்கும் ஒரு நாள் முடிவு வரும் என்பார்கள். யாரோ ஒருத்தன் காட்டிக் கொடுத்து அல்லது போட்டுக் கொடுத்து விட, அன்றிலிருந்து அப்பாச்சியின் கடை என்னைப் பொறுத்த வரையில் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டதாய், தடை செய்யப்பட்ட பிராந்தியமாயிற்று.

அதன்பிறகு நான் ரியூசனுக்கு போகும் போதெல்லாம், பன்னை, பாவட்டை எல்லாம் என்னை பரிதாபமாகப் பார்த்தன. 'எனக்கே இனிப்பு என்ற சங்கதி இல்லை. உங்களுக்கு எப்படி தருவேன்' என்று சொல்லிக் கொள்வேன். பாரதி தனது வசன கவிதையில் கயிற்றோடு பேசிக் கொள்வதைப் போல என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படி இருக்கும்போது எங்கள் ஊரில் தேர்தல் வந்தது. அத்தோடு ஒற்றுமையாக இருந்த ஊர் மக்களே ஒவ்வொரு சின்னத்திற்கும் (தேர்தல் சின்னங்கள்) பின்னால் பிரிந்து சின்னாபின்னமாகிப் போனார்கள்.

இந்தப் பிரிவுகளினால் அப்பாச்சியின் கடையில் இருந்தும் பிரிந்து வேறு கூப்பன் கடைகளுக்குப் போனார்கள். போதாக்குறைக்கு சக்கடத்தார் சொன்ன ப.நோ.கூ. சங்கமும் வந்து மிச்சசொச்ச கூப்பன்காரரை தன்பக்கம் இழுத்துக் கொண்டது.

கூப்பன் கடை 'வெறுங்'கடையாகிப்போன கவலையுடன் அப்பாச்சியும் ஒருநாள் இறந்துபோக, என் அப்பா கடையை'பாரம்'எடுத்தார். அது உண்மையில்'பாரமாக'த் தான் இருந்தது. மிகுந்த சிரமத்துடன் நடத்திக் கொண்டிருந்தார்.

பள்ளிக்கூடத்தால் வந்தவுடன் நானே கடையில் நின்று வியாபாரம் செய்ய வேண்டி வந்தது.

இப்போழுதும் சோகப் படங்களைப் பார்த்துவிட்டு கண்ணீர் விடுகிற எனக்கு அந்த நாட்களில் சொல்லவா வேண்டும்.

யாராவது வந்து ஒரு வசனம் - 'தம்பி.. தோசைக்கு போடுவம் என்று பார்த்தால் உழுந்து இல்லை. பிள்ளையளுக்கு காலமை சாப்பாடு இல்லை' என்று 'தவமாய் தவமிருந்து' சேரன் எழுதிற வசனம் மாதிரி சொல்ல, உழுந்தைக் கொடுத்து அனுப்பி விடுவேன்.

கணக்கு எழுதி வைத்தால் அப்பா பேசுவார் என்ற பயத்தில் 'உழுந்துக் கடன்' அப்படியே போய்விடும். நான் இருக்கிற நேரம் பார்த்து பலரும் வரத் தொடங்கினார்கள். வியாபாரம் அமோகமாக நடந்தது. ஆனால் 'கல்லாப்பெட்டி' நிரம்பவில்லை.

போதும், போதாதற்கு 'இரட்டைப்பின்னல்' ஈஸ்வரி கையில் கிடைக்கிற ஒருசதம், இரண்டு சதத்தோடு அடிக்கடி வரத்தொடங்கினா(ள்).

நான் கைநிறைய இனிப்பு கொடுத்து அனுப்புவேன். பத்து நிமிசத்திலே இன்னுமொரு ஒரு சதத்துடன் ஆள் வந்து நிற்கும். இதற்கென்றே சில்லறையாக மாற்றி வைத்திருந்த சங்கதி பிறகுதான் எனக்கு தெரியவந்தது.

அண்மையில் கூட, பல் வைத்தியரிடம் போக நேர்ந்த பொழுது, தன்னுடைய 'ஞானப்பல்' சூத்தையாகப் போனதிற்கு நான் தந்த இனிப்புகள்தான் காரணமாம். அது 'ஞானம்' இருக்கிறவர்களுக்குத்தான் 'ஞானப்பல்' முளைக்கும் என்று சொல்லி நான் பட்ட பாடு..

இப்படி 'என் கடன் கடன் கொடுத்து இருப்பதே' என்று நான் நடக்கப் போய், ஒரு நாள் எங்கள் கடை நிரந்தரமாக பூட்டப்பட்டுப் போனது.

Faircut Barbers Ltd



தமிழ் பேசி தலைமுடி அலங்கரிக்கும் ஆள் உடன் தேவை?



தொடர்புகளுக்கு: Tel: 020 8767 3578
15 London Road
Tooting
SW17 9JR (Next to British Rail Station)

Opening Hours:
Monday - Thursday 10 am - 7 pm
Friday - Saturday 10 am - 8 pm
Sundays 10 am - 5 pm

English & Maths Tuition Classes

- Learn English in 30 days
- Preparation for Citizenship test
- 11+ exam preparation for 2008 students
- Maths classes for students - Primary up to G C S E

உங்களுக்கு ஆங்கிலமும் மாணவர்களுக்கு கணிதமும் கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 07939136038

ஆங்கிலம் துரிதமாக கற்றுக்கொள்ள விருப்பமா? நீங்கள் தொழில் அல்லது கல்வி ரீதியாக முன்னேறுவதற்கு ஆங்கிலம் தடையாக உள்ளதா? 30 வகுப்புகளில் துரிதமாக ஆங்கிலம் பயில மாணவர்கள் இளைஞர்கள் உட்பட எவரும் தொடர்பு கொள்ளலாம். சிறந்த அனுபவமுள்ள ஆசிரியரால் மிகவும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

HOUSE FOR SALE IN COLOMBO-SRILANKA

The 2 floor large house for sale at Colombo-Katunayakke main road mabola. (Just 100m inside the main road)

Ground Floor
Garage, hall with pond (open air)
Visiting bed room -
-(with attached bathroom)
Dining hall
Kitchen
Extra kitchen with servant toilet

First Floor
Balcony
Hall with TV launch
Office room
Pray room
washing room
Master bedroom (with attached bathroom) / instant hot water
Bed room (with attached bathroom) / instant hot water

Present market value of Perch is SL Rupee 600,000 Price included with high quality of furniture. Total Price: £ 90,000.00 or equal to SL Rs (Negotiable)
For More Details Please contact: Shri (UK) 0044 77 028 34761 or shri077@yahoo.co.uk
Keerthi (Colombo) 0094 773044526

MANAGEMENT OPPORTUNITY

Local Supermarket/Grocery Shop
For Under Management Available
Location: Bedford
Takings: £15000+£7000 Top Up /week
Further Details Please Contact:
07940591353 or 01234212409

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______
Address: ______
______
______
Postcode: ______
Telephone: ______
Email: ______

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# என் ஞாபகப் பதிவிலிருந்து...

சுதந்திரா
*( ஒரு பேப்பருக்காக )*



பட்டிகளாய் மாடுகள் எங்களையும் சில இடத்தில் மறித்துவிட்டு உம்பா....உம்மா....என அழைத்தபடி போயின. அது முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம். அழகாய் வடிவமைந்திருந்த அந்தத் துயிலுமில்ல வாசல் எங்களை வரவேற்கிறது. அங்கு அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அந்தப்புனிதர்கள் உறங்கும் அந்த மண்ணில் அடுத்த பக்கத்தில் சிறிதான தொரு கூடம். அந்தக்கூடத்தில்....சாந்தனின் உயிரைப்பிழியும் குரலில்' இங்கு வந்து பிறந்த பின்பே இருந்த இடம் தெரியும். நாளை சென்று விடும் தேதி சொல்ல இங்கெவரால் முடியும், வாழ்க்கையெனும் பயணம் இதை மாற்றிடவா முடியும்...." எனும் புதுவையின் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

அந்த இடத்திலேயே நின்றிருந்த என்னை வாங்கோக்கா சுத்திப்பாப்பம் என்றாள் நந்தா.

எங்களின் வாழ்தலுக்காய் உயிர்ப்பூவை எதிரியின் குகைபுகுந்து எறிந்த வித்துக்கள். தங்களது வாழ்தலின் இனிமையெல்லாம் துறந்த இனியவர்கள் தாயகம்...தாயகம்.... அவர்கள் தாகமாய் ஊற்றெடுக்க.... தலைவனின் வழியெழுந்த அபிமன்யுக்கள்.

அம்மாவின் நினைப்பும் அப்பாவின் நினைப்பும் அண்ணா , அக்கா ,தம்பி , தங்கை அன்புக்கினியவள், இனியவன் நினைவுகள் மறந்து தாயகம் என்பதே அவர்கள் தாகமாகிட தணலான சந்தனங்கள்....

மூச்சிருந்த மட்டும் அவர்கள் போராடியே நின்றார்கள் அது முடிந்த பின்னாலும் அண்ட கோள்களில் உலாவரும் அதிசயங்கள் இவர்கள் எங்கள் மாவீரர்கள்..... ஓ.... இனியவரே...! உங்களை வணங்குதற்காய் ஓடிவந்துள்ளேன். என்.....தோழர்களே....,! தோழியரே.......!

வீரவேங்கைகளாய், லெப்டினன்களாய், கப்டன்களாய், மேஜர்களாய் லெப்.கேணல் களாய், விரிந்திருந்த அந்த இடமெங்கும் துயில் கொள்ளும் புனிதர்களைப் தரிசித்தபடி நடக்கிறோம்.

உள்ளுக்குள் சொல்ல முடியா அதிர்வுகள். உடலும் மனமும் வலிக்கிறது. அந்தப் பூமியில் என்னால் அடியெடுத்து வைக்கக் கால்கள் பின்னிற்கின்றன. அந்த மண்ணில் உறங்கும் ஒவ்வொரு ஜீவனையும் எனது கால்கள் மிதிக்கின்றனவோ எனும் அச்சத்தில் கால்கள் கனக்கிறது. நெஞ்சினுள் நிறைய நினைவெல்லாம்....வந்து முட்டி நெஞ்சு கனக் கிறது....

அந்த வழியில் நின்றிருந்த ஒரு பூமரத்தின் பூவைப்பிடுங்க உயர்ந்த கைகள் அமைதியாகிறது.

அந்தப் பிரதேசத்தில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு கதை சொல்லும் என்றபடி ஒவ்வொரு பொருளும்.....யாரோ ஒருவீரனின் அல்லது வீராங்கனையின் நினை வோடு உயிரின் வாசம் சுமந்து நிற்கும் இந்தப் பூவை நான் பிடுங்க வேண்டாம் கைகள் பின்வாங்கி விடுகின்றன.

அங்கே பல விதைகுழிகள் வெட்டப் பட்டிருந்தன. இவை யாருக்காக? கேள்விக் கான பதில்கள் பாரமாகின.

துயிலுமில்லம் விட்டு வெளியே வருகிறோம். இரண்டு பெரிய பஸ்களில் இருந்து அந்தத் துயிலுமில்ல வாசலில் இறங்குகிறார்கள் ஆண்போராளிகளும், பெண்போராளிகளும்....

வாழ்வின் இனிய கணங்களின் அனுபவங்களை இனிமைகளையெல்லாம் மறுத்து இனவிடுதலை மட்டுமே கனவாய் வரித்து களம் வந்த காவியங்கள்.

### வாழ்வின் இனிய கணங்களின் அனுபவங்களை இனிமைகளை எல்லாம் மறுத்து இன விடுதலை மட்டுமே கனவாய் வரித்து களம் வந்த காவியங்கள்.

கட்டையாய், நெட்டையாய், கண்களில் ஞானஒளி தெறிக்கும் பார்வைகளும் ..... அவர்கள் கவனத்தில் அந்தத் துயிலுமில்லத் தோழர்களின் நினைவுகளாயிருக்க இறங்குகி றார்கள். என்னிலும் சிறியவர்கள்.....சிரிப்பும் , கலகலப்புமாய் அவர்கள் போகிறார்கள்.

மெலிதாய் பொழுது சாய்ந்து கொண் டிருந்தது. அந்தவீட்டின் படலையைத் திறந்து கொண்டு உள்ளே போகிறோம். வாசலில் ஒரு அம்மா.

உள்ளுக்கை வாங்கோ பிள்ளையள்.... மகள் உள்ளைதானிருக்கிறா.....வாங்கோ....

என எங்களை வரவேற்கிறா அந்த அம்மா. அழகான சிறிய வீடு. முன்முற்றத்தில் அம்மாவுக்கு முன் எங்களை வரவேற்ற அந்த வாழைமரக் குடும்பம். அந்த வாழைக் குடும்பம் என் வீட்டு முற்றத்தை என் நினை வேறுகிறது.

### செடிகளும், கொடிகளும்,மரங்களும் இப்போ மண்ணுள் புதைந்திருக்கும். அவை இருந்த இடம் தெரியாமல் அவர்கள் பாதைபோட்டுத் திரிவார்கள்.....

முற்றத்து நடுவில் துளசிச்செடி, அருகாய் வரிசையாய் கனகாம்பரமும், சீனியாசியும், செவ்வந்தியும், வாடாமல்லியும், அடர்ந்து வளர்ந்த றோஜாமரமும், கிணத்தடிப்பீலிக்குப் பக்கத்தில் சடைத்திருந்த எலுமிச்சை மாதுளையும், எல்லாருக்கும் உறவான எங்கள் வீட்டு நந்தியாவட்டையும், நித்திய கல்யாணியும்....இப்போ இருக்குமா....?

இல்லையில்லை எதிரியின் பிடியிலல்லவா இருக்கிறது அந்தச் செடிகளும் , கொடிகளும், மரங்களும். இப்போ மண்ணுள் புதைந்தி ருக்கும். அவை இருந்த இடம் தெரியாமல் அவர்கள் பாதைபோட்டுத் திரிவார்கள்.....

நாமிருந்த இடமும் அழிந்திருக்கும் என் வீட்டு வாழைகளும் இறந்து போய் நாளாயிருக்கும்.....அம்மம்மாவின்து உதிரத்தால் உருவான அந்தக் கல்வீடும் அடையாளம் இழந்திருக்கும்.....அம்பி வளவும் அருந்தவம் வளவும் விசுவம்மான் வளவும் ஆட்களின்றி அழுதிருக்கும்....

வீட்டுக்கு வடக்காயிருக்கும் வயிரவரும் விளக்கின்றி இருண்டிருப்பார்....வடமேற்காய் குடியிருக்கும் சிவகாமியம்மனும் நாகபூசணியும்பின்வளவுப்பெரும்பனைகளின் துணையோடு துயரில் துடித்திருக்கும்....

எங்கள் ஊர் மூத்தவர்கள் உதிரத்தால் உயர்ந்த நிலம் உயிர்கள் ஏதுமின்றி உருவளிந்து போயிருக்கும்.....பேய்கள் மட்டுமே அங்கு போயுலவித் திரியும்....



உ
பத்திரகாளி அம்மன் துணை

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தினால் பராமரிக்கப்படும் எமது உடன் பிறப்புகளின் நலன் கருதி.

திருநெல்வேலி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் இளங்கலைஞர் (இங்கிலாந்து வாழ்) மன்றத்தினரால் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 6 வருடங்களின் பின் இங்கிலாந்தில் 3 (மூன்றாவது) தடவையாக மேடையேற்றப்படும்

"காத்தவராயன் சிந்து நடைக் கூத்து"

NOVEMBER 03
சனிக்கிழமை
சரியாக
மாலை 5 மணி
03.11.2007



**ASHBURTON LEARNING CENTRE**
**(TAMIL SCHOOL)**
SHIRLEY ROAD
CROYDON
SURREY
CR9 7AL

தொடர்புகளுக்கு;
செந்தூரன் 07834 777 171
செல்வன் 07956 068 849
அருள் 07743 896 913

அனுமதி சீட்டு
தனிநபர் £8
குடும்பம் £20

# ஒரு குடிகாரன் உருவான கதை



பெரிய குடிகாரனாக என்னைப் புரிந்து கொள்ளும் உங்களிற் பலருக்கு நான் குடிகாரனான கதை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனாலென்ன? கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியளவுக்கு இதுவொன்றும் முக்கியமானதன்று. என் அலட்டல்களை விழுந்துவிழுந்து வாசிக்க நானொன்றும் புரட்சிக்காரனோ கலகக்காரனோ அல்லன். விரல்கள் குறுகுறுத்த விசர்ப் பொழுதொன்றில் எழுதப்பட்ட என் குடிப் புராணத்தைப் படிக்க விரும்புவோர் மேற்கொண்டு படிக்கலாம்.

சரி நான் குடிக்குப் பிள்ளையார் சுழி போடுற நாளும் வந்தது.அரைப் போத்தல் கள்ளை வாங்கி வீட்டில குடிச்சா ஆட்டத்தில் சேர்த்தியில்லை. தவறணையில குடிச்சால் மட்டுமே குடிகாரராக் கணக்கெடுபடும். அதால தவறணையில குடிக்கிறதெண்டு முடிவெடுத்தம்

Mark Zuckerberg: That depends. There are two modes. I keep programmer time sometimes. When you're at your computer you can get distracted by other people, so programmers tend to stay up really late and work when everyone else is asleep. So it's not really uncommon for me to stay up until 6 or 8 in the morning. The other mode is when I have a meeting. The business world does not operate between 5 pm and 8 am, so that requires some waking up for. The two kind of go together well because sometimes I'm waking up at 8 am and sometimes I'm going to bed at 8 am. So I'll go for three days without sleeping, which is really sweet.

CM: What about breakfast?

MZ: I haven't eaten breakfast in a long time. The only time I eat breakfast is when I have meetings that early in the morning. Usually it's a late lunch and then a late dinner and then a second dinner at Jack in the Box.

CM: Tell me about how thefacebook got started.

MZ: The idea for the website was motivated by a social need at Harvard to be able to identify people in other residential houses—Harvard is a fairly unfriendly place. While each residential house listed directories of their residents, I wanted one online directory where all students could be listed. And I've always enjoyed building things and puttering around with computer code, so I sat down and in about a week I had produced the basic workings of the site.

CM: Your website was one of the first social networking sites to explicitly ground its online community on a physical one.

MZ: That's why I think the website has been such a success. We don't view the site as an online community—we bill it as a directory that is reinforcing a physical community. What exists on the site is a mirror image of what exists in real life.

CM: But at the same time, can't thefacebook distort people's perceptions of the real world?

MZ: To a certain extent, the website is unfortunate because it oversimplifies things. Everybody's concept of having a friend is different. It can definitely blur the relationships that exist between people. But in the end, I think that thefacebook can only reinforce preexisting communities. We think we have been particularly successful in strengthening those relationships that exist between people who are only "fringe friends."

CM: So in your view, are there any negative aspects to the website?

MZ: Oh sure, there are. It's not unusual for us to receive an email from somebody saying, "I spend all of my time on your website and now I have less of a social life than I had before." We would much rather have people meet people through the website and go out and party than stay at home on a Friday night reading other people's profiles. And it's surprising, but we have actually received far less complaints about stalking than we otherwise would have expected.

CM: Has Bill Gates called you yet?

MZ: No. I don't think Bill Gates makes phone calls. I'm not sure that he'd be the one to call me if Microsoft got in touch with us, but it'd be sweet if he did.

CM: What's your favorite gadget?

MZ: I have a minicomputer that I carry around, it's a mini Sony VAIO. We named it Tinkerbell.

CM: Speaking of legal issues, what's the deal with this lawsuit against you, in 15 words or less?

MZ: Well, a waste of time and money. It's not going anywhere, they have no chance.

CM: If you could have dinner with someone, dead or alive, who would it be?

MZ: Achilles. I could reach across the table and say, "Now you know who you are fighting."

CM: How did gym class in middle school work out for you?

MZ: Gym was sweet. I actually used to be athletic. Before I went to Exeter at the end of high school, I went to public school and actually played three varsity sports. Then I got to Exeter and I was like, uhh, now I'm gonna program. I did crew, and tennis—preppy sports.

CM: Have you benefitted socially from the website?

MZ: I get more out of making the site and hearing from people who have benefitted from the site than actually using it. But the other weekend some friends and I were down in L.A. and we were able to throw an impromptu party after messaging some random people we didn't know at UCLA. That was pretty cool.


**Hall Hire**

**The Hartley Centre**

Hall Hire Charges

Saturaday: Hall 4.30pm – 11.30pm
Price:£60 per hour
kitchen £30(flat rate) + Deposit of £125
Chairs for hire

Sunday: Hall 4.00pm – 11.30pm
Price: £60 per hour
Kitchen £30(Flat Rate) + Deposit of £125

267 Barking Road, Eastham, London E6 1LB
Contact: Siva (Balan) - Tel: 07932 066 483

**GRAND CONSTRUCTIONS**

Professionally Qualified Engineers with 10 Years Experience

•Obtaining Planning Permissions & Building Control
•All Types of Consultancy & Drawings (Architectural & Structural)
•All Types of Quality Construction & Repairs
•Cost Saving Advices and Free Estimates

Contact: 07912615876 or 07886532103

***Legal Secretary***

Solicitor firm based in Wimbledon requires an enthusiastic Secretary to work in our busy Conveyancing and Immigration Departments. Priority will be given to the applicants who can speak Tamil fluently.

Good IT skills and relevant experience important.
Excellent Prospects!

*Please apply with CV to*
**Oru Paper,** 45B, Crusoe Road, Mitcham, Surrey CR4 3LG


MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors & Administrators for Oath
M Markandan LLB A Uddin ( Hons ) MA LLB Phd-RFL
Tamil House, 720 Romford Rd, London E12 6BT

For any & every legal matters

tel 020 8514 8300 / 07830 285 634
fax 020 8514 8381
email info@msssolicitors.com
Markandan : 07956 386 576
Uddin : 07957 455 670

Markandan & Uddin Solicitors

# பறக்கும் தட்டுக்கள்- 8 (FLYING SAUCERS)



அடங்காப்பற்று மயூரன்
*(ஒரு பேப்பருக்காக)*

மே மாதம் 1940ஆண்டு மொன்ரானா என்ற அமெரிக்க நகரத்தில்' காணப்படுகின்ற பவுல்டர் மலைப்பகுதியில் உடோவாரெனா(udo wartena) என்பவர் 35அடி உயரமும். நூறு அடி அகலமும் உடைய வட்டவடிவான பொருளைக்கண்ணுற்றார்.

இரண்டு குவளைகளை சேர்த்து வைத்தால் அது எப்படியிருக்குமோ அதேபோல் இருந்ததாகவும் அதிலிருந்து வந்த சிறிய இரண்டு மனிதர்கள் வெளியே வந்து வாரெனாவிடம் கொஞ்சம் தண்ணீர் எடுக்கலாமா? எனக்கேட்டு வாரெனா அருகில் வந்து அவரைத் தமது கலத்திற்குக் கூட்டிச்சென்றதாகவும் உள்ளே மேலும் ஒருவர் இருந்ததாகவும் அவர்கள் தாங்கள் வேற்றுக்கிரகத்திலிருந்து வந்ததாகவும் தங்களுக்கு வயது 609 எனவும் தெரிவித்தனர் என கூறினார். (Warren Aston, ufo magazine march/ april 1998)

நான் ஏற்கனவே முதல் தொடரில் கூறியதுபோல் வேற்றுக்கிரக வாசிகளின் ஆய்வுக்குட்பட்ட எம்மவர்கள் இவ்வேற்றுக்கிரக வாசிகள் பேசியதை எவரும் காணவில்லை என்று கூறியதும் நினைவில் கொள்ளத்தக்கது.

இவர்கள் ரெலிபதி மூலமே தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளலாம் என நம்பப்படும் போது இவர் இவ்வாறு எந்தவித ஆக்கபூர்வமான அறிவியலும் இல்லாது கூறியிருப்பதானது நகைப்புக்குரியது. அத்துடன் வேற்றுக்கிரக வாசிகள் தங்களுக்கு வயது 609 எனத் தெரிவித்திருப்பதானது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. சில வேளைகளில் இது இவரது கற்பனையில் எழுந்த கட்டுக்கதையாகவும் இருக்க வாய்ப்பு உண்டல்லவா!

1941ல் கேப் கிரார்டியா மிசூரி எனும் அமெரிக்கப் பிரதேசத்தில் வாழ்ந்த வில்லியம் காவ்மன் என்ற பாதிரியார் வேற்றுக்கிரக மனிதன் தன்னிடம் வந்து விபத்துக்குள்ளான மூன்று வேற்றுக்கிரக மனிதனின் உடல்களைக் காட்டியதாகவும். அவர்களுக்காக தன்னைப் பிரார்த்திக்கும் படியும் அவ்வேற்றுக்கிரக மனிதன் கேட்டுக்கொண்டதாகவும் கூறினார்.

அவ்வுடல்களானது தலை சிறியனவாகவும் கண் பெரியனவாகவும் உதடுகளும் தலைமயிரும் அற்று காணப்பட்டனவாகவும் கூறிப்பரபரப்பை ஏற்படுத்தினார். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை. (ufoartwork.com)

1947ல் அமெரிக்காவின் மெக்சிக்கோவில் உள்ள ரோஸ்வெல் [Roswell] நகரில் நடந்த சம்பவம் உலகை உலுக்கியது. யூலை மாதம் 2ம் திகதி பிரகாசமான தட்டுப்போன்றதொன்று அமெரிக்க வானில் தென்பட்டது. மறுநாள் அது உடைந்து அதன் உடைந்துபோன பகுதிகள் சிதறிக்கிடப்பதை மாட்டுப்பண்ணையின் நிர்வாகி ஒருவரும் அவரின் இரண்டு பிள்ளைகளும் பார்த்தனர். உடனே அவர்களால் இராணுவத்தினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

பின்அதை ஆராய்ந்த அதிகாரிகள் அது பறக்கும் தட்டினுடைய பாகங்கள் என அதிகாரபூர்வமாக அறிவித்தனர். இதைத்தொடர்ந்து இரண்டாவது நாள் மீண்டும் ஒரு அறிக்கை அவர்களால் வெளியிடப்பட்டது.

அதில் காலநிலையை அறிய பறக்கவிடப்படும் பலூனின் பாகங்கள் அவை என அறிவிக்கப்பட்டு பத்திரிகைகளுக்கு பலூனினது பாகங்களும் காட்டப்பட்டது.( Roswell online, roswel daily record news paper, ) இதில் உள்ள உண்மை என்னவென்றால் பறக்கும் தட்டினுடைய பாகங்கள் எவருக்கும் தெரியாமல் சோதனைக்காக அனுப்பப்பட்டது என்பதுதான்.

அத்துடன் இதைப்பார்த்தவர்கள் (பறக்கும் தட்டை) அதிலிருந்த மனிதர்களை இவ்வாறு வர்ணிக்கின்றனர். 'மனிதர்களைப்போல இருந்தார்களே தவிர அவர்கள் மனிதர்கள் அல்ல.

தலை முக்கோண வடிவமாக இருந்தது. கண்கள் மிகச் சிறியனவாகவும் அதற்கு இடையேயான இடைவெளி அதிகம் இருந்தது. தலையில் முடி இல்லை நம்மைவிட சிறியவடிவத்துடன் இருந்தார்கள். உடலுடன் ஒப்பிட்டால் தலை மிகப் பெரியனவாக இருந்தது. அதில் பலர் இருந்தனர். எல்லோருமே ஆண்கள். ராணுவத்தினர் உடனே அங்கு வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த எங்களை வெளியேற்றிவிட்டனர். அத்துடன் நாங்கள் பார்த்ததை வெளியில் எவரிடமும் சொல்லக் கூடாது என்றும் கட்டளையிட்டனர்.' எனக்கூறினர்.

அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹரி ட்ருமன் Harry Truman என்பவர் UFO (unidentified flying objects)பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறி ஒரு குழுவை நியமித்தார். ஆனால் அதற்குப்பிறகு அவரின் பின் ஜனாதிபதியாக வந்த டுவைட் ஐஸன்ஹோவரிடம் அந்தக் குழு அதைப்பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அதில்இப்பறக்கும்தட்டுவிபத்துக்குள்ளானஇடத்திற்கு இரண்டு மைல் தொலைவில் நான்கு விண்வெளி மனிதர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனக்குறிப்பிட்டுள்ளது. அத்துடன் UFO ஆராய்ச்சியை ரகசியமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி டுவைட் ஐஸன்ஹேவருக்கு அந்தக்குழு சிபாரிசு செய்தது.

மேலும் அதில் கூறப்பட்டிருப்பதாவது ஹதேசிய பாதுகாப்பின் முக்கியத்துவம் இந்த விண்வெளி மனிதர்களால் எப்படிப்பாதிக்கப்படும். என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவர்களின் நோக்கங்களும் எமக்குப் புரியவில்லை. இதன் காரணமாகவும் சர்வதேசதொழில் நுட்பம் பாதிப்புக்கு உள்ளாகாமல் இருக்கவும். பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தாமல் தடுக்கவும் இந்த ஆராய்ச்சி விவரங்களை ரகசியமாக வைத்திருப்பது அவசியம் எனவே இது மிக உயர்ந்த ரகசியமாக வைக்கப்பட வேண்டும். எனவும் இக்குழு பரிந்துரை செய்கிறது. ' என்பதுதான் அதில் கூறப்பட்ட கருத்தாகும்

*(தொடரும்)*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## மனத் தவிப்பும் பயமும் - பாகம் 1 .

Dr. பாலேந்திரன்
*(ஒரு பேப்பருக்காக)*

நம்மில் பலர் தூக்கத்திலிருந்து திடீரென விழிப்படைவோம், அத்துடன் மூச்சு அடைப்பது போன்ற உணர்வும், இருதயம் மிகவேகமாக துடிப்பதும், நா உலர்ந்து தொண்டை அடைத்துப் போய் பேச முடியாது போகும். விழித்து சில நிமிடங்களில் நிலமை சீராக வந்துவிடும். மருத்துவர் பரிசோதனை செய்தால் எவ்வித நோயும் காணப்படாது. வேறு சிலர் மேடையில் ஏறிப்போக வேண்டிய சமயத்தில் அல்லது வேலை செய்யுமிடத்தில் ஒரு கூட்டத்தில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டால் மிகவும் பயந்து, கைகால் நடுங்கி, வியர்த்து பேசமுடியாது போகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களை Panic attacks, Anxiety, Phobia போன்றன ஏற்படுத்துகின்றன.

சாதாரணமாக ஒருவர் பய உணர்வடையும் போது பயத்துக்கான சூழ்நிலை, அல்லது காரணமானவர்களை இனம் காண முடியும். ஆனால் ஒருவருக்கு இவ்வாறான காரணிகளை இனம் கண்டு கொள்ள முடியாத போதும்,இனம் புரியாத ஒரு பய உணர்வு உள்மனதை முழுமையாகப் பாதித்து அதனால் தனது நாளாந்த வாழ்க்கை முறையை இயல்பாக நடாத்த முடியாது தடுமாறுவாரானால், அந்த நிலைமை Anxiety எனப்படும். இவ் Anxiety ஒருவரின் உடலை முழுமையாகப் பாதிக்கும். அந்த நேரத்தில் உடல் இயக்க மாற்றங்கள் ஏற்படும். அவரின் பண்புகள் மாற்றமடையும், உளரீதியான மாற்றங்கள் உருவாகும். இந்த நிலைமைகளில் இருதயம் வேகமாகத் துடித்தல், தசைகள் இறுக்கமடைந்து செயல் அற்றுப் போதல், வாய் உலர்ந்து போதல், வியர்த்தல் போன்றன காணப்படும்.

இன்றைய உலகில் நாளாந்த வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் தற்காலிகமான, குறைந்த அளவு அல்லது நடுத்தர அளவு Anxiety யை ஏற்படுத்தும். ஆனால் இந்த அளவு அதிகரித்து செல்லும்போது பிரச்சினை உருவாகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர் தனது நாளாந்த வாழ்க்கை முறையை கடைப்படிக்க முடியாது போகும். இவ்வாறு Anxiety ன் அளவினைக் கணித்து நோய் நிலையை நிர்ணயிக்க முறை DSM – IV (Diagnostic and statistical Manual of mental disorder ) பயன்படுத்தவும்.

சிலருக்கு Panic Disorder என்னும் நோய் காணப்படும். இதன்போது திடீரென அதிக பய உணர்வுக்கு ஆளாகுவார்கள். அந்தநிலையில் மூச்சுத்திணறல், இருதயம் வேகமாகத் துடித்தல், மயக்கம், தலைச்சுற்று, நடுக்கம், வியர்த்தல், வாந்தி, உடல் விறைப்பு, நெஞ்சு வலி, மரணப்பயம் என்பன ஏற்படும். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் சிகிச்சைகள் பயன்தரும்.

Relaxation Training - சுவாசப் பயிற்சி, யோகாசனம், ஆயர்வேத மசாஜ் போன்றன பயன்தரும்.

Panic Control Therapy - இதில் Hypnosis, positive thinking auto suggestion போன்ற சிலமுறைகள் பயன்படுத்தப்படும்.

மருந்துவகை - Antidepressantமருந்துகள் பயன்படுத்தப்படும்.

Life style change - இந்த முறை நிலையான முன்னேற்றத்தைத் தரும்.

சிலருக்கு தமது வீட்டுக்கு வெளியே போகவும், முக்கியமான முன்பழக்கம் அற்ற இடத்துக்கு போவதும் மிகவும் பயமளிக்கும். இது Agrophobia எனப்படும். இவர்களில் பின்வரும் குணங்கள் காணப்படும்.

கூட்டம் நிறைந்த இடங்களுக்குப் போகப் பயப்படுவர்.

சுரங்கப்பாதை, பாலம், Lift போன்றனவற்றில் போகப் பயப்படுவர்.

புகையிரதம், விமானம், போன்றவற்றில் போகப் பயப்படுவர்.

எப்போதும் தனது வீட்டிலேயே இருப்பர்.

இவர்களுக்குப் பெரும்பாலும் தமக்குப் பழக்கமான மனிதர், இடம் போன்றவற்றில் இருக்கும்போது மிகவும் பாதுகாப்பாக உணர்வார்கள். ஆனால் அன்னிய பூமி, மனிதர் மத்தியில் தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவற்றை இழந்து தனிமையான உணர்வை அடைகின்றனர். இந்நோய் பெரும்பாலும் பாரதுாரமான துன்பகரமான ஒரு முன் அனுபவத்தைத் தொடர்ந்தே ஏற்படுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் சிகிச்சைகள் பயன்தரும்.

Counsiling    Relaxation training    Exposure

Cognitive Therapy மருந்துவகை:- Low doses of Tranquilizers

Assertiveness Training.    Group Therapy

TRICO - The name you can trust

Door to Door Service
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta

Two more collection points:
Glasgow and South West London
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக Tooting இல்
Collecting point!

Contact Vimal
Tel: 020 8672 5551
Fax: 020 8889 5445
Email: tricont@btclick.com

A - Lanka
171 Tooting High Street,
London SW17

HOT NEWS
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

Trico International Shipping Ltd.
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

# ஏழைகளின் காற்றைக் கடன்வாங்கி ...



'Ignorance is bliss'. எவ்வளவு மெய்யான கூற்று. கார், மோட்டார் சைக்கிள் போன்ற பிரத்தியேக வாகனங்களின் மீது பெரும்பாலானோருக்கு ஆசையிருக்கும். எனக்கும்தான். தாயகத்திலிருந்த காலத்தில் மோட்டார் சைக்கிள் வாங்கியபோதும் வெளிநாடு வந்த காலத்தில் கார் வாங்கியபோதும் அதீத மகிழ்ச்சி.

பின்விளைவுகளை பற்றி அறிந்திருக்க வில்லை. அதனால் எந்த கவலைக்கும் இடமில்லை. பின் புவி சூடாதலைப்பற்றி படித்துக் கொண்டிருக்கும் பொழுது தோராயமாக கணக்கிட்டு பார்த்தேன். இதுவரை ஏறக்குறைய 30000 மைல்கள் காரிலும் 15000 கிமீ மோட்டார் சைக்கிளிலும் பயணித்திருப்பேன். ஏழு ஆண்டுகளில் மொத்த கரியமிலவாயுவின் வெளியீடு ஏற க்குறைய 11808 கிலோ.

இதே போல உலகத்தில் இருக்கும் அனை வரும் கரியமில வாயுவை வெளியிட்டால் இந்நேரத்திற்கு உலகம் வீனசாயிருக்கும் என்று நினைக்கிறேன்.

என்னைப் போன்றோர்கள் வங்கியில் இருந்து காசை மட்டுமல்ல ஏழை களிடம் இருந்து காற்றையும் கடன் வாங்கித்தான் கார் மோட்டார் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருக்கிறோம் என்று உணரும் பொழுதெல்லாம் உள்மனது குத்திக்கொண்டே இருக்கிறது.

சொந்தக்கதை ஒருபுறம் இருக்கட்டும். 12000 கி.மீ விட்டமுள்ள பூமியின் வளிமண்டலம் 100 கி.மீ தடிமனானது என்றால் அதற்கென்ன என்றுதான் எல்லோரும் கேட்போம். அது எவ்வளவு fragile ஆனது என்று உடன் கண்முன் வருவதில்லை.

உலகம் வெங்காயம் என்றால் வெங்காயத் தோல்தான் வளிமண்டலம். அந்த வெங்காயத் தோல்தான் 50 கோடி ஆண்டுகளாக உலகில் உயிரினங்கள் இருப்பதற்கான மிக மிக மிக மிக மிக அடிப்படையான காரணி. அதைத்தான் கடந்த வெறும் 150 ஆண்டுகளில் அதிவேகமாக மனித இனம் சீர்குலைத்து வருகிறது.

பூமியில் மனிதர்கள் தோன்றி இலட்சத்திற்கும் மேலான ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் கடந்த நூற்றாண்டில் தான் தொழிநுட்ப ரீதியாக மிகவும் வேகமாக முன்னேற்ற மடைந்து வருகிறோம்.

இது ஒரு புறத்தில் ஆரோக்கியமானதாக இருந்த போதிலும் மறுபுறத்தில் உலக அழிவிற்கும் இதுவே காரணமாகிக் கொண்டிருக்கிறது.

மில்லியன் ஆண்டுகளாக பூமியில் உறை பனிக் காலமும்;(Ice Age) - வெதுப்பான காலமும் (warm periods) மாறி மாறி நிகழ்ந்து வந்திருக்கின்றன. இதுமிலன்கோவிச்சைக்கிள் எனும் தேற்றத்தால் விளக்கப்படுகிறது.

அதீத குளிரினால் மனித இனம் அதிகம் முன்னேற்றம் அடைய முடியவில்லை. மிலன்கோவிச் சுழற்சியின்படி சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன் வரவேண்டியிருந்த உறைபனிக் காலம் வரவில்லை. அதற்கு காரணமாக இந்த கரியமிலம்தான் கூறப்படுகிறது.

அதிக அளவில் ஏற்பட்ட கரியமிலத்தினால் புவியின் சராசரி வெப்பநிலை அதிகமாக விருந்து உறைபனிக்காலத்தை தவிர்த்து விட்டது.

வெதுப்பான தட்பவெப்பநிலை மனிதர்களின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தது. தொடர்ந்து ஏற்பட்ட நாகரிகங்களின் வளர்ச்சியின் உச்சி யில் தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எல்லா உயிர்களின் இயக்கத்திற்கு மூலமான ஆற்றல் சூரியனிடமிருந்துதான் வருகின்றது.

பச்சையங்கள் சூரிய ஆற்றலைக் கொண்டு உணவையும் விறகுகளையும் படைக்கின்றன. அவற்றைக் கொண்டுதான் மனிதர்களும் மற்ற உயிரினங்களும் இயங்குகின்றன.

சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன் மனிதர்களின் ஆற்றலுக்கான தேவை விறகுகளைத் தாண்டி அதிகரித்த பொழுது 'வெளிச்சப் புதையல் (burried sunshine) வெளியே வந்தது.

500 மில்லியன் ஆண்டுகளாக சூரிய ஆற்ற லைத் தன்னுள் தேக்கிக் கொண்டு மண்ணுள் புதையுண்ட மரங்களும் கடலுயிரிகளும் நிலக்கரியாகவும் கச்சா எண்ணையாகவும் வெளிவந்து மனிதர்களின் ஆற்றல் தாகத்தை தீர்க்க முயல்கின்றன.

தனி ஒரு மனிதனின் ஆற்றலுக்கான தேவை அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே வெளையில் மனிதர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

1986ம் ஆண்டு இதில் ஒரு முக்கியமானது. அந்த ஆண்டில்தான் மனித இனத்தின் மொத்த ஆற்றல் தேவை சூரியனில் இருந்து இயல்பாக கிடைக்கும் ஆற்றலை விட அதிகமானது.

இன்றையளவில் நாம் கிடைப்பதைவிட 20 சதவீதம் அதிகம் நுகர்கிறோம். இந்த பற்றா க்குறையை சமன் செய்வது வெளிச்சப் புதையலான கரிம எரிபொருட்கள்தான்.


இது ஒருபுறமிருக்க, இப்போதைய அவசர பிரச்சனை என்னவென்றால் வெளிச்சப் புதையலுடன் வெளிவரும் கரியமிலம்தான்.

கடந்த 150 ஆண்டுகளில் மனிதர்களின் ஆற்றல் பயன்பாடு ஏறக்குறைய 224 பில்லியன் டன்கள் கரியமிலத்தை வளியில் சேர்த்திருக்கிறது. உலக மக்கள்தொகை இன்னும் 50 ஆண்டுகளில் 9.5 பில்லியன்களாகும்.

மக்களின் நிலக்கரி,பெட்ரோலிய பயன்பாடும் அதிகரிக்குமாயின் கரியமில வெளியீடு பலமடங்காக உயரும். அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல வளியில் கரியமிலத்தின் பங்கு மிக அதிகமாக இருப்பதால் அடுத்த 100 ஆண்டுகளில் சராசரி வெப்பநிலை 1.1 லிருந்து 6.4 வரை அதிகரிக்கலாம்.

இது மிக சிறிய மாற்றமாகத் தோன்றலாம். ஆனால் இதன் விளைவுகள் பயங்கரமான தாக இருக்கலாமென்றும் உயிரினங்களின் மொத்த அழிவிற்கே வழிகோளலாம் என்றும் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

- ஜே.கே

# Herba Naturelle´s

*Natural Health clinic*

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இயற்கையான மாற்று சிகிச்சை முறைகள்:

* Herbal Medicine
* Acupuncture
* Aroma therapy
* Homeopathy
* Psycotherapy
* Osteopathy
* Nutritional therapy
* Reflexology
* Indian Head Massage
* Chiropody
* Sports Massage

ஆகியன வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு சிகிச்சை முறையையும், தகுதி பெற்ற பயிற்றப்பட்ட, நீண்ட கால அனுபவமுள்ள சிகிச்சையாளர்கள் வழங்குவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

**Natural Health Clinic**
351a Whitehorse Road
Croydon CRO 2HS

**Call: 0208 6648720**

வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
**"ஆரோக்கிய வாழ்வு"**
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

சிறுகதை

# கொம்பியுட்டர்

படைத்தவர்

**பொன். அம்பலத்தார்**

என்ரை அவ கொஞ்ச நாளா

"இஞ்சாருங்கோ எங்களுக்கு முந்தி வந்ததுகளெல்லாம் சொந்தவீடு, சிட்டிசன்சிப் எண்டு ஒரு பந்தாவோட இருக்குதுகள். முந்த நாள் வந்ததுகள்கூட இன்ரநெற், ஈமெயில் எண்டு பீத்திக்கொண்டு திரியுதுகள்.ஒரு சபை சந்திக்குப்போனால் எனக்குச் சொல்லுறதுக்கு ஒரு விசயம்கூட இல்லாமல் வெக்கமாக் கிடக் கப்பா, இப்படியே போனால் ஒரு சனமும் எங்களை மதியாதுகள். புதுசா ஒரு கொம்பியு ட்டர் வகுப்புத் தொடங்குதாம், நீங்கள் அதுக் கெண்டாலும் போங்கோ அப்பதான் நாங்களும் கொஞ்சம் தலை நிமிரலாம்"

எண்டு ஒரே ஆக்கினை. எனக்கும் விசயம் நல்லாத்தான் தெரிஞ்சுது. உடனை

"நீர் சொல்லுறதும் நல்லாத்தான் கிடக்கு, ஆனாலும் எனக்கு இந்த வயசிலை தனியப் போக வெக்கமாக் கிடக்கப்பா நீரும் வாற தென்றால் சொல்லும் இரண்டு பேருமாப் போவம்" எண்டன்.

ஒரு வழியா சேல் போட்டிருக்கிறானெண்டு அறிஞ்சு ஓடிப்போய் ஒரு கொம்பியுட்டரையும் வாங்கிக் கொண்டு வந்து வரவேற்பறையிலை வாறவையளுக்கெல்லாம் வடிவாத் தெரியிற மாதிரி சோக்கேசுக்குப் பக்கத்திலை வச்சுப் போட்டு வகுப்புக்கும் போகத் தொடங்கினம்.

எனக்கெண்டால் வாத்தி கெதியில ஈமெயில், மற்றது கொம்பியுட்டருக்காலை கதைக் கிறதுகளை படிப்பிச்சுப் போட்டுதெண்டால் தபால் செலவு, ரெலிபோன் காசெல்லாம் சரி யான மிச்சம் தானென்று ஒரே புளுகந்தான்.

ஆனாலும் வாத்தி என்னடா என்டால் பைனறி சிஸ்டம், விண்டோஸ்,காட்வெயார், சொப்ற் வெயார் என்று என்ரை கொம்பியுட்டரிலை இல்லாத விசயங்களா ஏதோ கதையளந்து கொண்டு போகுதே தவிர எப்பத்தான் எங்களு க்குத் தெரிஞ்ச விசயங்களைச் சொல்லித் தரப்போகுதோ எண்டு எனக்கு ஒரே சந்தேகந்தான் !

பொறுக்கேலாமல் வகுப்பிலை அடிக்கடி வாத்தி கேக்கிற கேள்விகளுக்கு டக்,டக் எண்டு பதில் சொல்லுற சின்னவனை எனக்குப் பக்கத்திலை கூப்பிட்டிருத்தி

"எடதம்பி உந்தாள் எப்படா படமடிக்கவும், ஈமெயில் எழுதவும் சொல்லித்தரும்"

எண்டு கேட்டன்.

"அண்ணை உங்களுக்கு விசயம்தெரியாதே உந்தாள் இருவது,முப்பது வருசத்துக்கு முந்திப் படிச்சவர், அப்ப எல்லாம் விண்டோஸ், ஈமெயில் எல்லாம் வரேல்லை, அதாலை அவருக்கு அவ்வளவாத் தெரியாது, அதுதான் அந்தாள் உதுகளைப் படிப்பிக்குதில்லை".

எனக்கும் பெடியன் சொல்லுறது சரிபோலத் தான் கிடந்துது. சும்மா சொல்லக்கூடாது உவன் முந்தியொருநாள் சொன்னவன் தானாகவே கண்டுபிடிச்சு பாட்டெல்லாம் டவுண்லோட் பண்ணிக் கேக்கிறனான் என்று, அவன் சொன்னால் சரியாத்தான் இருக்கும்.

ஒருவிசயத்தைச் சொல்ல மறந்து போனன். எங்கடை வகுப்பிலை ஒரு சின்னப் பொடிச்சியும் படிச்சவள். அவள் டஸ், புஸ் எண்டு வாத்தியை இங்கிலீசிலையெல்லாம் கேள்வி கேக்கிறவள்

அவள் ஒருநாள் சின்னவனிட்டை எனக்கு ஒரு டவுட் சொல்லித் தாறியளோ? என்றாள். சின்னவனெண்டால் முகமெல்லாம் பல்லாக ஏனில்லை எண்டு கேட்டுப்போட்டு எங்களை யெல்லாம் விலாசமாத் திரும்பிப்பாத்தான்.

நான் இங்க போனமுறை மாஸ்டர் கொம்பியுட்டரிலை சொல்லித் தந்த விசயத்தை வீட்டிலை போய் வடிவாச்செய்து பாப்பமெண்டு என்ர டடி எனக்கெண்டு புதுசா வாங்கின கொம்பியுட்டரிலை செய்து பாத்தால் அந்த விசயமொண்டும் எங்கட கொம்பியுட்டரிலை வரமாட்டனெண்டுது, அதில எல்லா புது புறோ கிறாமும் இருக்கு..... அப்பிடி இருந்தும் இது வருதில்லை. அதுதான் எனக்கு ஏனெண்டு விளங்கமாட்டுதாம். எண்டாள்.

நீங்கள் கொம்பியுட்டரிலை டிஸ்கற்றைப் போட்டனிங்களே எண்டு சின்னவன் கேக்க ஓமோம் அதெல்லாம் புதுசா வாங்கி வைத்திருக்கிறன் எண்டாள்.

நீங்கள் புது டிஸ்கற்றைப் போடுறது சரி சிஸ்டர் ஆனால் இங்கை வேலை செய்யேக்கை பாவிச்ச டிஸ்கற்றை உங்கட வீட்டுக் கொம்பியுட் டரிலை போட்டனிங்களோ எண்டான். பொடிச்சி முழியை உருட்டினாள். சின்னவனுக்குத் தான் சிக்கலைக் கண்டுபிடிச்சதில ஒரே பெருமை. அதைப் போட்டால்தானே சிஸ்டர் இஞ்ச நீங்கள் மெமரி பண்ணின விசயம் உங்கட கொம்பி யுட்டரிலை வரும் எண்டு கர்மசிரத்தையாக விளங்கப்படுத்தினான்.

அப்பத்தான் எனக்கும் உப்பிடியும் ஒரு விசயம் இருக்கே எண்டு விளங்கினாலும், பொடிச்சி இப்படி ஒரேயடியாக் கவிண்டதிலை நல்ல சந்தோசம். சிலுக்குமாதிரி மினுக்கிக் கொண்டு திரிஞ்சவவுக்கு நல்லா வேணும் எண்டு நினைச்சுக் கொண்டன்.

இதுக்கிடையிலை என்ரை மேளின்ரை பிறந்தநாளும் கிட்ட வந்துட்டுது. என க்கெணடடால் என்ரை பொம்பியூட்டரிலை காட் அடிக்க வேணும் எண்ட அவா.

"இவரை விட்டா சரிவர மாட்டாரப்பா... கேளுங்கோ"

எண்டு மனுசியும் ஒரே பேச்சு ! அடுத்த வகுப்பில வாத்தி வந்து எக்செல் எண்டு தொடங்க

"பொறுங்கோ மாஸ்டர், நீங்கள் எப்ப எங்களுக்கு காட் அடிக்க, பிறின்ற் அடிக்க எல்லாம் சொல்லித்தரப்போறியள் எண்டன் நான். அந்த ஆள் என்னடா என்றால் உதுகளைப் படிக்கிறதுக்கென்றால் என்னட்டை வராதையுங்கோ பக்கத்து வீட்டுப் பொடியளைக் கேளுங்கோ"

எண்டு சொல்ல எல்லாரும் சிரிக்க எனக் கெண்டால் நடுரோட்டிலை வேட்டி அவிண்டது போல ஒரே வெக்கமாப் போச்சு.

அடுத்த வகுப்பிலை சின்னவனைக் கேட்டன்

"எட தம்பி சோதனையும் கிட்டவந்திட்டுது ஒரு நாளைக்கு என்ர வீட்டை வந்து எல்லாத்தையும் வடிவா ஒருக்கால் சொல்லித் தாடா மேனை. எனக்கும் கனக்க டவுட் கிடக்கு ஒருநாளைக்கு வந்தாயெண்டால் எல்லாத்தையும் ஒரேயடியா முடிச்சிடலாம்"

எண்டன்.

அவனெண்டால்

"எனக்கண்ணை நேரங்கள்தான் கொஞ்சம் பிரச்சனை"

எண்டு பிசகு பண்ணினாலும் ஒருவழியா சனிக்கிழமை வாறன் என்றான். விசயத்தைக் கேட்ட மனுசிக்கெண்டால் புளுகந்தாங் கேல்லை

" நாங்களப்பா பிழை விட்டிட்டம், முந்தியே வாத்திக்குத் தண்டத்துக்கு காசு குடுக்காமல் இவன் பெடியனைக் கேட்டே அலுவலை முடிச்சிருக்கலாம்."

"பாவம் பொடி வீடு தேடி வருகுது, நீங்கள் சனிக்கிழமைக்கு ஒரு உடன் ஆட்டிறைச்சிப் பங்குக்குச் சொல்லுங்கோ, தனிய இருக்கிற பொடியனப்பா.....வாய்க்கு ருசியா நல்ல ஒரு பிரியாணி போட்டுக் குடுத்தால்தான் எனக்குத் திருப்தி"

எண்டா. சனிக்கிழமை காலமையிலயிருந்து எனக்கும் மனுசிக்குமெண்டால் கையும் ஓடேல்லை காலும் ஓடேல்லை. ஒருவழியாச் சின்னவனும் வந்து சேர்ந்தான். வந்ததும்

"அண்ணை இண்டைக்கு நான் கொஞ்சம் கெதியா வேலைக்குப் போகணும், வேலை செய்யிற இடத்தில 2 பேர் சுகயீன லீவு. நீங்கள் கெதியா உங்கட டவுட்டுகளைக் கேட்டியள் என்றால் விசயத்தை முடிச்சிட்டு நான் கிளம்பிடுவன்"

என்றான். எனக்கெண்டால் கடைசியிலை இண்டைக்கும் விசயம் கோவிந்தா தானோ எண்டு அழுகையே வந்திடும்போலக் கிடந்துது, எண்டாலும் சமாளிச்சுக்கொண்டு தம்பி அப்படியென்றால் பாட விசயங்களைப் பிறகு பாப்பம், முதல்லை காட் அடிக்கிறதைக் காட்டும் எண்டன்.

அவனெண்டால் சரியண்ணை படம் போட்டுக் காட் அடிக்கிறதெண்டால் உங்கடை ஸ்கானர், பிரிண்டர் எல்லாம் நல்லா இருக்கவேணும் அப்பத்தான் காட் வடிவா வரும் எண்டு சொல்லிக்கொண்டு கொம்பியுட்டருக்குக் கிட்டப் போட்டு

"அண்ணை ஸ்கானரையும், பிரிண்டரையும் எங்கை வச்சிருக்கிறியள் எண்டான். என க்கெண்டால் ஒண்டுமே விளங்கேல்லை உதிலைதானேயடா தம்பி எல்லாம் கிடக்கு எண்டன். அண்ணை அப்ப நீங்கள் ஸ்கானர், பிரிண்டர் இரண்டும் வாங்கேல்லையோ "

எண்டான்.

"என்னடா தம்பி கடைக்காரன் இப்பிடியும் ஏமாத்துவானோ பெட்டியிலை கொம்பிளீற்றா எல்லாம் கிடக்கெண்டான்"

எண்டா என்ர மனுசி.

"அப்பிடியில்லை அக்கா பொதுவா உதுகளை நாங்கள் தனியா வேண்டிப் பூட்டவேணும்"

எண்டு பொடியன் சொல்ல

"கேட்டீங்களே விசயத்தை வாத்தி எங்க ளுக்கு உதுகள் ஒண்டையும் சொல்லித் தரேல்லை தம்பி டக்கெண்டு எப்படிக் கண்டுபிடிச்சிட்டுது."

எண்டு மனுசி சொல்லிக் கொண்டு உள்ள போய் பிரியாணிக் கோப்பையோட வந்தா.

இதுக்கிடையில கொஞ்சம் கொஞ்சமா என்ரை மூத்தவன் பக்கத்துவீட்டுப் பொடியளை யெல்லாம் கூட்டிக் கொண்டுவந்து ஏதோ எல்லாம் செய்து கொம்பியுட்டரிலை கார் ஓட்டத் தொடங்கிவிட்டான். அவன் அதிலை போர்மிலா1 காரை அடிபடாமல் லாவகமாக ஓடுறதைப் பாக்க எனக்கெண்டால் திரும்ப ஒரே சந்தோசம். எனக்கல்லோ தெரியும் நான் இங்க கார் ஓட்டப் பழகேக்கை பட்ட கஸ்டங்கள்.

மகனெண்டால் பள்ளிக்கூடத்தால வந்தால் முந்தினபோல வெளியில விளையாட ஓடாமல் ஒரேயடியாக் கொம்பியுட்டரிலையை இருந்தான்.

எனக்குத்தான் இழவு இதொண்டும் விளங் காட்டிலும் அவனாவது நல்லா கொம்பியு ட்டரைப் படிச்சு முன்னுக்கு வந்திடுவா னெண்டு எனக்குச் சந்தோசம். நெடுக இப்படி கொம்பியுட்டருக்கை இருந்து கஸ்டப்பட்டுப் படிக்கிறான் எண்டு மனுசியும் முட்டைக்கோப்பி, சத்துமா எண்டு செய்து கொடுத்துது.

அப்பத்தான் ஒருகிழமையா லீவிலை வீட்டை வந்து நிண்டான் என்ர மருமகன். அவன் ஓருநாள் மெதுவா மாமா

"நான் ஒருவிசயம் சொல்லுறன் கோவிக்கமாட்டியளோ"

எண்டு பெரிய பீடிகையெல்லாம் போட்டான். நானேதோ மருமகன் ஆரையோ காதலிக்கி றான் போல, அதுதானே இப்ப பொடியள் வழக்கமாச் செய்யிறது, அதைச்சொல்லத்தான் தயங்கிறான் எண்டு நினைச்சு

"எதெண்டாலும் தயங்காமச் சொல்லடா மேனை, நானுண்ட மாமா அல்லோ"

எண்டன். அவன்

"மாமா உவன் உங்கடை மூத்தவனை ஏன் ஒரேயடியா கேம் விளையாட விட்டுக் கெடுக்கிறியள்? நான் புத்தி சொன்னால் அவன் அப்பாதான் நல்லா கொம்பியுட்டரில இரடா எண்டு விட்டவர் எண்டு சொல்றான், உப்பிடியே இவன் உதுக்கு அடிமையாகிப் படிப்பில கோட்டை விடப் போறான்"

எண்டு சொல்லிக்கொண்டே போனான். அப்பத்தான் எனக்கு ஓடி வெளிச்சுது தம்பி யாண்டான் கொம்பியுட்டரிலை இருந்து நெடுகச் செய்ததொண்டும் பிரயோசனமான விசயமொ ண்டுமில்லை எண்டது.

எனக்கு வந்த விசரிலை கொம்பியுட்டரைக் கழட்டிப் பழையபடி பெட்டியிலை போட்டு மூடி வச்சிட்டு சிவனே எண்டு இருக்கிறன்.

Criminal Defence Service

Community Legal Service

**S .Satha & Co Solicitors**

*We are always at your service*





PRINCIPAL PARTNER

S .SATHANANTHAN

- *Injunction*
- *Family Law*
- *Immigration*
- *Criminal Law*
- *Conveyancing*
- *Legal Aid Work*

*Tel:* **020 8471 9484** *Fax:* **0208471 9485**

*Emergency No:* **07956 288 671** *Property Department Fax:* **020 8471 1887**

**376-378 High Stret North, Manor Park, London E12 6PH.**

**DX:133012 Upton Park2**

# பெண் ஈயமும் பித்தளையும் ...



இது முழுக்க முழுக்க ஆணாதிக்கப் பதிவு. பெண்ணீயம் பித்தளைக்குப் பேரிச்சம் பழம் வாங்குபவர்கள் தயவுசெய்து உள்நுழைந்து விட்டு சாமியாடி குருதி அழுத்தத்தை அதிகப்படுத்த வேண்டாம். ஈயம் பூசாத பெண்கள் தாராளமாக வந்து சிரித்து விட்டுப் போகலாம்.

பெண்களுக்குப் பொதுவாகவே தங்களைப் பற்றிய சில அபிப்ராயங்கள் உண்டு. ஆண்களிடம் அடிமையாக இருக்கிறோம். எப்படியாவது அவர்களிடமிருந்து விடுதலை பெற்று விட வேண்டுமென்றெல்லாம் அவ்வப்போது மாரியாத்தா மேல வந்தமாதிரி சாமியாடுவது வழக்கம்.

ஆணாதிக்கம்னு அவங்க பேசும் போதெல்லாம் நமக்குச் சிரிப்பை அடக்க முடியவே முடியாது. பாவம் பேசிட்டுப் போவட்டும்னு விட்டுடுவோம். என்ன இருந்தாலும் பெருந்தன்மையில ஆண்களை அடிச்சுக்க முடியுமா என்ன?

வாழ்க்கையில ஆம்பளைங்க பயப்படுற மூணு வார்த்தை

1) ஏதாவது

2) என்னவானாலும்

3) உங்க இஷ்டம்

ஏன்னு கேக்குறீங்களா? மேற்கொண்டு படிங்க

ஆண்:இன்னைக்கு ராத்திரி என்ன சாப்பிடலாம்?

பெண்:ஏதாவது

ஆண்:அப்ப இன்னைக்கு பிஸ்ஸா சாப்பிடலாமா

பெண்: வேணாங்க ரொம்ப சீஸ் இருக்கும்

ஆண் :சரி அப்ப சைனீஸ் ஏதாவது?

பெண்: வேணாம்பா. அவங்க சாப்பாடு எனக்கு சரிப்படாது

ஆண்:பேசாம இட்லி சாப்பிட்டுட்டு போயிடலாமா

பெண்:என்ன இது? எப்ப பார்த்தாலும் இட்லிதானா?

ஆண்:சரி அப்ப என்னதான் சாப்பிடலாம்? (னு சொல்லித் தொலையேன்)

பெண்:ஏதாவது

ஆண்:சாப்பிட நேரம் இருக்கு. அதுக்கு முன்னால இன்னைக்கு சாயங்காலம் என்ன செய்யலாம்?

பெண்:என்னவாவது

ஆண்:படம் பார்க்க போலாமா? ரொம்ப நாளாச்சு தியேட்டருக்கு போய்

பெண்:அடப்போங்க! நேர விரயம்

ஆண்:சரி. அப்படின்னா ஏதாவது ப்ரௌசிங் சென்டர் போய் தமிழ் மணம் பார்க்கலாம். யாராவது எவனையாவது திட்டிக்கிட்டு இருப்பான்.சிரிச்சிட்டாவது வரலாம்

பெண்:நீங்க வேற? அதெல்லாம் எனக்குப் புரியவே புரியாது

ஆண்:சரி. ஏதாவது கண்காட்சிக்கு போகலாமா?

பெண்:என்ன இது? அங்கெல்லாம் ஒரே கூட்டமால்ல இருக்கும்

ஆண்:அப்ப என்ன செய்யலாம்னு சொல்லு

பெண்:என்னவாவது

ஆண்:சரி அப்படின்னா வீட்டுக்குப் போகலாம்

பெண்:உங்க இஷ்டம்

ஆண்:சரி. நாம பஸ்ல போயிடலாம்

பெண்:ஒரே கூட்டமா இருக்கும் வேணாம்

ஆண்:சரி ஆட்டோ பிடிக்கலாமா?

பெண்:இவ்வளவு பக்கமா இருக்கு. இதுக்குப் போய் ஏன் ஆட்டோ?

ஆண்:சரி அப்ப நடந்தே போயிடலாம். காத்து வாங்குன மாதிரி இருக்கும்

பெண்:வெறும் வயித்துல எப்படி நடக்க முடியும்?

ஆண்:அப்ப சாபிட்டுட்டே போயிடலாமா?

பெண்:உங்க இஷ்டம்

ஆண்:என்ன சாப்பிட?

பெண்:என்னவாவது ..........

அடங்கொய்யால.. இதுல உரிமையெல்லாம் வேற வேணுமாம்ல

*நன்றி* : Asifmeeran.blogspot.com


## தூரத்துப் பச்சை

*நேற்றைய தினத்தில்*
*என்னுடனோ*
*எனக்கென்றோ*
*எவருமில்லை....*
*நானும் எவர் நினைவிலும்*
*சென்றிருக்கவில்லை...*
*நான் மட்டுமேயிருந்தேன்*
*முற்றுப்புள்ளிகளற்ற*
*மௌனம் ஒன்று*
*நாள் முழுக்க*
*நீண்டபடியேயிருந்தது*
*முடிவற்று...*
*உன் வெற்றிடங்களை*
*எப்போதும்*
*நிரப்பிக் கொண்டிருப்பதாய்*
*உன்னால் சிலாகிக்கப்பட்ட*
*என் சொற்களும் கூட*
*இலக்கற்று அலைந்து*
*மூடப்பட்ட உன் கதவுகளில்*
*மோதிஉடைந்து திரும்பின..*
*உரக்கச் சத்தமிட்டு*
*ஓடித்திரியும் பிள்ளைகளாய்*
*என்னைச் சுற்றிவந்த*
*நினைவுகள் சிலவற்றில்*
*உன் பெயருமிருந்தது.*
*ஒருவேளை...*
*உன் பெயர் சொல்லிக்கொண்டு*
*துண்டு மேகமொன்றோ*
*சிட்டுக்குருவியொன்றோ*
*வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில்*
*ஜன்னல்களினூடே*
*நானுமோர் கம்பியாய்*
*நின்றிருந்தேன்*
*வானம் முடியும் ஒரு புள்ளியில்*
*நொடிக்கொரு வண்ணம் காட்டி*
*பகுத்தறிய முடியா நிறங்களை*
*அள்ளித்தெளித்தபடியே*
*மறைந்துபோனது பகல்*
*உன்னைப் போலவே...*

*-காயத்திரி*


# Kerala Ayurvedic Health Clinic (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line



- ▲ Massage Therapies by experienced and highly skilled therapists
- ▲ Treatment is designed around your individual health needs
- ▲ Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- ▲ Only natural medicines are used
- ▲ No side effects at all
- ▲ Wide range of therapies

| | |
|---|---|
| ▲ Arthritis | ▲Back Pain |
| ▲ Frozen Shoulder | ▲Whiplash |
| ▲High Blood Pressure | ▲Obesity |
| ▲Pulled Muscles | ▲Joint Pain |
| ▲High Cholesterol | ▲Digestive Disorders |
| ▲Trapped Nerve | ▲Diabetes |
| ▲Paralytic Conditions | ▲Sleeplessness |
| ▲Certain Skin Conditions | ▲Stiffness |
| ▲Stress and Strain | ▲Migraine |

**FREE Consultation**

Authentic and Effective Kerala Ayurvedic Treatments

Qualified and Registered Ayurvedic Physicians

Affordable Prices

*** Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,**

*** Male and Female therapists available**


*** Can speak in Hindi Tamil or English & Malayalam**

*** Free Parking**



**www.kahc.co.uk**

**Call 020 8902 1104 / 020 8902 1707**



**உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்.........**

**20%**
**Discount**
**as**
**Summer Special**

பலதும் பத்தும்

# நித்திரைக்கும் சப்பாத்துக்கும் என்ன உறவு?



நமது நாளாந்த வாழ்க்கையில் நித்திரையின் முக்கியத்துவம் பலரும் அறிந்ததே. இதன் முக்கியத்துவத்தை அறிந்ததாலோ என்னவோ ஒரு சிலர் நித்திரைச் சாமிகளாகவே மாறியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் அளவுக்கதிகமாக நித்திரை கொள்பவர்களும் மிகக் குறைந்த அளவு நித்திரை கொள்பவர்களும் இதய நோய்களால் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படிநாளொன்றுக்கு5மணித்தியாலங்களுக்குகுறைவாக நித்திரை செய்பவர்களும் 8 மணித்தியாலங்களுக்கு அதிகமாக நித்திரை செய்பவர்களும் இதய நோயால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி 5 மணித்தியாலங்களுக்குக் குறைவாக நித்திரை செய்யும் ஒருவருக்கு இதயநோய் வருவதற்கான சாத்தியம் 7 மணித்தியாலம் நித்திரை கொள்பவரை விட இருமடங்கு அதிகம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தேவையான அளவு நித்திரை கொள்ளாதவர்களிடத்தில் உடல் எடை கூடுதல் உயர் குருதி அழுத்தம் நீரிழிவு ஆகிய நோய்கள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் என்றும் அறியப்பட்டுள்ளது.

அளவுக்கதிகமாக நித்திரை செய்பவர்களில் மனச் சோர்வும் (Depression) அதிகமாகக் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் படி வளர்ந்த ஒருவர் நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள் நித்திரை கொள்வது நல்லது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட மருத்துவ நிபுணர் மேலும் கூறுகையில் நித்திரை என்பது நாம் அணியும் சப்பாத்தின் அளவைப் போன்றது. அந்த அளவு கூடினாலும் அல்லது குறைந்தாலும் அது எம்மில் தீமையையே ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்

# மூளைக்கு வேலை தரும் 'சுடோக்கு'

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | | 3 | | 6 |
| 4 | | 6 | | | 7 | | | 9 |
| | 3 | | 2 | | | | 8 | |
| | 6 | | | | 4 | | 2 | 8 |
| 5 | | | 6 | 2 | | | | 3 |
| 2 | 7 | | 1 | | | | 6 | |
| | 8 | | | 3 | 2 | | 4 | |
| 1 | | | 5 | | | 8 | | |
| 7 | | | | 9 | | | | 2 |

சிறுவர் முதல் பெரியவர் வரை வயது பால் இன வேறுபாடு எதுவுமின்றி அனைவரையும் கட்டிப் போட்டிருக்கும் ஒரு மந்திரச் சொல்லாக மாறியிருக்கும் 'சுடோக்கு' புதிர் விளையாட்டு என்றால் என்ன?

9X9 கட்டங்களைக் கொண்ட சதுரமொன்றினுள் 1 தொடக்கம் 9 வரையான இலக்கங்களையிட்டு பூர்த்தி செய்வதே இந்தப் புதிரின் நோக்கமாகும்.

சரி இதற்கு சுடோக்கு என்று பெயர் வரக் காரணமென்ன என்று பார்த்தால் இந்தப் புதிரின் தாயகமாய் ஜப்பானிய வாக்கியத் தொடரான " Suji wa Dokushin ni Kagiru என்ற சொற் தொடரிலிருந்து வந்ததாகும். இந்தச் சொற்தொடருக்கான பொருள் 'இலக்கங்கள் ஒற்றையாக இருத்தல்' என்பதாகும்.

இந்தச் சொற்தொடர் குறிப்பதைப் போலவே ஒவ்வொரு நிரலையும் (Column) ஒவ்வொரு நிரையையும் (Row) ஒன்றுதொடக்கம் ஒன்பது வரையிலான இலக்கங்களைக் கொண்டு பூர்த்தி செய்வதே சுடொக்கு புதிர் விளையாட்டில் செய்ய வேண்டியது. அதே வேளை பெரிய சதுரத்தினுள் அமைந்திருக்கும் ஒன்பது குட்டிச் சதுரங்களையும் இதே விதமாக ஒற்றை எண்களால் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும்.

ஒரு இலக்கம் ஒரு நிரையிலோ அல்லது நிரலிலோ அல்லது குட்டிச் சதுரத்தினுள்ளோ ஒரே தடவை மட்டுமே வர வேண்டும் என்பதும் முக்கியமான நிபந்தனையாகும்.

ஒருவரின் வயது மற்றும் புத்திகூர்மைக்கேற்ப இலகுவாக விடுவிக்கப்படக் கூடியவையாயும் சற்றுக் கடினமானவையாயும் மிகக் கடுமையாயும் தயாரிக்கப்படும் இந்தப் புதிர்க் கட்டங்களை நிரப்புவதன் மூலம் அல்லது நிரப்ப முயற்சிப்பதன் மூலம் மூளையின் சிந்திக்கும் ஆற்றலையும் ஞாபக சக்தியையும் அதிகரித்துக் கொள்ள முடியும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

வெறுமனே கணிப்பொறியின் முன் அமர்ந்து computer game விளையாடி கண்ணுக்கும் மனதிற்கும் கெடுதலைத் தேடிக் கொள்ளும் சின்னஞ் சிறுவர்களுக்கு இந்தப் புதிர் விளையாட்டின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டால் அது அவர்களது மூளை விருத்தியடைவதற்கும் தமது கணித ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதற்கும் உதவியாக அமையும்.

அதே போல தினமும் அழுது வடிக்கின்ற தொலைக் காட்சித் தொடர்களைப் பார்ப்பதற்குப் பாவிக்கும் நேரத்தை இது போன்ற புதிர்களை விடுவிக்கப் பயன்படுத்தினால் புது உற்சாகம் எற்படும். மூளை சிறப்பாகச் செயற்படும். ஞாபக மறதி போன்ற குணங்கள் நம்மைவிட்டுத் தூர ஓடிவிடும்.

அட வாசிப்பதை இடையில் நிறுத்தி விட்டு எங்கே கிளம்பி விட்டீர்கள். சுடோக்கு புதிரைத் தேடியா? சரி சரி வெற்றிகரமாகப் புதிரை விடுவிக்க வாழ்த்துக்கள்.

விளையாட்டு

# 20/20 உலகக் கிண்ணம் இந்தியாவிடம்




அவசர உலகத்தின் வேகத்திற்குத் தாக்குப் பிடிப்பதற்காக கிறிக்கெற் விளையாட்டும் குறுகி வருவது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் அண்மைக்காலமாக பிரபல்யமாகி வரும் அணிக்கு 20 ஓவர்களைக் கொண்ட 20-20 கிறிக்கெற் போட்டிகளுக்கான முதலாவது உலகக் கிண்ணப் போட்டிகள் அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்றது.

இங்கிலாந்து அவுஸ்திரேலியா சிறிலங்கா நியூசிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் தென்னாபிரிக்கா பாகிஸ்தான் இந்தியா சிம்பாப்வே கென்யா ஸ்கொட்லாந்து வங்காளதேசம் ஆகிய 12 நாடுகள் பங்கெற்ற இந்தப் போட்டித் தொடரின்இறுதிப் போட்டியில் இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெற் இழப்பிற்கு 157 ஓட்டங்களைப் பெற பதிலுக்காக ஆடிய அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெற்றுகளயையும் இழந்து 152 ஓட்டங்களையே பெற்றது.

கடைசியாக நடந்த உலகக் கிண்ணக் கிறிக்கெற் போட்டிகளின் போது முதலாவது சுற்றிலேயே வெளியேறியிருந்த இந்திய அணி பல புதிய முகங்களைக் கொண்டு இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்திற்கு எதிராக நடைபெற்ற போட்டியில் வீசப்பட்ட ஆறு பந்துகளையும் சிக்சராக அடித்து இந்திய வீரர் யுவராஜ் சிங் புதிய சாதனை ஒன்றையும் நிலைநாட்டியது குறிப்பிடத்தக்கது.



*கெதியாச் செக் பண்ணிட்டு விடுங்கோ எனக்கு நிறைய வேலை கிடக்கு!*

ஒருமுறை வாருங்கள் பாருங்கள் வேலை
நிறைவென்றால் காசு தாருங்கள்.


A & K MOTORS
Specialist in Diagnostic Tests
Repairs & Servicing
All makes & Models.

குரொய்டன் / மிச்சம் / ரூற்றிங் / ஸ்ரெதம் / மோடன் /விம்பிள்டன் / நியூ மோல்டன் / றெய்னஸ்பாக் / சற்றன். இந்த நகரங்களில் மோட்டார் வாகனம் வைத்திருப்பவர்கள் நம்பி நாட வேண்டிய இடம்.

பரந்த இடம், குறைந்த செலவு, நிறைந்த பயன்

A & K MOTORS
106 HILL RD,
MITCHAM CR4 2H2
ஆனந்தன்:
07985 588 565
குலன்:
07903 742 518

# அதிகரித்து வரும் ஆஸ்த்மா (Asthma) அவஸ்தை




1900 ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் ஆஸ்த்மா நோய் என்பது மிகவும் அரிதான ஒன்றாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ, அது ஒரு பெருவாரியாகப் பரவுகிற நோயாக வளர்ந்திருக்கிறது.

அமெரிக்காவில் மட்டும் ஒன்றரைக் கோடிக்கும் மேலான மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த எண்ணிக்கையை விட 10 மடங்கு அதிகமாய் இந்நோய் உலகளவில் மக்களை பாதித்திருக்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி, ஆண்டுதோறும் 180,000 பேர் இந்த நோயினால் உயிரிழக்கின்றனர்.

இப்படி ஆஸ்த்மா நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்ந்ததன் காரணத்தை முழுமையாக புரிந்துகொள்ளமுடியவில்லை. எனினும், இதுவரை உள்ள விபரங்களின் மூலம், ஆஸ்த்மா நோய் மேலைநாடுகளில் அதுவும் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் மிக அதிகமாய் பரவியிருப்பதாயும், ஆபிரிக்க மூலை முடுக்குகளில் சுத்தமாய் இந்த நோய் காணப்படுவதில்லை எனவும் தெரிய வருகிறது.

ஆஸ்த்மா நோய் கொண்ட தாயோ அல்லது தகப்பனோ, ஒரு குழந்தை ஆஸ்த்மா நோய் அடைவதற்கு காரணமாக இருக்கலாம் என்றிருந்தாலும், வம்சாவழி மரபை விட சுற்றுப்புற சூழலும், வளரும் வாழ்க்கை முறையும்தான் மிக அதிகமாய் ஆஸ்த்மா நோய்க்கு காரணமாய் இருப்பதாய் தெரிகிறது.

முக்கியமாய் எந்தெந்த அம்சங்கள் ஆஸ்த்மா நோய்க்கு காரணமாய் இருக்கின்றன என சரியாக இன்னும் தெரியவில்லை. ஆனால் காரணங்களாய் கருதக்கூடிய சிலவற்றில் மிக முக்கியமான ஒன்று-

தற்போதைய குழந்தைகள் முந்தைய காலத்தவர்களை விட அதிகமாய் வீட்டுக்குள்ளும், வேறு கட்டிடத்துக்குள்ளும் நேரத்தை செலுத்துகிறார்கள் என்பது. இப்படி நான்கு சுவற்றுக்குள் அடைந்து கிடப்பதால், இவர்கள் மிக அதிகமாய் வீட்டில் இருக்கக் கூடிய அலர்ஜி சம்பந்தப்பட்டவைகளினால் (தூசிகளில் வளரும் பூச்சிகள், எலி, கரப்பான் போன்றவைகள் உட்பட) பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

இன்னொரு முக்கியமான ஆய்வின்படி, மேலை நாடுகளின் குழந்தைகளின் நுரையீரல் சம்பத்தப்பட்ட வியாதிகளின் தடுப்புச்சக்தி, வளரும் நாடுகளின் குழந்தைகளின் தடுப்புச் சக்தியை விட குறைந்ததாய் இருக்கிறது. மேலை நாடுகளிலுள்ள குழந்தைகள், பூச்சிகளின் அருகே வளர்ந்து பழக்கப் படாதவர்கள். எனவே, இவர்கள் மிக எளிதாக ஆஸ்த்மா நோய்க்கும், வேறு சில அலர்ஜி சம்பத்தப்பட்ட வியாதிகளுக்கும் (hay fever and eczema ஆளாகி விடுகிறார்கள்.

அநேகமாக, பாதி ஆஸ்த்மா நோய்க்காரர்கள் அலர்ஜி (குடும்ப வம்சாவழி சம்பத்தப்பட்டதாக இருக்கக்கூடியது) மூலமாக ஆஸ்த்மா நோய் அடைந்திருக்கிறார்கள். மீதிப்பாதி, அலர்ஜி மூலம் இல்லாமல், குடும்பத்தில் வேறு யாருக்கும் இல்லாமல், வயதான பிறகு நோயடைந்தவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களுக்கு முதலில் சாதாரண ஜலதோஷமாய் இருந்து, படிப்படியாய், இழுப்பு வந்து, நாட்கணக்காய், மாதக்கணக்காய் சுவாசிக்க கஷ்டப்பட்டு ஆஸ்த்மா நோய் கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறது. இந்த இரு விதமாய் நோய் வாய்ப்பட்டவர்களுக்கும், மூச்சிழுக்கும் வழி சுருங்கிவிடுகிறது. ஆஸ்த்மா நோய் குழந்தைகளிடம் அதிகமாய்ப் பரவி இருந்தாலும் ஏகப்பட்ட வயதானவர்களும் ஆஸ்த்மா நோய்வாய்ப் பட்டிருக்கின்றனர்.

மேலும், இரசாயனத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களிடம், அந்த இரசாயணப் பொருட்களின் மூலமாகக் கூட ஆஸ்த்மா ஏற்பட்டிருக்கிறது. வீட்டிலுள்ள தொற்றுநோய் கிருமிகளிலிருந்து, உடற்பயிற்சி, குளிர்காற்று, மற்றும் ஒசோன் போன்ற இராசாயனப் பொருட்கள் ஆஸ்த்மா நோயைத் துரிதப் படுத்துவையாக இருக்கின்றன. இருந்த போதிலும், வெளிக்காற்றின் கிருமிகள் ஆஸ்த்மா நோய் உருவாக காரணம் என இதுவரை உறுதிப் படுத்தப் படவில்லை.

புகை பிடிப்பது ஆஸ்த்மா நோயை அதிகரிக்கச் செய்கிறது. கர்ப்பமாக இருக்கும் போது, புகை பிடிப்பது, பிறக்கும் குழந்தைக்கு ஆஸ்த்மா நோய் வருவதற்கு வாய்ப்பினை அதிகப் படுத்துகிறது.

உடல் குண்டாக இருப்பது கூட ஆஸ்த்மா நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கக் கூடியதுதான்.

இப்படி மிக ஏராளமான காரணங்களும், விவரங்களுடனும் ஆஸ்த்மா நோய் சம்பந்தப் பட்டிருப்பதால், விஞ்ஞானிகளால் இதுவரை இதன் முழுத்தன்மையை புரிந்துகொள்ள முடியவில்லை.

இருந்த போதிலும், இவர்கள் மிகச் சிறப்பாய் வேலை செய்து, inhaled steroids போன்ற ஒருசில மருந்துகளை கண்டுபிடித்திருக்கிறார்கள். இதுவும், வேறு சில புதிய மருத்துவ முறைகளும் சரியாகவும், தொடர்ந்தும் உபயோகப்படுத்தினால், ஆஸ்த்மா நோய் மூலமான அவஸ்தைகளைக் குறைத்துக் கொள்ளலாம்

- Dr. *சரஸ்வதி*

## சின்னச் சின்னக் குறிப்புகள்

- கத்தி கத்தரிக்கோல் என்பன மொட்டையாக இருந்தால் அதன் முனைப் பகுதியை கண்ணாடிப் போத்தலின் வாயில் தேய்க்க கூராகி விடும்
- புதிதாக வாங்கிய செருப்பு வெட்டினால் குறிப்பிட்ட பகுதியின் உட்புறமாக மெழுகினால் தேய்த்து அணியவும்
- கவரிங் நகைகளுக்கு transparent nail polish ஒரு coating பூசி எடுத்து காயவைத்துப் பாவித்தால் இலகுவில் கறுக்காது.
- குளிரூட்டியில் வைத்து எடுத்த தேசிக்காய் போன்றவற்றை 30 விநாடிகள் மைக்ரோவேவில் வைத்து எடுத்து வெட்டினால் நல்ல சாறு வருவதுடன் இலகுவாகப் பிழியக் கூடியதாகவும் இருக்கும்.
- சீஸ் போன்றவற்றை கூரட் துருவியில் துருவுமுன்னர் சிறிது எண்ணெய் பூசினால் ஒட்டாமல் சுத்தமாகத் துருவலாம்
- எலுமிச்சம் பழச் சாறுடன் chalk piece தூள் கலந்து செப்புப் பாத்திரங்களைத் தேய்த்தால் பளபளப்பாக வரும்

- *கிறேஸ் அக்கா*

**MARKANDAN & CO**

**SOLICITORS & ESTATE AGENTS**

***We also Specialise in....***

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House / Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

*01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து / சம்பந்தமான வழக்குகள்

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win – No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்டஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)


வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **020 8514 8188** Fax: **020 8514 8303**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்....

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# அப்பா அடிக்காதேங்கோ!



**சிறி**
*(ஒரு பேப்பருக்காக)*

விஞ்ஞான கண்டுபிடிப்புக்களில் இந்த தொலைபேசியின்கண்டுபிடிப்பும் ஒரு உன்னத மானதுதான். கைத்தொலைபேசியின் வரவிற்கு பின்னர் அதன் தொழில் நுட்ப வளர்ச்சியும் மாற்றங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துத் தான் செல்கிறது.

முன்பெல்லாம் ஊரில் ஒருவர் வீதியில் தன் பாட்டில் சிரித்து கதைச்சபடி நடந்து போனால் சந்தேகமே இல்லை அவருக்கு விசர் என்று எல்லோரும் முடிவு கட்டிடுவினம். ஆனால் இன்று நிலைமை அப்பிடியில்லை. காரணம் கைத்தொலைபேசி புளூருத் என்கிற சின்ன கருவியை காதுக்குள்ளை வைச்சிட்டு எல்லாருமே தங்கடை பாட்டிலை கதைச்ச படிதான் போகினம்.

இப்ப யார் கதைக்காமல் தன்ரை பாட்டிலை கம்மெண்டு போகினமோ அவைதான் விசரர் எண்டு நினைக்கிற அளவுக்கு நிலைமை மாறி போச்சுது.

அது மட்டுமில்லை தொலைபேசி தொல்லை பேசியாவும் மாறிப் போச்சுது. இன்றைய நிலைமை இப்பிடியிருக்கு முந்தி ஊரிலை தொலைபேசியை காணுறதெண்டாலே அபூர்வம்.

முக்கியமா அரசாங்கம் சம்பந்தப்பட்ட கச்சேரி, புகையிரத நிலையம், தபால்கந்தோர், காவல் நிலையங்களிலையும் மற்றது பெரிய பணக்காரர் அதுவும் அரசியல் செல்வாக்கு இருக்கிறவையின்ரை வீடுகளிலையும் தான் தொலைபேசி இருக்கும்.

இதன் இணைப்புகள் வீதியிலை ஒருபக்கம் கரண்ட் கம்பம் எண்டால் மற்றப் பக்கம் பதிவாய் கம்பங்கள் நட்டு பித்தளை கம்பிகளால் இணைப்பு கொடுக்கப் பட்டிருக்கும். தொலைபேசி பெரியதாய் கறுப்பாய் கிட்டத்தட்ட ஒரு மூண்டு நாலு கிலோ பாரமாவது இருக்கும்.

நீங்கள் வெளிமாவட்டத்திற்கு யாரோடை யாவது கதைக்கிறதெண்டாலே நேரடியாய் அடிச்சு கதைக்க முடியாது.

தொலைபேசி கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அடிச்சு நீங்கள் கதைக்கப் போற இலக்கத்தை குடுத்திட்டு தொலைபேசிக்கு பக்கத்திலை ஒரு கதிரையை போட்டு காவல் இருக்க வேண்டியதுதான்.

அவையள் அந்த இலக்கத்துக்கு அடிச்சு லைன் கிடைச்சதும் உங்களுக்கும் அடிச்சு இணைச்சு விடுவினம்.

அப்பிடி நீங்கள் கதைச்சு கொண்டு இருக்கேக்கை எங்கையாவது கம்பி இணைப்பிலை காவோலை விழுந்து கம்பி அறுந்தால் உங்கடை கதையும் அறுந்து போகும்.

எனக்கு சின்ன வயசிலை ஒரு பெரிய சந்தேகம். நாங்கள் கதைக்கிறது எப்பிடி இந்த கம்பிக்குள்ளாலை போகுது எண்டு பலநாள் யோசிச்சுப் பாத்தும் பிடிபடேல்லை.

ஒருநாள் அதை ஆராச்சி பண்ணிப் பாக்க வேணும் எண்டு நினைச்சு தந்திக் கம்பத்திலை ஏறி கம்பியிலை காதை வைச்சு கொண்டிருக்க அந்த வழியாலை வந்த சித்தப்பா கண்டிட்டு பூவரசம் தடியொண்டை புடுங்கி வீடு வரைக்கும் கலைச்சுக் கலைச்சு அடிச்சு கொண்டு வர அதை பாத்திட்டு அப்பா ஏன் மகனுக்கு அடிக்கிறாயெண்டு கேட்டார்.

அதுக்கு சித்தப்பா சொன்னார்

"உன்ரை மகன் தந்திக்கம்பத்திலை ஏறி கம்பியிலை காதை வைச்சு கொண்டிருக்கி றான் இப்பிடியே விட்டா நாளைக்கு கரண்டு கம்பத்திலை ஏறி கரண்ட் வருதா எண்டு கையை வைச்சு பாப்பான்"

பிறகென்ன மிச்சத்துக்கு அப்பாவும் கூரையிலை செருகியிருந்த பிரம்பை உருவ என்ரை ஆராச்சியும் அதோடை நிண்டு போச்சுது.

இல்லாட்டி இண்டைக்கு நானும் ஒரு விஞ்ஞானியாகி குறுந்தாடியும் வைச்சு கண்ணா டியும் வெள்ளை கோட்டும் போட்டபடி விஞ்ஞான விளக்கம் குடுத்துக் கொண்டி ருப்பன். இப்பிடி உங்களுக்கு விண்ணாணம் எழுதிக் கொண்டிருந்திருக்க மாட்டன்.

என்னாலை இப்ப குறுந்தாடி தான் வைக்க முடிஞ்சுது விஞ்ஞானியா வர முடியேல்லை எல்லாத்தையும் சித்தப்பா கெடுத்துப்போட்டார்

சரி ஆராச்சிதான் பண்ண முடியேல்லை ஒரு நாளாவது தொலைபேசியிலை யாரோடையாவது கதைக்கவேணும் எண்டு எனக்குள்ளை ஒரு ஆசை. ஏன் பேராசை எண்டே சொல்லலாம்.

ஆனால் அந்த நேரத்திலை எங்கடை ஊரிலை இரண்டே இரண்டு தொலைபேசி தான் இருந்தது. ஒண்டு தபால் கந்தோரிலை மற்றது ஒரு பெரிய அரசியல்புள்ளி ஒருதரின்ரை வீட்டிலை.

83ம் ஆண்டு கலவரம் நடக்கேக்கை எங்கடை ஊர்ச்சனம் எல்லாம் தங்கடை சொந்தங்களின்ரை செய்தி அறிய இவரின்ரை வீட்டு தொலைபேசியைத் தான் சுத்திவர காவல் நிண்டது இப்பவும் நல்ல ஞாபகம்.

அந்த நேரத்திலை இந்த வெளிநாட்டு அழைப்பெல்லாம் வாறேல்லை. அனேகமா கொழும்பிலை இருந்து இல்லாட்டி ஏதாவது மாவட்டத்திலை இருந்து அவசர செய்தி மட்டும் வரும்.

> "உன்ரை மகன் தந்திக்கம்பத்திலை ஏறி கம்பியிலை காதை வைச்சு கொண்டிருக்கி றான் இப்பிடியே விட்டா நாளைக்கு கரண்டு கம்பத்திலை ஏறி கரண்ட் வருதா எண்டு கையை வைச்சு பாப்பான்"

எங்கடை ஊரிலை உள்ளவைக்கு ஏதாவது அவசர செய்தியெண்டால் ஒண்டு தந்தி வரும். அல்லது அந்த அரசியல்வாதி வீட்டுக்கு தொலைபேசி வரும் செய்தியை சொல்லி விடச் சொல்லி.

இந்த தந்தியிலையும் தொலைபேசி யிலையும் எவ்வளோ செய்தியளை பரிமாறலாம் ஆனாலும் எங்கடையாக்களுக்கு அந்த நேரம் ஏதாவது விபத்து இல்லாட்டி யாராவது செத்தால் தான் தந்தியடிக்கிற இல்லாட்டி தொலைபேசியடிக்கிற பழக்கம்இருந்ததாலை தந்தி வந்தால் அதை பிரிச்சு வாசிக்காமலேயே ஒப்பாரி வைக்க தொடங்கிவிடுவினம்.

அதே மாதிரித்தான் அந்த அரசியல் வாதியின் வீட்டு வேலைக்கார பெடியன் வந்து

"யாரது வீட்டில் உங்களுக்கு ரெலிபோன் வந்திருக்கு கெதியா வாங்கோ"

எண்டாலே போதும் வீட்டுகாரரர் பக்கத்து வீட்டுகாரர் எல்லாரும் அலறியடிச்சபடி ஓடுவினம்.

இது இப்பிடியிருக்க ஒருநாள் யாழ்ப்பாண நகரத்துக்கு போன நான் என்ரை நீண்ட நாள் தொலைபேசி கதைக்கிற ஆசையை அண்டைக்கு நிறைவேற்றலாம் எண்டு நினைச்சு யாழ்ப்பாணம் தபால் கந்தோருக்குள்ளை நுழைஞ்சன்

ஆனால் யாருக்கு அடிக்கிறதெண்டு யோசிச்சு பாத்தன் ஏனெண்டால் தொலைபேசியிலை கதைக்கிற அளவுக்கு என க்கு ஒருத்தரையும் தெரியாதது மட்டுமில்லை எனக்கு தெரிஞ்சவையின்ரை வீடுகளிலை தொலைபேசியும் இல்லை.

அதாலை எங்கடை ஊர் அரசியல் வாதியின்ரை வீட்டுக்கு போனடிச்சு எங்கடை வீட்டு காரரை கூப்பிட்டு கதைப்பம் எண்டு நினைச்சு அந்த வீட்டு இலக்கத்தை தபால் கந்தோர் காரரிட்டை சொல்ல அவரும் தொலைபேசியிலை விரலை விட்டு சுழட்டி போட்டு றிசீவரை தந்தார்.

அந்த வீட்டிலை தொலைபேசியை எடுத்தவரிட்டை நான் அப்பாவின்ரை பெயரை சொல்லி அந்த வீட்டு காரரோடை அவசரமா கதைக்கவேணும் ஒருக்கா கூப்பிடுங்கோ நான் ஒரு அஞ்சு நிமிசத்தாலை திருப்ப எடுக்கிறன் எண்டிட்டு வைச்சிட்டன்.

அந்த வீட்டு வேலைக்கார பெடியன் செய்தி சொல்ல வீட்டை போன நேரம் வீட்டிலை அம்மம்மாவை தவிர வேறை ஒருத்தரும் இருக்கேல்லை.

அவனும் அம்மம்மாவிட்டை

"உங்களுக்கு ரெலிபோன் வந்திருக்கு அவசரமாம் கெதியா வாங்கோ "

எண்டு சொல்லவும். அம்மம்மாவும் கொழும்பிலை இருந்த மாமாவுக்கோ இல்லாட்டி திருகோணமலையிலை இருந்த சின்னம்மாவுக்கோ ஏதோ நடந்திட்டு எண்டு நினைச்சு ஒப்பாரிவைக்க பக்கத்து வீட்டுகாரரும் சத்தம்கேட்டு வந்து அம்மம் மாவை சமாதானப்படுத்தி எல்லாருமா சேர்ந்து அந்த வீட்டிலை வந்து என்ரை தொலைபேசிக்காக காவல் நிண்டிச்சினம்.

நான் மீண்டும் அடிக்கவும் பக்கத்து வீட்டு காரர்தான் கதைத்தார் அவர் என்னிடம்

"தம்பி அந்த வீட்டிலை மாமியாரை தவிர மற்றாக்கள் ஒருதரும் இல்லை நீங்கள் என்ன பிரச்சனையெண்டாலும் என்னட்டை சொல்லுங்கோ நான் பக்கத்து வீட்டுகாரர்தான் எண்டாலும் அவையின்ரை குடும்பத்திலை ஒருத்தர் மாதிரி அதாலை பிரச்சனையில்லை என்னட்டை சொல்லுங்கோ நான் அவையிட்டை பக்குவமா எடுத்து சொல்லுறன்"

எண்டு படபடப்பாய் கதைத்து கொண்டிருக்கவும் எனக்கு அம்மம்மாவின் அழுகை சத்தம் தொலைபேசிக்குள்ளாலை கேட்டது.

அப்போதான் என்ரை விளையாட்டு வினையா போச்சுதெண்டது எனக்கு விளங்கியது. உடனே அவரிடம்

"நான் தான் அண்ணை கதைக்கிறன். அம்மம்மாவை அழவேண்டாமெண்டு சொல்லுங்கோ கொஞ்ச நேரத்திலை வீட்டை வாறன்"

என்று சொல்லி தொலை பேசியை வைத்து விட்டு வீட்டுக்காரர் வர முதலே வேகமாய் போய் அம்மம்மாவை சமாதானப்படுத்தி விடலாமென்று நினைத்து சைக்கிளை மிதித்தேன்.

ஆனால் நான் வீட்டிற்கு போகும் போதே வீட்டுக்காரர் எல்லோரும் முற்றத்தில் நின்ற படி என் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து காத்திருந்தனர்.

நான் சைக்கிளை நிறுத்தியதும் அப்பாவின் கை கூரையில் செருகியிருந்த பிரம்பை உருவியது. பிறகென்ன அய்யோ அப்பா அடிக்காதேங்கோ இனி இப்பிடி செய்யமாட்டன்....

**Nathan & Co**

Tel: 020 8542 1805

Properties
Crime
Immigration
&
Matrimonial

with best compliments

106 Kingston Road
Wimbeldon,
London SW19 1LX

# வெற்றி படைப்போம்...

தமிழ் மூதாட்டி ஔவையார் 'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' என்றார். அப்படி அரிதாகப் பெற்ற மனித வாழ்க்கையை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்று சிந்தித்து, வாழ்வில் வெற்றி பெறுமளவு செயலாற்ற வேண்டியது இன்றியமையாதது.

நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சுடர் மிகும் அறிவுடன் நம்மைப் படைத்த சிவ சக்தியை நோக்கி, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே வல்லமை தாராயோ என்று வேண்டுகிறார் மகாகவி பாரதி.

இறைவன் அளித்த இவ்வாழ்விற்கு வெவ்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர் சான்றோர்கள்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பார் ஒருவர். வாழ்வின் இலக்கை வெவ்வேறு விதமாய் வகுப்பார் மற்றவர். வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் பார்த்தனர் பெரியோர்கள்.

வாழ்வில் வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு உண்டு. வெற்றி கண்டு துள்ளிக் குதிக்காமலும், தோல்வி கண்டு துவழ்ந்து விழாமலும், இரண்டையும் சம நோக்கோடு பார்க்கப் பழகிக்கொண்டால் வேதனை வராது.

ஒவ்வொரு மனிதனும் தான் எண்ணி ஆற்றிய செயல்களுக்குத் தகுந்த பயனை எதிர்பார்ப்பது இயற்கையே.

எண்ணிச் செய்த கருமத்திற்கு எண்ணிய பயனைப் பெற்று விட்டால் மகிழ்ச்சியும், பெறாவிட்டால் வேதனையும் அடைகிறோம். எங்கெங்கு எதிர்பார்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றனவோ, அங்கெல்லாம் ஏமாற்றங்களும் அதிகமாக இருப்பதற்கு வாய்ப்புண்டு.

இத்தகு ஏமாற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான், கண்ணன் கீதையில் 'கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே' என்று உபதேசித்தாரோ என்னவோ?

பலசமயங்களில் மனிதனுக்குத் தான் எதிர்பார்ப்பது நன்மை தருமா அல்லது தீமை பயக்குமா என்று பகுத்தறிந்து பார்க்க முடிவதில்லை.

அறியாமையால் தான் நினைத்தது தனக்குக் கிடைக்கவில்லை என்றால் நொந்து போகிறான். இறை நம்பிக்கை உள்ளவன்

இறைவன் சித்தம் இப்படிப் போலும்? நல்லது நேரும் வரை பொறுமை காப்பேன், இறைவன் அளிப்பதை அவன் அருளாக ஏற்றுக் கொள்வேன்'

என்று எடுத்துக் கொள்ளும் பொழுது, மனம் நொந்து, வேதனையில் வெதும்பிப் போவதில்லை. விதிப் பயன் என்று ஏற்போருக்கு வேதனையில்லை.

விதியின் வலிதனை, ஒமர்கய்யாம் என்ற சிந்தனையாளர்

'எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி
எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்,
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
வழுவிப் பின்னால் நீங்கியரு
வார்த்தையேனும் மாற்றிடுமோ,
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ ?'

என்று கூறுகிறார்

திருவள்ளுவப் பெருந்தகையும்

'ஊழிற் பெருவலியாவுள, மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்'

என்றார்.

இராமாயணத்தில் ஒரு காட்சி. இராமனுக்கு முடிசூட எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்ட நிலை. தசரதன் தனக்கு முன்னர் வாக்களித்த வரங்களைக் கைகேயி கேட்கிறாள். அதில் ஒன்று பரதனுக்கு முடிசூட்ட வேண்டும்? அடுத்தது இராமன் கானகம் சென்று பதினான்கு ஆண்டுகள் கழித்துத் திரும்ப வேண்டும்.

## விதி நம்மை இட்டுச் செல்லும் பொழுது நாம் ஏன் வருத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் நம்மைச் செயலின்மைக்கு இழுத்துச் சென்று விடும்

தசரதன் வேதனையுற்றான். இராமன் வருந்தாது, மகிழ்வோடு கானகம் செல்லத் தயாராகிறான். இலக்குவன் இதனைக் கண்டு வெகுண்டு எழுகிறான்.

அவனைச் சமாதானம் செய்யும் இராமன், தான் கானகம் செல்ல வேண்டும் என்பது விதிப்பயன்? அதைத் தவிர்க்க முடியாது எனக் கூறுகிறான்.

'விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி' எனச் சூளுரைக்கிறான் இலக்குவன். அதனைத்தொடர்ந்த விதியின் வலிமை ஒரு சரித்திரம்.

இந்தப் புராணக் கதைகள் எவ்வளவு தாரம் உண்மையானவை என்பது ஒரு புறமிருந்தாலும் இவற்றினுள் உட்புகுந்து சொல்ல வருகின்ற கருத்துக்கள் வாழ்வில் நாம் துவண்டு போகாமல் இருப்பதற்கக் காரணமாக அமைகிறது அல்லவா?

'விதியை மதியால் வெல்லலாம்' என்பது ஒரு முதுமொழி. விதிப் பயன் என்று கூறி, 'எல்லாமே விதி வழித்தான் நடக்கும் எனும் பொழுது நாம் ஏன் செயலாற்ற வேண்டும்' என்ற எதிர்மறை எண்ணத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது. தோற்று விடுவோமோ என்ற அச்சமும், விதி நம்மை இட்டுச் செல்லும்பொழுது நாம் ஏன் வருத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் நம்மைச் செயலின்மைக்கு இழுத்துச் சென்று விடும் என்பது நூறு வீதம் உண்மை.

நாம் கடமையைச் செய்ய வெண்டும். அனால் அதன் விளைவுகளை எண்ணிக் கவலை கொள்ளக் கூடாது என்பதே சொல்லப்படுகின்ற நீதியாகும்.

இதை உணர்ந்து தான் 'ஊழிற் பெரு வலி யாவுள'

என்று வினவிய வள்ளுவப் பெருந்தகை

'ஊழையும் உப்பக்கம் காண்பர்,
உலைவின்றி தாழாது உஞற்றுபவர்',

'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்',

'முயற்சி திருவினையாக்கும்,முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்'

என்றெல்லாம் அறிவுறுத்துகிறார்.

பயன் கருதும் பொழுது, விளைவு எப்படி இருக்குமோ என்ற அச்சத்தினாலேயே முழு மனத்தினோடு கடமை ஆற்ற இயலாது என்பது மனோதத்துவ அறிஞர்கள் கருத்து.

எனவே அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுவோம்! கடமையைச் சிறப்பாக ஆற்றுவோம்! கடைமையின் விளைவு சாதகமில்லாவிட்டால் கூட அதைக் கண்டு துவளாது தொடர்ந்து முயல்வோம். வெற்றி பெறுவோம். சாதனை படைப்போம்!

*-நன்றி : நிலாச்சாரலை தழுவி ரம்யா எழுதியது*



சாய்ந்த கோபுரங்கள்...

# திராவிடம்

**இளங்கோ**

*(ஒரு பேப்பருக்காக)*

தமிழ்நாட்டுத் தமிழர்களிடம் மட்டுமல்ல ஈழத் தமிழர்களிடமும் திராவிடம் தொடர்பான மயக்கம் இருந்து வருகிறது. தங்கள் எழுத்துக்களில் தமிழர்களைக் குறிக்கும் இடங்களில் திராவிடம் என்ற சொல்லை பயன்படுத்தி வருகின்றனர். திராவிடம் எனும் சொல் தமிழ்ச் சொல் அல்ல. தமிழைக் குறிக்க பயன்பட்ட வடமொழிச் சொல்லே அது.

இது பற்றிய உண்மைகளை அறிய முன்பு திராவிடத்தின் மீது எனக்கு ஒரு மிகப் பெரிய மயக்கம் இருந்தது. திராவிட இயக்கத்தின் இரு பெரும் தலைவர்களாக விளங்கிய பெரியார் மீதும் அண்ணா மீதும் ஏற்பட்ட ஈடுபாட்டால் அவர்கள் பேசிய பகுத்தறிவு, பெண் விடுதலை, சமூக நீதி போன்றவற்றின் பாதிப்பால் அவர்களின் அரசியல் வெளிப்பாடான திராவிடமும் என்னைக் கவர்ந்து கொண்டது.

தமிழர்களிடமிருந்து திராவிட மயக்கம் விடுபட வேண்டும் என்பது நியயாமானதுதான் ஆனால் திராவிடத்தை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் தந்தை பெரியாரைக் கொச்சைப் படுத்தும் செயல்கள் ஒரு சில தமிழ்த் தேசியவாதிகளால் முன்னெடுக்கப் படுகின்றன. பெரியார் தமிழ்த் தேசியம் பேசாமல் எதற்காக திராவிடம் பேசினார் என அவர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

அவர்கள் கருத்துப் படி பார்த்தால் தமிழ் பற்றாளர்களான வ.உ.சிதம்பரனார், பாரதியார் போன்றவர்கள் தமிழ்த் தேசியம் பேசாமல் இந்தியத் தேசியம் பேசியதையும் மாபெரும் தவறாகவே கருதவேண்டும். உண்மையில் அப்படி ஒரு குற்றச் சாட்டை இன்றைய காலத்தில் இருந்து கொண்டு அவர்களின் மேல் சுமத்த முடியாது. செப்பு மொழி பதினெட்டு இருந்தால் சிந்தனை எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும்?! என்று விழித்துக் கொண்ட தமிழன் கேட்கும் கேள்விக்கு நாம் பாரதியைப் பொறுப்பாக்க முடியாது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை விரட்ட அனைத்து மக்களையும் ஒன்று திரட்டும் நோக்கோடு போராடிய காலத்தில் அவர்களுக்குள் ஏற்பட்ட இந்திய உணர்வை நாம் தவறென்று சொல்ல முடியாது. ஆனால் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்பின் குரலாக இந்தியத் தேசியம் இல்லை. அதுவே தேசிய இனங்களை அடிமைப் படுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்திய வடிவமாகவே மாறியுள்ளது.

அதைப்போலவே வடவர்களின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள திராவிடம் என்ற சொல்லை பெரியார் அண்ணா போன்றவர்கள் பயன் படுத்தினார்கள். 1925 ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறிய தந்தை பெரியார் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்து பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப் பட்ட மக்களின் சமூக விடிவுக்காக சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். பின்னர் நீதிக் கட்சியின் தலைவரானார். 1944 ஆம் ஆண்டு நீதிக் கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் செய்யப் பட்டது. இவ்வாறுதான் திராவிட இயக்கம் உருப்பெற்றது. ஆரியத்திற்கு எதிரான ஒரு வலுவான ஆயுதமாகவே பெரியார் அண்ணா போன்றவர்கள் திராவிடத்தை உயர்த்திப் பிடித்தார்கள் தமிழ் நாட்டுடன் ஆந்திராவின் பெரும் பகுதியும், கன்னடம் கேரளம் அகியவற்றின் சில பகுதிகளுமாகச் சேர்ந்து சென்னைத் தலைமாகாணம் என அழைக்கப் பட்டது. அதையேதான் பெரியார் திராவிட நாடு என்றார்.

1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மொழிவாரியாக மாநிலங்கள் உருவாகி சென்னைத் தலைமாகாணத்திலிருந்து ஆந்திரம், கன்னடம், கேரளம் போன்றவைகள் வெளியேறியவுடன் தனித்து நின்ற தமிழ்ப் பகுதிகளுக்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று பெரியார் கோரிக்கை விடுக்கிறார். அது வரைக்கும் திராவிட நாடு கோரிய பெரியார் அன்றிலிருந்து அதைத் தூக்கிப் போட்டு விட்டு தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோரிக்கையை முன்வைக்கிறார். இறுதிவரைக்கும் அதிலிருந்து அவர் விலகவில்லை.

பெரியாரை விட்டு அண்ணா வெளியேறிய பின் அண்ணா முன்வைத்த திராவிட நாட்டுக் கோரிக்கை என்பது வேறு. தமிழ் நாடு டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வேண்டும். அதைப்போலவே ஆந்திரம் கன்னடம், கேரளம் போன்றவைகளும் விடுதலையடைய வேண்டும் இவை நான்கும் சேர்ந்து தங்களுக்குள் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் இதைத்தான் அண்ணா திராவிட நாடு என்றார். அண்ணாவின் திராவிட நாட்டிற்குள் தமிழ் நாடு தனது இருப்பை இழக்கவில்லை நான்கு தேசியங்களுக்குள் அதுவும் ஒரு தேசியமாக, டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற தேசியமாக இருப்பதை மறுக்க முடியாது.

இந்தியத் தேசியம் பேசிய சில தமிழ்த் தலைவர்கள் தமிழ்த் தேசியத்தை இந்தியத் தேசியத்திற்குள் அடகு வைத்தது போல் பெரியாரோ அண்ணாவோ தமிழ்த் தேசியத்தை திராவிடத்திற்குள் அடகு வைக்க வில்லை.

1956 ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சர் நேரு அவர்களால் தட்சிணப் பிரதேசம் என்றொரு திட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழ் நாடு மற்று கன்னடம் கேரளம் போன்றவற்றை உள்ளடக்கி ஒரு பிரதேசமாக மாற்றுவதுதான் நேருவின் திட்டம். மேலோட்டமாகப் பார்த்தால் பெரியார் அண்ணா போன்றவர்கள் முன் வைத்த திராவிட நாடு போன்றே இதுவும் தோற்றமளிக்கிறது. இந்தத் திட்டத்திற்கு பெரியார் அண்ணா போன்றவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்புகிறது. தட்சிணப் பிரதேசம் என்பது தமிழர்களுக்கு தற்கொலைக்குச் சமம் என பெரியார் வெகுண்டார் பெருமளவில் போராட்டம் வெடித்தது. இறுதியில் திட்டம் கைவிடப் பட்டது.

உண்மையில் தமிழ் நாட்டுடன் ஆந்திரம் கேரளம் போன்ற பகுதிகளை இணைக்கும் ஒன்றுதான் திராவிடம் என்றால் பெரியரோ அண்ணாவோ இதை எதிர்த்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. தட்சிணப் பிரேதேசத்தில் தமிழ்த் தேசியம் தன்னுடைய இருப்பை இழக்கிறது. திராவிட நாட்டில் தமிழ் நாடும் ஒரு தேசமாக விளங்குகிறது. எனவே பெரியாரோ அண்ணாவோ திராவிடம் பேசி தமிழர்களை ஏய்த்தனர் என்ற குற்றச் சாட்டில் உண்மை இல்லை. இருப்பினும் திராவிடத் தேசியம் தமிழ்த் தேசியத்தின் தேவையால் காலவதியாகிவிட்டது. ஆம் பெரியாராலேயே கைவிடப் பட்ட தேசியம்தான் திராவிடத் தேசியம். பேராசிரியர் சுபவீ அவர்கள் குறிப்பிடுவதைப் போல் திராவிடத் தேசியம் மறைந்து தமிழ்த் தேசியம் முகிழ்ந்தது வளர்ச்சியை நோக்கிய பாதையே! ஈழத்தின் எழுச்சியுடன் இன்று அது வீறு கொண்டு நிற்கிறது.

எனவே திராவிடம் என்பது தமிழர்களைக் குறிக்கும் வடசொல்லேயன்றி தெலுங்கர், கன்னடர், மலையாளிகளைத் தமிழரோடு சேர்த்துக் குறிக்கும் சொல் அல்ல. திரிபுற்ற அந்தச் சொல்லை பயன் படுத்தாமல் தமிழ் தமிழர் என்று குறிப்பிடுவதே சாலச் சிறந்தது. சிந்து சமவெளி நாகரிகத்தை அமைத்தவர்கள் திராவிடர்கள் என்று குறிப்பிடுவதை விட அதை அமைத்தவர்கள் தமிழர்கள் என்று குறிப்பிடுவதுதானே தமிழர்களுக்குச் சிறப்பானது.

இடைப் பட்ட காலத்தில் என் மனதில் உருவாகிய திராவிடம் என்ற கோபுரமும் சாய்ந்து விட்டது. ஆனால் பெரியார் என்ற கோபுரம் சாயவில்லை இன்றும் என் மனதில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

### செப்ரெம்பர் 29 சனி மாலை 2 மணி

ஈழத்தமிழர்கள் பயங்கரவாதிகளா என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஒன்றுகூடல்

இடம்: Zoroastrian Centre, 440-442 Alexandra Avenue, Rayners Lane, Harrow Middlesex HA2 9TL தொடர்புகளுக்கு: 0208 546 1560, 07932 549 891, 07950 10 42 46

### செப்ரெம்பர் 30 ஞாயிறு மாலை 5 மணி

வெண்புறா நிறுவனம் வழங்கும் நர்த்தன மாலை. தாயகப்பாடலுக்கான போட்டி நடன நிகழ்ச்சி

இடம்:Walthamstow Assembly Hall, Forest Road, Walthamstow, London, E17 4JDதொடர்புகளுக்கு: வெண்புறா நிறுவனம் 0208 6724100

### ஒக்ரோபர் 10 புதன் காலை 10 மணி

'Professionalism, peace reporting and journalists' safety in Sri Lanka

இடம்: Attlee Room, Portcullis House (House of Commons), London, SW1A 2LW தொடர்புகளுக்கு: ejn@mediawise.org.uk or 0845 002 0167

### ஒக்ரோபர் 11 வியாழன் மாலை 7 மணி

The Human Rights Situation in Sri Lanka with Sunanda Deshapriya & Nadaraja Kuruparan CP•:

இடம் FrontlineClub, 13NorfolkPlace, London, W21QJ தொடர்புகளுக்கு: Tel: 0845 002 0167 Web: www.exiledjournalists.net Email: ejn@mediawise.org.uk

### ஒக்ரோபர் 13 சனி மாலை 5.30 மணி

தமிழ் இளையோர் அமைப்பின் பிரித்தானியக் கிளை வழங்கும் இளங்குருதி - Fusion of Cultures

இடம்: லூசியம் சிவன் கோவில் மண்டபம்,4A Clrendon Rise, Lewisham, London SE13 5ES தொடர்புகளுக்கு: 079 4306 1780

## ஈழத்தமிழர் பயங்கரவாதிகளா?

சர்வேதச பயங்கரவாதம் என்பதன் அடிப்படையில் மேற்கத்தைய நாடுகள் தத்தமது நாடுகளில் சட்டங்களை இறுக்கமடையச் செய்துள்ளன. ஈழத்தமிழர் மீதும் இதன் பாதிப்புக்கள் தென்படுகின்றன. தமிழ் செயற்பாட்டளர்கள் கைது செய்யப்படுவது, தமிழர் அமைப்புக்கள் தடைசெய்யப்படுவது, தமிழர் ஏற்பாடு செய்யும் விழாக்களுக்கு அனுமதிமறுப்பது என்பன இந்த புதிய நடைமுறையால் ஏற்பட்ட விளைவுகளாக உள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயதமேந்தியதாக இருந்தாலும் அது இலங்கைத் தீவின் எல்லைகளை தாண்டியதில்லை. அதுபோல் ஈழத்தமிழர்களும் மேற்குலகை எதிரிகளாகப்பார்க்கவில்லை. இவ்வுண்மைகளை ஆட்சியாளரும் காவல்துறையினரும் கவனத்தில் எடுக்கத் தவறிவிடுகின்றனர்.

இந்நிலையில் பிரித்தானியாவில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் சட்டம், குற்றத்தடுப்பு நடைமுறைகள், அகதித் தஞ்சம், கைதுகளும் தடுத்துவைத்தலும் போன்ற விடயங்களை பற்றியதான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. தமிழ் அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இக்கருத்தரங்கில் அமைச்சர்கள், சட்ட வல்லுனர்கள், காவல் துறையினர் பிற இன செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டு விளக்கமளிக்க உள்ளனர்.

இடம்: Zoroastrian Centre, 440-442 Alexandra Avenue, Rayners Lane, Harrow Middlesex HA2 9TL (2 minutes walk from Rayners Lane tube station) on Saturday, 29 September 2007 at 2pm

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்



இந்தியாவில் பிரபல்யம் பெற்ற ராமகிருஷ்ண சாஸ்திரி அவர்களின் பேரன் **வெங்கடேஸ் சாஸ்திரி** அவர்கள் கைரேகையைக் கொண்டும், ஜாதகத்தைக் கொண்டும் பிறப்பு முதல் ஆயுள் வரையிலான நற்பலன்களை விபரமாகக் கூறுவார். முகராசி சாஸ்திரத்தில் பிரபல்யம் வாய்ந்தவர் வியாபாரம், கல்வி, திருமணம் விடயங்கள், குழந்தைச் செல்வங்கள் கிடைக்கும் காலம் பற்றிய விபரங்கள் தெளிவாகவும் விரிவாகவும் விளக்குபவர். இவரை நாடுபவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம். இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது இவரை ஒருமுறை சந்தியுங்கள். உங்கள் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சுலபமாகத் தீர்வு காணவாம். நடந்தவை, நடக்கிறவை, நடக்கப் போகின்றவற்றை மிகவும் தெளிவாக தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கூறப்படும். **எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தலங்களுக்கு பரிகாரம் செய்யப்படும்.**




Specialist in all kinds of astrology, face reading & palm reading.

**Pandit Vengadesh Sastry**

**Tamilini Cash & Carry** 309 - 311 London Road, West Croydon CR0 3PA

Tel: **07939 109 929 / 07951 286 366**

# நினைவஞ்சலி



**பதஞ்சலி ஆனந்த மகேஸ்வரன்**

[ஓய்வுபெற்ற ஆங்கில முதன்மை ஆசிரியர், முன்னாள் பகுதி நேர ஆங்கில விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்]

இணுவிலைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட **பதஞ்சலி ஆனந்த மகேஸ்வரன்** அவர்கள் 07.09.2007 காலமானார்.

இவர் இணுவில் காலஞ்சென்ற பதஞ்சலி, சிவபாக்கியம் ஆசிரிய தம்பதியரின் பாசமுள்ள மூத்த புதல்வனும், உடுவில் காலஞ்சென்ற மயில்வாகனம், மற்றும் தில்லைமுத்து ஆசிரிய தம்பதிகளின் அன்பு மருமகனும், மயூர வதனி [ஓய்வு பெற்ற ஆசிரியை] அவர்களின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன், கோகுலன், நித்திலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதாயினி, தர்மசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந்த பாஸ்கரன், ஆனந்த மனோகரன், அனுஷானந்தவதி, ஆனந்த மோகனதாஸ், ஆனந்த சற்குருநாதன், ஆனந்தசிவதாஸ், சுவர்ணகலா, நவேந்திரன் ஆகியோரின் அன்பு அண்ணாவும், மயூரவரதன், மயூரபாலினி, மயூரரஞ்சினி, மயூரபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

எங்கள் ஒளிவிளக்கின் 31ம் நினைவஞ்சலி 07.10.2007இல் உடுவில் மயூரபவனத்தில் நடைபெறும். அதே தினம் [07.10.2007] LONDON ARCHWAY முருகன் கோவிலில் பிற்பகல் 1 மணிக்கு ஆத்மசாந்தி பூசை நடைபெறும்.

எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் [11.09.2007 உடுவில்] கலந்து கொண்டவர்களுக்கும் எமது மீளாத்துயரில் நேரடியாகவும், தொலைபேசியூடாகவும், வேறு பல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களிற்கு எமது குடும்பத்தினர் சார்பில் பலகோடி நன்றிகள்.

## கண்ணீர் அஞ்சலி

கண்ணோடு ஒரு நீரூற்று
ஊறி வருவதோ பேராறு
அப்பா உங்களுக்காக ஒரு பாட்டு
பாடி முடித்திடமுன் விதி மாறியது
பூமுகம் மலரவும் புன்னனை துவங்கவும்
மிகையான பாசத்தை நீ தந்தாய்
நன்றியிட வார்த்தைகள் நாம் சேர்த்தோம்
வடித்திடும் கவிதையாய் அதை கோர்த்தோம்
பாடலாய் பாடிடவும் நாமிருந்தோம்
அதை நீ கேட்டிடமுன் – நாம்
உன்னை இழந்தோம்.
ஏனென்ற கேள்வியில் மனம் திகைத்தோம்
என்றைக்கும் உன் அன்பின் இழப்பை
ஏற்க மறுத்தோம்
ஏதுடா இறைவனும் சமாதிதானா
இல்லையென்றால் உனை நாம் இழப்போமா?

மேலதிக தொடர்புகளுக்கு:

**ஜனா / கோகுல்** 020 8204 5366
**ஆனந்தபாஸ்கரன்** 01932 260 049

# மரண அறிவித்தல்



**திரு K. S. கனகசிங்கம்**

Retd. Senior (Income Tax) Assessor

பொலிகண்டி

தோற்றம்: 10-04-1931 மறைவு: 08-09-2007

வடமராட்சி பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வதிவிடமாகவும், தற்சமயம் சென்னை அண்ணாநகரில் வசித்து வந்தவருமாகிய, ஓய்வுபெற்ற சிரேஸ்ட வருமானவரித் திணைக்கள வரிமதிப்பீட்டாளரும் [Retd. Senior (Income Tax) Assessor, Sri Lanka] இசை ஆலயம் அதிபர், ஆய்வாளர் [சென்னை], செந்தூர் ஏஜென்சி[நெல்லியடி] ஸ்தாபகருமாகிய சதாசிவம் கனகசிங்கம் அவர்கள் 08-09-2007 அன்று சென்னையில் காலமானார்கள்.

அன்னார் காலம் சென்றவர்களான திரு. திருமதி கந்தவனம் சதாசிவம் தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான திரு. திருமதி சரவணபவன் [உடுவில்] தம்பதிகளின் அன்பு மருமகனும், செம்பொற்சோதியின் அன்புக் கணவரும், செந்தூரனின் [லண்டன்] அன்புத் தந்தையும், குகசோதியின் அன்பு மைத்துனரும், காலம் சென்றவர்களான சிவபாக்கியம், தம்பிரத்தினம், செல்லா, திரவியநாதன், பரமேஸ்வரி, திருச்செல்வம், பூமணி [சுவிஸ்] சாவித்திரி [கனடா], தவராணி [மானிப்பாய்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்றவர்களான பரராஜசிங்கம், சிவசுந்தரி, அழகரத்தினம், வைரமுத்து [சுவிஸ்], நடராஜா [சுவிஸ்], பாலசுப்பிரமணியம்[கனடா], வதனி [நெல்லியடி], பிருந்தாவனன் [மானிப்பாய்] ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் சென்னையில் வியாழக்கிழமை 13-09-2007 இல் நடைபெற்றது. இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

**மனைவி: செம்பொற்சோதி (சென்னை)** 91-44-2615-4238
**மகன்: செந்தூரன் (லண்டன்)** 44-7737916 290
**சகோதரி: சாவித்திரி** (Atlanta, U.S.A.) 770 236 8031
**சகோதரி பூமணி** (Swiss) 41 41 921 0781
**மருமகன் பாவனி காந்திநாதன்** (Australia) 618 9456 1698
**மருமகன் சுதாகரன் பரராஜசிங்கம்** 905 946 4483
**மருமகன் முரளீதரன் பரராஜசிங்கம்**
416 286 6255 / 416 312 9485

ஊரின் வாசம்

# வாயூறுது பழஞ்சோறு

ப.வை. ஜெயபாலன்
*(ஒரு பேப்பருக்காக)*

பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசி உரலில் இடித்து வறுத்த உள்ளுர் தயாரிப்பான அரிசி மா மிளகாய்த் தூள், என்பன போன்ற விளம்பர வாசகங்களோடு ஏராளமான இலங்கைத் தயாரிப்பு உணவுப் பொருட்கள் புலம்பெயர் நாடுகளுக்கு இறக்குமதி ஆகுவதைப் பார்க்கின்றோம்.

உடற்சத்துக்கு அன்றாடம் தேவையானது உணவு. அறுசுவையோடு உணவை அருந்த ஆசைப்படும் நாக்குடன் உயிர்கள் படைக்கப்பட்டுள்ளன. அன்றாட உணவுக்கான வேட்டையே வாழ்க்கை ஓட்டமாகின்றது.

ஆனால் வசதி வரும்போது வாய்க்கு உருசியாக மனம் உணவைத் தேடுகிறது சிறு வயது முதல் பழக்கமாகிவிட்ட உணவு வகைகள் ஒரு வேளை சோறு இல்லாவிட்டால் சாப்பிட்டது போலவே இருக்காது

எங்கள் உணவு என்று காலாகாலமாகத் தொடரும் உணவு வகைகளுக்கு என்றே பிரபலமாகிவிட்ட உணவுக் கடைகள், எம்மவர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் நிலைத்து வருகின்றன. தாயகத்தில் பிரபலமாக இயங்கிய உணவு விடுதிகளின் பெயர்களிலேயே இங்கும் ஆரம்பிக்கப்படுகின்றன.

**தாயகத்தில் கபேக்களை விட குட்டித் தேனீர்க் கடைகள் பல குறிப்பிட்ட சில உணவு வகைகளுக்கு அல்லது தேனீருக்கு பிரபலம் பெற்றிருந்தது.**

கொத்து றொட்டி என்றால் கடைக்கு வெளியே அடுப்பு வைத்து சத்தம் வரத் தட்டுகின்ற நினைவைக் கொண்டு வருகின்ற வகையிலும் இங்கு கடைகள். ஒரு வித்தியாசம், இந்த நாட்டுச் சட்ட திட்டத்திற்கு அமைய கண்ணாடிக் சட்டத்திற்குள் வைத்து இதைக் காட்சியாக்கும் வியாபார யுத்தி .

லாச்சப்பலுக்குள்ளும் எந்நேரமும் எம்மவர் குவியும் ஒரு குட்டிக்கடைக்குள் இந்த வடிவமைப்பு. அங்கு பிரபலமான கடைகளின் அதே வடிவமைப்பிலும் இங்கு உணவுக் கடைகள். ஒரு காலத்தில் கிளிநொச்சிக் கரடிப்போக்கில் போண்டாவுக்குப் பிரபலமானது மணியம் கபே.

ஒரு பொன்மாலைப் பொழுது நிகழ்வில் அதே மணியம் கபே வடிவம் மாறாமல் டோக்மன் நகரில் எழுப்பப்பட்டிருந்தது. ஈஸ்வரன் தியேட்டர் 'வேட்டைக்காரன்' படச் சுவரொட்டியும் பக்கச் சுவரில் ஒட்டப்பட்டு அந்தநாள் நினைவைக் கொண்டு வந்தது.

முன்பு யாழ்ப்பாணத்தில் வடையென்றால் மலாயன் கபே வடை, மட்டின் றோலுக்கு றிக்கோ. ஐஸ்கிறீமுக்கு சுபாஸ் கபே, கொத்து றொட்டிக்கு அலியா கொட்டேல், அரைறாத்தல் பாண், பருப்பு, பிளேன்ரியோடு முப்பத்தைந்து சதம் கொடுத்து பசியாற ஒரு சில்வா என்ற சிங்கள பேக்கறிக் கடை. சுவையான பிட்டுக்கு ஐந்துசந்தியில் மொக்கன் கடை. தாமரை இலையில் கேசரி சுவைக்க ஒரு தாமோதர விலாஸ். இறைச்சி உணவுக்கு பிளவுஸ் ஹொட்டேல். இவ்வாறாக பல உணவுக் கடைகள் பிரபலம் பெற்றிருந்தது.

தாயகத்தில் கபேக்களை விட குட்டித் தேனீர்க் கடைகள் பல குறிப்பிட்ட சில உணவு வகைகளுக்கு அல்லது தேனீருக்கு பிரபலம் பெற்றிருந்தது.

தெல்லிப்பழை அம்பனைச் சந்தியில் சீனி அம்மான் கடை, சின்னத் தேனீர்க் கடைதான். வெறும் தேனீர் மூன்று சதம் பால்த் தேனீர் ஐந்து சதம் விற்ற காலம் முதல், சீனி அம்மான் 'ஏலாவளியாக' போன காலம் வரை அவரின் நன்னாரி வேர்த் தேனீர் பிரபலம் பெற்றிருந்தது.

கடைக்கு வெளியே எந்நேரமும் மினுக்கிப் பளபளப்பாகத் தெரியும் பித்தளைத் தேனீர் அடுப்பு, பளபளப்பான செப்பு மூக்குப் பேணிகள். ஒற்றை முழவேட்டியை சண்டிக் கட்டாக மடித்துக்கட்டிய படி வெள்ளை வெளீர் என்ற மேனியில் வெண் றோமங்கள் தெரிய, இரு கைகளையும் மாற்றி மாற்றி உயர்த்தி அவர் தேனீர் ஆற்றும் காட்சி இன்னும் நினைவில் நிற்கும்.

**கொத்து றொட்டி என்றால் கடைக்கு வெளியே அடுப்பு வைத்து சத்தம் வரத் தட்டுகின்ற நினைவைக் கொண்டு வருகின்ற வகையிலும் இங்கு கடைகள்.**

கிளிநொச்சியில் கணவாய்க் கறிக்கு பெயர் பெற்றது பழைய பஸ் நிலைய சிவாஸ்கபே. இது கிளிநொச்சியில் நீண்ட காலம் நிலைத்திருந்த, இருபத்து நாலு மணிநேர உணவுக்கடை. பழைய கணவாய்க் கறியோடு அன்றைய புதுக் கறியையும் கலந்து சமைப்பது தான் அந்தச் சுவையின் வெற்றி என்பார் அந்தக் கடை முதலாளி றோட் டறிக் குலத்தார். ஆனால் அந்த நளபாகம், அந்தக் கறியின் சுவை அவரோடு எப்போதோ எங்கேயோ இடம் பெயர்ந்து விட்டது.

கொழும்பிலும் ஏடா போட்டியாக சாப்பாட்டுக் கடைகள். நாலாம் குறுக்குத் தெருவை ஒட்டி வரிசை வரிசையாக எம்மவர்களின் சாப்பாட்டுக் கடைகள். 'ஐயாவுக்கு ஒரு கால் உடைச்சுக் கொண்டு வா, ஐயாவுக்கு பெரிசு போடு' என்று பரிமாறுவோர்களின் ஆரவாரக் குரல். வாங்கு மேசையில் உட்கார்ந்து அந்த உணவை வயிறாறச் சுவைப்பதிலும் ஒரு மகிழ்ச்சி.

எம்மவர் பலரின் மனங்களுக்கு புலம் பெயர் நாடுகளில் ஏக்கம் தரும் ஒரு உணவு பழஞ்சோறு. இங்கு வீட்டிலும் காணமுடியாது. கடையிலும் வாங்க முடியாது.

முதல் நாள் மதியம் சமைத்த சோற்றுப் பானைக்குள் எஞ்சிய சோற்றுக்குள் தண்ணீர் ஊற்றி வைத்து மறு நாட் காலை அதைப் பிழிந்து பழைய கறிகளோடு சேர்த்துக் குழைத்து திரணையாக்கி அம்மம்மா குழைத்துத் தர, பூவரசம் இலையைக் கோலி கையில் குழையலை ஏந்தி வாயால் கௌவிச் சுவைத்தபடி இடை இடையே கருவாட்டுப் பொரியலிலும் ஒருகடிகடிக்க அந்தச் சுவையே அலாதிதான்.

வயிறு நிறைந்த திருப்தியை ஏவறை வெளிப்படுத்தும். மக்டொனால், கென்டக்கியால் இட்டு நிரப்பப் பட முடியாத இடைவெளிகள். இட்டலி தோசை, குண்டுத் தோசை, இடியப்பம் றொட்டி, அப்பம், பிட்டுவகைகள் எல்லாம் இங்கும் உள்ளன. ஆனால் அந்தப் பழம் சோறு?.. காண முடியாத பண்டம் தான்.

எம்மவர் பிள்ளைகளோ பிற்சா, பேகர் பிரியர்களாக வளர்கின்றார்கள் நாளாவட்டத்தில் தமிழர் உணவுக் கலாசாரமும் மாறிவிடுமோ?

# 'லடாக்' பிரதேசம்

மாசிலாமணி
*(ஒரு பேப்பருக்காக)*

கஷ்மீர் இந்தியாவின் கூரைதான். அதற்கு அப்பால் வடக்கில் சீனாவரை இமயத்தின் ஒருசில சிகரங்களைத் தவிர குறிப்பிடும் அளவுக்கு எதுவுமே இல்லை. மேற்கில் பாகிஸ்தான். தெற்கில் ஜம்மு. இம்மாநிலத்தின் இரு மாவட்டங்களை உள்ளடக்கிய லடாக் பகுதி 435 கிலோ மீற்றர் வரை வியாபித்து கிழக்கை அலங்கரிக்கிறது.

காகில், லே ஆகிய இவ்விரு மாவட்டங்களிலும் காகிலில் பௌத்தர்களும் முஸ்லீம்களும் கலந்து வாழ்ந்தாலும் லேயில் முழுக்க முழுக்க பௌத்தர்கள் வாழும் பிரதேசம் என்று சிந்திக்க வைக்கும் அளவுக்கு பௌத்த சின்னங்கள் காணப்படுகின்றன. அங்கு வாழும் அகன்ற முகம்கொண்ட மங்கோலிய மக்கள் மத்தியில் இருக்கும்போது ஏதோ ஒரு புதிய சூழலில் உள்ள உணர்வே ஏற்படுகிறது.

சிந்து நதியும் இந்து நதியும் ஓடும் இமயத்தின் பள்ளத்தாக்குகள் ஊடாகச் செல்லும் இந்த ஸ்ரீநகர் லே பாதை வழிப்பயணம் நிச்சயம் புதிய பிரமிக்கும் அனுபவத்தை ஏற்படுத்தும். இப்பாதையின் 90 கிலோ மீற்ரர் தொலைவில் உள்ள சொனமாக் பகுதியை மலைஏறிகளின் சொர்க்கம் என்பார்கள்.

அங்குள்ள உயர்ந்த கணவாய்களும் ஏரிகளுமே அதற்கு சான்று. வாகனப் பயணியாக அப்பாதை ஊடாகச் செல்லும் என்னைப் போன்றோருக்கும், பனிபடர்ந்த மலைகள் ஊடாக இமயத்தின் நடுவே செல்லும்போது ஒருவகைப் பரவசம் ஏற்படத்தான் செய்யும்.

சொனமாக்கில் இருந்து எமது பாதையின் 15 கிலோ மீற்றர் தொலைவில் புனித அமரநாத் குகைக்கு யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் யாத்திரையை ஆரம்பிக்கும் பால்தல் அடிவாரம் உள்ளது. யூன் பிற்பகுதியிலிருந்து ஆகஸ்ட்டின் முற்பகுதிவரை ஆண்டில் 60 நாட்கள்தான் யாத்திரைக்கு உகந்த காலம். அந்த குறுகிய காலத்திற்குள் தான் எத்தனை யாத்திரிகர் எத்தனை குதிரைகள் எத்தனை குதிரை உரிமையாளர்கள்? இடமே ஒரு தனிக் களை கட்டும்.

பால்தலை அடுத்து இந்தப் பாதையின் அதி உயர்ந்த 11,500 அடி உயரம் கொண்ட சோஜிஜா ஊடாகச் செல்கிறோம். அது எப்படியான அனுபவத்தை ஏற்படுத்தும் என்பதை அதன் உயரமே உங்களுக்கு உணர்த்தும். அங்கிருந்து 20 கிலோமீற்ரர் தொலைவில் டிராஸ் உள்ளது. இது மக்கள் வாழும் குளிர் கூடிய பிரதேசங்களில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. அடுத்து வரும் நகரம் காகில். இது காகில் மாவட்டத்தின் பிரதான நகரம். பயணம் அரைவாசி முடிந்துவிட்டது. அதாவது 200 கிலோமீற்றர் முடிந்துவிட்டது.

இப்போது லே நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது. மிகுதியான 235 கிலோ மீற்ரரும் மனதைக் கவரும் மலைசூழ் சூழல்தான். ஆனால் நிறம்தான் சற்று சிவக்கின்றது. ஒரு அரைப் பாலைவனச் சூழல்போல் தென்படுகிறது. இதற்கு முக்கிய காரணம், இதுவரை எம் பாதைக்கு அண்மையாக ஓடிய இந்து நதி ஒரு சில கிலோமீற்ரர் வரை சற்று வடக்கே தொலைவில் விலகுகிறது. பின் திரும்பவும் 100 கிலோமீற்ரர் வரை எமக்கு பக்கத்தில் வருகிறது. பின்பு லேக்கு அண்மையாக திரும்பவும் விலகுகிறது.

இதனால் லே நகரத்திற்கு அண்மையாக எந்த நதியும் இல்லாத காரணத்தால் அங்கு சிறிது தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இது பெரிய பிரச்சனையாக எதிர் காலத்தில் இருக்காது. இந்து நதியின் உயரக் கிளை ஒன்றை திசை திருப்பி எளிதில் பிரச்சனையை சமாளிக்கலாம்.

ஸ்ரீநகரிலிருந்து வரும் பாதையைவிட ஹிமாசல பிரதேசத்தின் மணலி என்ற இடத்திலிருந்து ஒரு பாதை லேக்கு வருகிறது. இப்பாதையில் முக்கிய பௌத்த தலங்கள் உள்ளன. சே, திக்சே ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இதைவிட இப்பாதையில் 15,000 அடி உயரத்திற்கு கூடிய கணவாய்கள் உண்டு.

இதில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது, என்னதான் இரண்டு பாதைகள் இருந்தாலும் ஒக்டோபர் நவம்பர் ஆகிய மாதங்களிலிருந்து ஏப்ரல் மாதம் முடியும்வரை இவ்விரு பாதைகளும் பனி காரணமாக மூடப்பட்டு வெளி உலகுடன் எதுவித வாகனத் தொடர்பும் இன்றி இருப்பவை. ஆகையால் இப்பகுதி மக்கள் கறையான் சேகரிப்பதுபோல் குளிர்காலத்திற்கு தேவையான உணவைச் சேகரிக்காவிடில் அவலத்திற்கு உள்ளாவார்கள்.

Strand Motor Co.
156 - 158 Handcroft Road, West Croydon CR0 3LE
Service
MOT
Parts
Bodywork


Italian Specialists French Specialists Japanese Specialists
தமிழில் பேசி உங்கள் காரின்
எந்தத் திருத்த வேலைகளையும்
முழுமையாகச் செய்ய வசதி
Tamil Specialist Service Centre Croydon
Monday to Friday 8.00am - 6.30pm Saturday 9.00am - 2.00pm
Tel: 0208 686 0868 Fax: 0208 686 0667

# Kerala Ayurveda

In its purest form now at London Wembley, Southall and **NOW OPEN** at **CROYDON (Surrey)**

*Are you suffering from any of the following Chronic/ Acute Disease?*

Arthritis

Muscle Pains

Stress & Strain

Spondylitis

Joint Pains

Piles

Frozen Shoulder

Depression



Obesity

Sinusitis

Slip Disc

Psoriasis
Eczema


Rheumatism

Migraine

Insomnia



Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are very effective for treating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditional way at the following address to undertake these treatments for the suffering people in London and are manned by well qualified and experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchakarma technicians from Kerala, India.



*We Also Provide: Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etc. & Beauty therapies using herbal mixtures.*

## CALL NOW FOR AN APPOINTMENT AND FREE CONSULTATION | EXPERIENCED TEAM OF DOCTORS!

*8 Grand Parade*
*Forty Avenue*
*Wembley*
*HA9 9JS*
*Tel 020 8908 4666/*
*07866687216*

*505 London Road*
*Thornton Heath*
*Croydon*
*Surrey*
*CR7 6AR*
*Tel: 0844 7780052/ 020 8684 7513*

*60 King Street*
*Southall*
*Middlesex*
*UB2 4DB*
Tel:02085719111/
07958539658

Website: www.keralaayurvedam.co.uk | email: nacsaayurveda@lycos.co.uk

**NACS KERALA AYURVEDA**

A DIVISION OF NACS AYURVEDIC CENTRE (LTD.)

# விளையாட்டுப் போட்டியும் விநோத உடைக் கூத்தும்





விளையாட்டுப் போட்டியும் விநோத உடைக் கூத்தும்

'இலகுவா......ய் நில், க...வ...ன்ம்,

செற், றெடி, கோ....'

கையில் மாட்டியிருந்த பலகைச் சட்டம் இரண்டையும் ஒரு சேர அடிக்கின்றார் விளையாட்டுப் பாட மாஸ்டர். ஒவ்வொரு கோட்டு எல்லைக்குள் இருக்கும் வீரர்கள் தொலைவில் தெரியும் கயிற்று முடிவிடத்தையே கண்கள் நோக்க, விர்ரென எழும்பும் அம்பு போலப் பாய்கிறார்கள்.

'நாகலிங்கம்! ஓடு ...... ஓடு'

'செல்லையா! விடாதை முந்து'

'டோய் கார்த்திகேசு! செல்லையாவின்ர கோட்டுக்குள்ளை போகாதை',

ஓடும் வீரர்களைக் கலைத்துக் கொண்டு அதுவரை மைதானத்தின் கரையே நின்ற ஒவ்வொரு போட்டி இல்லத்து மாணவர்களும் ஓடுகின்றார்கள்.

வயதுக்கு வந்த பெண்பிள்ளைகள் மட்டும் ஓடினால் மானக்கேடு என்று, கையைப் பிசைந்து கொண்டே 'கடவுளே....கடவுளே... எங்கட இல்லம் தான் வெல்லவேணும்' என்று ஊரில் உள்ள அத்தனை தெய்வங்களையும் மைதானத்துக்கு அழைக்கிறார்கள்.

உணர்ச்சி வசப்பட்டு ஓட்ட மைதானத்தின் கயிற்று எல்லைகளைக் கடப்பவர்களை கணேசலிங்கம் மாஸ்டரின் சவுக்குப் பிரம்பு பதம் பார்க்கின்றது.

மைதானம் எங்கும் வெற்றி, தோல்வி, முதலாம் இடம், இரண்டாம் இடம், இதுவே பேச்சு. மைதானத்தின் கரையெங்கும் அந்தந்த விளையாட்டு இல்லங்களுக்கான கொட்டகை போடப்பட்டு அந்தந்த இல்ல பாட்ச்களைச் சட்டையில் அணிந்த மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழியும்.

ஒரு போட்டியில் வென்றால் என்ன தோற்றால் என்ன திரும்ப வரும் வீரனுக்கு குளுக்கோஸ் கொடுக்கவென ஒரு பகுதி மாணவியர் நிற்பார்கள். போர்க்களம் சென்று திரும்பும் வீரன் போல பெனியன் தொப்பமாக நனைய நனைய வீரரும் குளுக்கோஸ் தேடி வருவார். கூடவே வென்றாலும் தோற்றாலும் துணை வரும் இல்லக் கொடியுடன் ஒருவர்.

'உங்கட பள்ளிக்காலத்தில் மறக்கமுடியாத நாட்கள் எவை?'

என்று யாராவது என்னைப்பேட்டியெடுத்தால் நான் விழுந்தடிச்சுச் சொல்வேன்,

'விளையாட்டுப் போட்டி நடக்கிற நாட்கள் தான்' என்று.

வருடத்தின் பெரும்பாலான நாட்கள் வெறும் பீ.ரி வகுப்புக்குத்தான் எட்டிப் பார்க்கும் மைதானம் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் என்றால் தான் முழு நேர ஊழியனாக மாறிவிடுகின்றது.

அதுவரை காலமும் தலைகுனிந்து நாணிக் கோணியிருந்த மைதானம் தலை நிமிர்ந்து நிற்க வழி சமைப்பது இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலம்.

முதல் வாங்கில் இருந்து படிப்பில் முதலாம் இடம் பெறத்துடிக்கும் மாணவர்களைப் புறந்தள்ளிக் கடைசி வாங்கிலிருந்து வந்து விளையாட்டுப் போட்டியில் கலந்து வெற்றிக் கோப்பையைப் பறிக்கும் மாணவனை இனங்காட்டுவதும் இந்த விளையாட்டுப் போட்டிகள் தான்.

ஆறாம் வகுப்பிலிருந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் தான் என் படிப்பு தொடர்ந்தது. செல்லையா, நாகலிங்கம், கார்த்திகேசு, சபாரத்தினம், என்று கல்லூரியின் பழைய அதிபர்களின் பெயரே விளையாட்டு இல்லங்களுக்கும் இருந்தது.

பாவியர் போகும் பாதை பள்ளமும் திட்டியும் என்பது போல நான் சேர்ந்த நாகலிங்கத்தின் நிலை தேர்தலில் நிற்கும் சுப்பிரமணியசாமி போல கவலைக்கிடமானது. என்னைப் போல ஆட்கள் நாகலிங்கம் இல்லத்தின் அணித் தேர்விலேயே நாலாம் ஐந்தாம் இடம் எடுக்கக் கூடிய வல்லமை மிக்கவர்கள்.

செல்லையா இல்லக்காரங்கள் தான் தொடர்ந்து பெரும்பாலான ஆண்டுகளின் விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடம் வருவார்கள். தாங்கள் ஏதோ அவுஸ்திரேலிய கிறிக்கற் அணி என்ற தோரணையில் போட்டி ஆரம்பமாக முதலேயே வீறாப்புடன் வளைய வருவார்கள்.

அக்னி நட்சத்திரம் பிரபு - கார்த்திக் போல ஆளை ஆளை முறைச்சுப் பார்த்துக்கொண்டே தம் பயிற்சிகளை எடுப்பார்கள். விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு ஒரு மாதம் முன்பே மதிய நேர வகுப்புக்கள் காலி. விளையாட்டு மைதானத்தில் வந்தும் ஓரமாக இருக்கும் மர நிழலில் இருந்து விளையாட்டு நேரத்திலும் புத்தகமும் கையுமாக இருந்து படிக்கிறவையும் இருக்கினம்.

கொக்குவில் இந்து கலவன் பாடசாலை என்பதால் விளையாட்டுப் போட்டி நடக்கும் நாட்களில் பொம்பிளைப்பிள்ளையள் விளையாடுற கூத்தைப் பார்க்க யாழ் இந்து, சென் ஜோன்ஸ், சென்றல் பள்ளிக்கூடப் பெடியளும் வந்து மதிலில் இருந்து வேடிக்கை பார்ப்பினம்.

இவ்வளவு நாளும் லேடீஸ் கொலிச், வேம்படிப் பிள்ளையளை சைற் அடிச்சுப் போட்டு இப்ப எங்கட பள்ளிக்கூடப்பிள்ளையளையும் பார்க்க வந்திட்டாங்கள் என்று உயர்தர வகுப்பு அண்ணாமார் பொருமுவார்கள். என்னைப் போல ஆட்கள் விளையாட்டுப் போட்டி முடிஞ்ச அடுத்த நாள் தான் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளை அறிவிக்கும் பெட்டியில் ஆசை தீர ஏறிப் பார்க்கலாம்.

நாங்கள் உயர்தர வகுப்பில் காலடி எடுக்கவும் அவ்ரோ, புகாரா, சியாமாசெற்றி என்று இலங்கை அரசாங்கம் வானத்தில் வாண வேடிக்கை காட்டவும் சரியாக இருந்தது. இலங்கை விமானப்படையின் விளையாட்டுப் போட்டிக்கு இடம் கொடுத்து கல்லூரி விளையாட்டுப் போட்டிகளும் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டன.

**வாழ்வே மாயம் கமல் மாதிரி நடிக்கலாம் என்று கற்பனை பண்ணினேன்.. யானை மார்க் சோடாப் போத்தலில் சவர்க்காரத் தண்ணீரை நிரப்பினால் கள்ளு மாதிரி இருக்கும் என்று சிவாஜி பட கலை இயக்குனர் தோட்டாத்தரணி ரேஞ்சுக்கு பிளான் பண்ணினேன்.**

என் ஆரம்பப் பாடசாலை வாழ்க்கை ஐந்தாம் வகுப்பு வரை இணுவில் அமெரிக்கன் மிசனில் வாய்த்தது. இணுவில் என்றாலே சமயப்பற்றுக்கு கேட்கவே வேண்டியதில்லை. அதனாலோ என்னவோ எங்கட பள்ளிக்கூடத்தின் விளையாட்டு இல்லங்களுக்கு அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று நாலு திருமூர்த்திகளின் பெயரை வைத்து விட்டார்கள்.

'அப்பர் ஓடு',

'சம்பந்தர் விடாதை'

என்று சிவனே என்று இருந்த நாயன்மார்களை மைதானத்துக்கு இழுத்து வேடிக்கை நடக்கும் காலம் இந்த விளையாட்டுப் போட்டிகளில் தான் நடக்கும்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு விளையாட்டு இல்லம் ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே தான் எனக்கு ஏழரைச் சனி தொட்டது.

அதே பள்ளியில் ஆசிரியராக இருந்த என் அம்மாவோ சுந்தரர் இல்லத்துக்கு பொறுப்பாசிரியை. நானோ சம்பந்தர் இல்லம். ஒரு வீட்டுக்குள்ளேயே எதிரியை வைத்துக்கொண்டிருந்தேன். விளையாட்டுப் போட்டி நடக்கும் நாள் என் அம்மாவுடன் போகும் போது வழியில் இருக்கும் ஞான வைரவர் ஆலயத்தில், ஏற்கனவே கடையில் வாங்கி வைத்த கற்பூரத்தைக் கொழுத்தி தேங்காயை உடைத்து விட்டு, மனமுருகப் பிரார்த்தனை செய்வார் எங்கட அம்மா.

'எனக்கு தெரியும், தன்ர சுந்தரர் இல்லம் வெல்லவேணும், மற்ற இல்லம் தோக்கவேணும் எண்டு தானே நீங்கள் இப்ப கும்பிட்டனீங்கள்' என்று சிணுங்கியவாறே அம்மாவின் கையைப் பிடித்து வலிக்கும் போல கிள்ளுவேன்.

அம்மா கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டே 'அப்பிடியில்லை, பேசாம வாங்கோ' எண்டு கொற இழுவையில் பள்ளிக்கூடம் கொண்டு போய்ச் சேர்த்துவிடுவார்.

அம்மாவின் பிரார்த்தனை தான் பெரும்பாலான ஆண்டுப் போட்டிகளில் வெல்லும். 'எனக்குச் சம்பந்தர் இல்லம் எண்டு சொல்லவே வெக்கமா இருக்கு' என்று மனதுக்குள் புழுங்குவேன்.

ஆரம்பப் பாடசாலைக்கு உரித்தான நூறு மீற்றர், இரு நூறு மீற்றர் ஓட்டம், தடை தாண்டி ஓட்டம் போன்ற சில்லறை விளையாட்டுக்கள் தான் வழக்கமாக இருக்கும். கூடவே விநோத உடைப் போட்டி என்ற ஒரு கூத்தும் நடக்கும்.

ஒவ்வொரு விளையாட்டு இல்லத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவிகள் புராண அல்லது நடைமுறைப் பாத்திரத்துக்கு உருமாற்றி விளையாட்டுப் போட்டியின் இடைவேளை நேரத்தில் உலா வருவார்கள். சிறந்த நடிப்பை வழங்கிய நடிகருடைய இல்லத்துக்கு விசேட புள்ளி கிடைக்குமாம்.

நாலாம் வகுப்பு படிக்கும் போது என் கனவுப் பாத்திரமான (?) குடிகாரன் பாத்திரத்தில் நடிக்க எனக்கு ஆசை வந்தது. வாழ்வே மாயம் கமல் மாதிரி நடிக்கலாம் என்று கற்பனையெல்லாம் பண்ணி வைத்திருந்தேன்., யானை மார்க் சோடாப் போத்தலில் சவர்க்காரத் தண்ணீரை நிரப்பினால் கள்ளு மாதிரி இருக்கும் என்று சிவாஜி பட கலை இயக்குனர் தோட்டாத்தரணி ரேஞ்சுக்கு பிளான் பண்ணினேன்.

என்னுடைய விளையாட்டு இல்லத்தின் பொறுப்பாசிரியையிடம் என் கனவுப் பாத்திரத்தைச் சொல்லி அனுமதி கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே எட்டி நடந்து அம்மாவின் வகுப்புப் போய்

'இஞ்சை ரீச்சர், உங்கட மகன் விநோத உடைப்போட்டிக்கு என்னசெய்யப்போறார் எண்டு கேளுங்கோ'

என்றவாறே எல்லாத்தையும் சொல்லிப் போட்டார்.

'வீட்டை வாரும், உமக்கு இருக்கு'

என்று எட்டிய தூரத்தில் என்ன நடக்கின்றது என்று உளவு பார்த்துக்கொண்டிருந்த என்னைப் பார்த்து கைவிரலால் உறுக்கினார் அம்மா. ஒரு எதிர்கால நடிகனின் கனவுக் கோட்டை அன்றே தகர்ந்தது.

விளையாட்டுப் போட்டிகளிலே மைதானத்திலே ஒன்றும் பெரிதாகச் சாதிக்காவிட்டாலும் அந்த நாள் நினைவுகளை மீட்டிப் பார்ப்பது கூடச் சந்தோசம் தான்

*-கானா பிரபா*

THIGAN MOTORS
CAR SALES & MOT



உங்கள் வாகனங்களை உத்தரவாதத்துடனும் திறமையுடனும் திருத்திக் கொள்வதற்கும்
புதிய பழைய வாகன உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்வதற்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

- All Types of Repairs
- We also do Recovery Services
- Computer Diagnosis
- Painting
- Car Electrical
- Bodywork

Open 7 Days a Week
9:00am - 6:00pm (Mon- Sat)

திகன் மோட்டோர்ஸ்

Unit No.65, Barking Industrial Park
Barking, 1G11 OYU

Tel: 0208 594 7272
Mob: 07930 749 325
Email: thileethigan@aol.com

# GRAND OPENING

We are pleased
to invite you for the opening of

# Dosa n Chutny

*Eat n joy @ Chennai's best*


## South Indian & Restaurant

on Saturday day the 29th Sep 2007 at 10.30am

68, Tooting High Street, London SW17 0RN

*( Opposite to Tooting Broadway Tube station )*


29th Sep
Complimentary
Food




From
29th Sep 07
10% Discount
for 7 days

## Tel : 020 8767 9200

# பாலாபிசேகம் செய்வதும் பாதுகை காவுவதும்



எங்கள் தந்தையார் முருகேசு பொன்னையா அவர்களுக்கு அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், மதுரை மணி ஐயர், எம்.கே.தியாகராஜா பாகவதர் இவர்களைப் போலவே சற்றே பெண்மை கலந்த பட்டுச் சாரீரம், இனிமையாகப் பாடுவார்.

அவர் எம்.கே.தியாகராஜபாகவதரின் இசை மேல் பெரும் பித்தே கொண்டிருந்தார் குறிப்பாக மணிஐயர், அரியக்குடி, எம்.கே.தியாகராஜா பாகவதர், பி.யு. சின்னப்பா பாடல்களுள் இசைத்தட்டாக வெளிவந்தவற்றின் அனைத்துப் பிரதிகளையும் வாங்கினார். பெரிய சேகரிப்பு பாதுகாக்கப்பட்டு அவரிடம் இருந்தது.

அவரது பித்தின் உச்சக்கட்டம இது.ஆதர் சக்கலைஞனை நேரில் கண்டுவர வேண்டுமென்று யாழ்ப்பாணத்திலிருந்து பாகவதரது பரமரசிகர்களாக மேலும் பத்துப் பன்னிரண்டு ஆசாரிமார்களைத் திரட்டிக்கொண்டு 1950ம் ஆண்டு சென்னைக்கு போயிருக்கிறார். அது பாகவதர் 'சியாமளா' திரைப்படத்தில் நடித்துக்கொண்டிருந்த நேரம்.

சென்னையில் பாகவதரின் வீட்டில் பாகவதர் தந்தையாரைப் பாடச் சொல்லிக்கேட்டாஎ. இவரும் சிலபாடல்களைப் பாடியிருக்கிறார். பாகவதருக்கு தந்தையாரின் பாடல் மிகவும் பிடித்து போய்விட 'அம்பா...... மனம் கனிந்தது கடைக்கண்பார்' என்கிற பாடலை மீண்டும் மீண்டும் பாடச்சொல்லிக் கேட்டாராம்.

பின் 'ஆசாரிமார்கள் என்னதான் தங்கத்தை வைத்து தொழில்செய்தாலும் அவர்கள் வாழ்க்கைத் தரம் மாத்திரம் கல் உடைத்துப் பிழைப்பவனைவிட மோசமாக இருக்கிறதே.......' என்று வருத்தப்பட்டாராம்.

அது மாற்றமுடியாத உலகப்பொதுவிதி என்று தந்தையர் கூறவும்

'அட சனியனே..... அது உங்க நாட்டிலும் அப்படித்தானா' என்று கேட்டு ஆச்சரியப்பட்டார்.

சில நேர மௌனத்தின் பின் அங்கே நம்மவர்களும் 'எவராவது பிச்சையும் எடுப்பார்களா' என்று கேட்டார;

"தாளாத வறுமையோடு அல்லாடுபவர்கள் இருக்கிறார்கள்தான்...... ஆனால் யாரும் பிச்சை எடுத்துப் பிழைக்கவில்லை

"அப்படி யாரும் எடுத்தாங்கன்னா ஒடனே நீங்க சுட்டுத்தள்ளிப்புடணும்"

இப்படியெல்லாம் விதூஷகமாகவோ தீவிரமாகவோ பேசினாலும் பாகவதர் தான் கொடிகட்டிப்பறந்த காலத்தில் வறுமையில் உழன்ற அவரது இரத்த உறவுகளிடம் கூடப் பாராமுகமாகவே இருந்தாரென்று அவரைத் தெரிந்தவர்கள் இன்னும் சொல்வார்கள்.

1990ல் இலங்கை அகதிகள் அடியுதை பட்டுக்கொண்டு வள்ளங்களில் கொலை பட்டினியாக மண்டபம் துறைக்கு வந்து இறங்கியிருந்த வேளை அந்தப்பக்கம் எதுக்கோ போயிருந்த சிவாஜி கணேசனுக்கும் என்ன தோணிச்சோ போய் அவர்களைப் பார்த்திருக்கிறார்.

கர்ணன் மன்னிக்கவும் கணேசன் வருகிறாரென்றவுடன் ஒருவேளை சாப்பட்டுக்காவது ஏற்பாடு பண்ணுவார் என்கிற நம்பிக்கையில் ஏதிலிகளும் அடித்துப் பிடித்துக்கொண்டு அவர் முன்னே வந்திருக்கிறார்கள்.

**இப்போ எனக்கு இங்கே வரவேற்பு தந்திருக்கிறீர்களே சந்தோஷம்.. பேஷ்! அதுபோல அந்தக் குப்புசாமிக்கும் கொடுப்பீங்களா, என்னைக்கும் ஜிகினாவில மயங்கிறதே தமிழன் பிழைப்பாய்ப்போய்ச்சு!'**

அவர்களது பசியாக இருப்பதுபற்றி யாரோ அவரிடம் எடுத்துக்சொல்லவும்

'சாப்பாட்டுக்கெல்லாம் அதிகாரிங்க ஏற்பாடு செய்வாங்கப்பா'

என்றுவிட்டு அங்கிருந்து கடுகிக் கழன்றாராம். இவரின் வள்ளண்மை பற்றி சென்னையில் முச்சக்கரவண்டியோட்டி ஒருவர் சொன்ன இன்னொரு கதையும் இருக்கிறது.

'நான் அப்போ அவருடைய இரசிகர் மன்றத்தில மெம்பரா இருந்தேனுங்க. அவரு மகனுக்கு கல்யாணம் வந்தப்போ வீட்டில பெரிய பந்தல்போடணும், எல்லாருக்கும் சாராயமும் கோழிக்கறி சாப்பாடும் போடுவாங்கடான்னு நம்ப செக்கிரட்டரிதான் நம்பிள்ளைகள்ல ஒரு பதினைஞ்சுபேர அழைத்துப் போனாருங்க.

பந்தவேலையெல்லாம் முடிஞ்சு இரவு பன்னிரண்டு மணியாச்சு. யாரும் சாப்பாடு பற்றிய பேச்சையே எடுக்கிறதைக் காணோம். நின்னு நின்னு பாத்திட்டு அப்புறம் செக்கிரட்டரிதான் கையேந்திபவனில் கிடைச்ச சாப்பாட்டையெல்லாம் நம்ப எல்லாருக்கும் தன் கைக்காசில வாங்கி கொடுத்தாருன்னாப் பாருங்களேன்.'

**1990ல் இலங்கை அகதிகள் அடியுதை பட்டுக் கொண்டு வள்ளங்களில் கொலை பட்டினியாக மண்டபம் துறைக்கு வந்து இறங்கிய வேளை அந்தப்பக்கம் எதுக்கோ போயிருந்த சிவாஜி கணேசனுக்கும் என்ன தோணிச்சோ போய் அவர்களைப் பார்த்திருக்கிறார்.**

இது கமலஹாசனுக்கும் இருக்கிறது. ஹாசனின் பெரிய தந்தை ஒருவர் இன்னமும் குடிசைவாசியாகவே காலத்தை யோட்டுகிறாராம். அவர் தான்தான் ஹாசனுக்கு சின்ன வயதில் வேஷம் கட்ட, பாட, நடிக்கவெல்லாம் சொல்லிக் கொடுத்ததாக ஒரு பேட்டியில் சொல்லியிருந்தார். அந்தப்பெரியவர் இப்போது உயிருடன் இருக்கிறாரோதெரியாது.

எம்தந்தையாரும் சென்னை சென்று திரும்பிய பிறகு பாகவதர் புராணம் பாடுவதை நிறுத்திவிட்டாராம். என்ன காரணமென்று அம்மா துருவி விசாரித்தா.

'அட நம்ம ஆட்கள் என்னைப்பார்க்க மினைக்கெட்டு இன்னொரு தேசத்திலிருந்து வந்தார்களே ஒரு டிபனாவது கொடுத்து உபசரிக்கவேணுமே என்கிற விவஸ்த்தைகூட இல்லை அந்த ஆளுக்கு. ஆளுக்கொரு 'பீடா'வைக் கையில்தந்து அனுப்பி விட்டார்.'

இசைஞானி இளையராஜா தியாகப்பிரம்மம் அளவுக்கு John Sebastian Bach ஐயும் குருவாகவும் உயிராகவும் மதிப்பவரென்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். முன்னைய கிழக்கு ஜெர்மனிக்கு வந்து J.S.Bach Pianist/ Organist ஆகக்கடமையாற்றிய தேவாலயத்துக்கு வந்து அஷ்டாங்கமா விழுந்து சேவித்தெல்லாம் சென்றிருக்கிறார்.

பெர்லினில் பிரமாண்டமான புத்தகக்கடை ஒன்றில் நூல்கள் பலவற்றையும் வருடிக் கொண்டிருந்த ஒருநாள் J.S.Bach இன் வாழ்க்கைச்சரிதை பற்றிய தடிமனான அழகான நூலொன்று அவர் வாழ்ந்த வீடுகள், பணிபுரிந்த இடங்கள், பாவித்த இசைக்கருவிகள் எனப்பலவர்ணப்படங்களுடன் தற்செயலாக என்கண்ணில் படவும் என்னைவிடவும் இசைஞானி இதைக்கண்டால் பேருவகை கொள்வாரே என்றொரு ஆசையில் செலவைக் கருத்தில் கொள்ளாது அந்நூலைப் பார்சல் செய்து கூரியரில் அனுப்பிவைத்தேன்.

இப்போ வருஷங்கள் இருபது ஆகி விட்டது. இன்னும் நூல் கிடைத்தது என்று பெருமானால் ஒருவார்த்தை எனக்குத் தெரிவிக்க முடியவில்லை

எம்.ஆர். ராதா சிங்கப்பூரில் ஒரு கூட்டத்தில் கலைஞனுக்கும் இரசிகனுக்கும் எப்படிப்பட்ட உறவு இருந்தால்போதுமென்று கூறிவைப்பார்.

உங்களுக்கு ஒரு ரசிகனின் நடிப்பு புடிச்சிருக்கா தியேட்டரில அவன் படத்தை பார்த்து ரசிச்சிட்டு உங்க பாட்டுக்கு எழுந்து போய்க்கிட்டே இருங்க........அப்பாலே அவன் கிட்டபோறது வணக்கங்கிறது காலவுழுறது மச்சாங்கிறது இதெல்லாம் வேணாம். அவனும் சாமானிய பிறவிதான். ஆறுவருஷமுன்னே சோத்துக்காக அல்லாடிக்கிட்டிருந்திருப்பான். அவனைப்போயி நீயு வுழுந்து கும்பிடணுமா?

நாட்டில அதிகமா உழைக்கிறவனுக்கு கொஞ்சமா கூலி கொடுக்கிறான். சினிமாவுல என்னண்ணா கொஞ்சமா உழைக்கிறவனுக்கு அதிகமா அள்ளிக்கொடுக்கிறான். ஒலகத்திலேயே என்னிக்குமே அசமத்துவம் ஒழிக்க முடியாதபடி சபிக்கப்பட்டவொரு கொள்ளைப் பிரதேசம்னா இந்த சினிமா ஒண்ணுதான். எல்லாம் பொய்யும் புரட்டுந்தான்னேன். ஜமீந்தார் பங்களான்னு காட்டுவோம், உள்ளே வந்து எட்டிப்பார்த்தீங்கன்னா பூரா ஒரே காட்போடும் ,பக்கேஸ் பலகையும் ,பெயின்டிங்கும்தான். ஒண்ணும் நிஜம் கிடையாது.

நண்பர்களே. எல்லாமே போலி உல்டா...!!.' டேய்.......யாரங்கே? ன்னு ராஜபார்ட் கர்ஜித்தா அதிர்ச்சியில சுவரு விழுதிடாம பின்னால் பத்துபேர் பிடிச்சுட்டு நிப்பாங்க. நிஜத்தை பார்த்தீங்கன்னா சினிமாவே வெறுத்துப்போயிடும் உங்களுக்கு.

ஒரு சினிமாவை உருவாக்கிறதில உழைப்பாளிங்க பங்குதான் ஜாஸ்தி. அவங்க எல்லாம் ஏழைங்க.....ஷெட்டுப்போட்ட ஆசாரியையோ லைட்டுப்பிடிச்ச தொழிலாளியையோ யாரும் என்னைக்குமே கண்டுக்கிறதில்லே. நாள் பூரா வயர் காவித்திரியும் குப்புசாமி என்ன இம்பாலாவிலயா வூட்டுக்குப்போறான்?

இப்போ எனக்கு இங்கே வரவேற்பு தந்திருக்கிறீர்களே சந்தோஷம்..... பேஷ்! அதுபோல அந்தக் குப்புசாமிக்கும் கொடுப்பீங்களா, என்னைக்கும் ஜிகினாவில மயங்கிறதே தமிழன் பிழைப்பாய்ப்போய்ச்சு!'

கலைஞர்களும் அவர்தம் கலைகளும் ரசிக்கப்பட வேண்டியவைதாம். அதற்குமேலும் அவர்களுடன் விளைக்கெட்டால் எஞ்சப் போவது வருத்தம்தான்.

எம். ஆர். ராதவின் பேச்சும் கருத்தும் நூறு சதவீதம் உண்மை. கட் அவுட்டுகளுக்குப் பாலாபிஷேகம் செய்வதும், பாதுகை காவுவதும் ரஜனி விஜய் சகாப்தத்துடன் முடியுமோ இன்னும் தொடருமோ.

*பொ.கருணாகரமூர்த்தி, பெர்லின்.*



NAG & CO
SOLICITORS

CRIME
CONVEYANCING
MATRIMONIAL
IMMIGRATION
TRAFFIC MATTERS
LANDLORD & TENANTS
POLICE STATION MATTERS
EMPLOYMENT MATTERS
WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

2) In UK since 1998, 35 years, 6'2", O/L educated, in business, looking for a suitable bride.Ref:1141

3) IT Professional on student visa, 30 years, 5'11", looking for a suitable bride. Ref:1140

4) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், A/Lபடித்த, 37 வயது, 5'11", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1139

5) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், O/Lபடித்த, 29 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1138

6) அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

7) கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

8) பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1135

9) பிரான்ஸில் வசிக்கும், 34 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1134

10) லண்டனில் 8 வருடங்களாக வசிக்கும், 42 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1133

11) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், 34 வயது, 5'7", A/L படித்த, மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1132

12) லண்டனில் வசிக்கும், 30 வயது, 5'9", மணமகனுக்கு, பிரஜாவுரிமையுள்ள மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1131

13) In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU,Aus.or Canada. Ref: 1130

14) பிரான்ஸில் வசிக்கும், 38 வயது, 5'4", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1129

15) இலங்கையில் வசிக்கும், 33 வயது, 5'9", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1128

16) இந்தியாவில் வசிக்கும், 29 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

17) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 32 வயது, 5'9", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1126

18) ஜோர்ஜியாவில் படித்த Doctorம், தற்சமயம் UK ல் student visa வில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

19) சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

20) கொழும்பில் வியாபாரம் செய்யும், 32 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1123

21) யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணிபுரியும், 28 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1122

22) UK ல் வசிக்கும், 31வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1121

23) UK ல் நிரந்தரவதிவுடமை உள்ள, 29வயது, 5'9", மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1120

24) லண்டனில் வசிக்கும்,39 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1119

25) IT graduate, 28 years, 5'11", on permanent stay ,looking for a suitable bride. Ref: 1118

26) Top professional 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

27) லண்டனில் வசிக்கும், 33 வயது, 5'6", A/Lபடித்த,மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1116

28) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 32 வயது, 5'11", படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1115

29) லண்டனில் 9 வருடம், லண்டன் பட்டதாரி, 32வயது, 5'4", மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1113

30) Employed in Doha- Qatar, 28 years, 5'8", A/L qualified looking for a bride, an E.U citizen. Ref : 1112

31) In the U.K, with PR, 41 years, 5'7", working as assistant financial controlar, looking for a suitable bride. Ref : 1111

32) British citizen, a professional, 41 years, 5'8", a divorcee, looking for asuitable bride. Ref: 1109

33) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 28 வயது, 5'7", Plumberக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1108

34) Canadian citizen, 45 years, 5'10", O/L qualified, looking for a suitable bride. Ref: 1107

35) Hotel employee, 31 years, 5'7", in the UK for the last 8 years, looking for a suitable bride with citizenship abroad . Ref :1104

37) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள A/L படித்த தற்போது மலேசியாவில் வேலை செய்யும் மணமகனிற்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1102

38) Canadian citizen, 44 years, 5'11", educated and well employee, a Divorcee, looking for a suitable bride. Ref: 1101

39) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

## மணமகன் தேவை

1) கொழும்பில் வேலை செய்யும், 38 வயது, 5'1", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1476

2) யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கல்வியற் கல்லூரி ஆசிரியை, 23 வயது, 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை லண்டனில் தேடுகின்றனர். Ref:1475

3) கொழும்பில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனை தேடுகின்றனர். Ref:1474

4) வவுனியாவில் அதிபராக கடமையாற்றும், 43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

5) Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

6) Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

7) UK Citizen, 24 years, 5'6", a Professional & a divorcee, seeking a suitable groom. Ref:1470

8) சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

9) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

10) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

11) யாழ்ப்பாணத்தில் வசிக்கும், 43 வயது 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1466

12) German citizen, 30 years, 5'3", educated & well employed, looking for a suitable groom. Ref:1465

13) தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1464

14) கொழும்பில் கணக்காளராக பணிபுரியும், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1463

15) கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

16) மலேசியாவைச் சேர்ந்தவரும்,40 வயது, 5'5", படித்த, கணவனை இழந்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை கனடா, ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1461

17) கொழும்பில் வங்கியில் முகாமையாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

18) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 33 வயது, 5'4", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை பிரான்ஸில் தேடுகின்றனர். Ref:1458

19) கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

20) கொழும்பில் வேலை செய்யும், 25 வயது, 5'2", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1455

21) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

22) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1452

23) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

24) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

25) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

26) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1448

27) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

28) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

29) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

30) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

31) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

32) மட்டக்களப்பில் பிறந்து A/Lபடித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1442

33) கனடாவில் வசிக்கும் பட்டதாரியும் Accountants and Advisors company-யில் வேலை பார்க்கும் 26 வயது 5'5" மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1441

34) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1440

35) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1439

36) Uni. student, 24 years, 5'4", a British citizen, in the UK since her teenage seeks a suitable groom. Ref:1438

37) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

38) பிரான்ஸில் வசிக்கும், 35 years, 5'7", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1436

39) பிரான்ஸில் வசிக்கும், 33 years, 5'5", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1435

40) கொழும்பில் தொழில் புரியும், 36 வயது, 5', படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1434

41) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மண மணமகனை Canadaவில்/ இலங்கையில் தேடுகின்றார். Ref: 1433

42) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

43) இந்தியாவில் Docterஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

44) Professional bride, 29 years, 5'4", a German Citizen, in UK for 6 years, a Divorcee, looking for a suitable groom. Ref:1429

45) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 25 வயது, 5'5', International Affairs Degree Final year, தகுந்த மணமகனை UK/ Canada/Colombo இல் தேடுகின்றார். Ref:1428

46) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

47) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பி ல் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

48) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

49) டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக ம்ணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

50) Canadian Citizen, 35 வயது, 5',விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றார். Ref: 1422

51) இலங்கையில் வசிக்கும் B.A பட்டதாரி ஆசிரியை, 33 வயது, 5'3", தகுந்த மணமகனை UK/ Australia/Europe/Canada/swiss இல் தேடுகின்றார். Ref:1421

52) கொழும்பில் வசிக்கும், B.A பட்டதாரி ஆசிரியை, 39 வயது, "5', தகுந்த மணமகனை UK/Europe இல் தேடுகின்றார். Ref:1420

53) வடமராட்சியில் வசிக்கும், பட்டதாரி ஆசிரியை, 27 வயது, 5'4', தகுந்த மணமகனை லண்டனில் / இலங்கையில் தேடுகின்றார். Ref: 1419

54) வடமராட்சியில் வசிக்கும்,39 வயது, 5'5', தகுந்த மணமகனை UK/ Europe/Canada இல் தேடுகின்றார். Ref: 1418

55) இலங்கையில் வசிக்கும்,ஆசிரியை, 26வயது, 5'3', தகுந்த மணமகனை UK/ Europe/swiss இல் தேடுகின்றார்.

# கவிதை

## தியாகத் தீபமே!

தாயகம் தந்தநற் புதல்வர்கள் வரிசையில்
தனக்கென இடத்தினைப் பிடித்தஎம் திலீபனே
அவனியில் தமிழினம் வாழ்ந்திடும் வரையினில்
அடிக்கடி உன்பெயர் நினைவினில் வந்திடும்

ஊரே எழுந்திடில் உரிமைகள் கிடைத்திடும்
ஊரெழு மண்ணினில் பிறந்தவன் நம்பினான்
ஊரினை எழுப்பிட உண்மையாய் உழைத்தவன்
கூரிய நாவினைக் கருவியாய் ஆக்கினான்

தனித்துவம் இழந்ததோர் இனமதாய் வாழ்ந்ததால்
மருத்துவம் மனதினில் படிந்திட மறுத்தது
இனத்துவம் காத்திடும் பணியினில் இணைந்தவன்
இளைத்துமே சாய்ந்தனன் நல்லையூர் மண்ணிலே

சுந்தரப் பெண்களைச் சுதந்திரப் பெண்களாய்
கண்டிடும் பணியிலே முன்னிலை நின்றவன்
தந்திர இந்தியச் சதியினால் நொந்துமே
தந்தனன் உயிரினை காந்தியும் நாணவே

அண்ணலின் வழியினில் வந்தவர் செய்கையால்
ஆத்திரம் கொண்டவன் அஹிம்சையை நாடினான்
அஹிம்சையேகொள்கையாம் சொன்னவர் செய்கையால்
அருமருந் தானஎம் திலீபனும் தூங்கினான்

அடிதடி மட்டுமே அறிந்தவர் இவரென
அயலுள நாடுகள் எள்ளிய வேளையில்
அறவழிப் போரிலும் அசையா இனமென
அகிலமே கண்டிட அமரனாய் ஆகினான்

வாய்களில் வார்த்தைகள் வந்திட மறுத்தது
விழிகளும் நீரினைச் சொரிந்துமே களைத்தது
தமிழரெம் தலைகளும் ஒருநொடி சரிந்தது
தவப்பெரும் புதல்வனின் மறைவினால் பதைத்தது

இருக்கையில் பிறர்பணி செய்திட மறுப்பவர்
இருக்குமிப் பூமியில் இருந்துமே வந்தவன்
இறந்துமே உடல்தனை அடுத்தவர்க் கீந்தவன்
இருக்கிறான் தமிழரெம் இதயச் சிறையிலே

*-முரளி*

## அணையாச் சுடர்

தலைவனவன் பாதையிலே தளம் அமைத்து நின்றாய்
தமிழீழ விடுதலையைத் தனி மூச்சாய்க் கொண்டாய்
களங்கள் பல கண்ட மறப் படையில் சேர்ந்தாய்
கனிவு மொழிச் சொல்லால் எமது மனங்களை நீ ஈர்த்தாய்


அமைதி காக்க வந்த படை அழிவுகளைச் செய்ய
அறவழியின் பாதையிலே புதிய களம் கண்டாய்
அன்னை மண்ணைக் காக்க உண்ணா நோன்புற்று
அண்ணல் காந்தியை விஞ்சி நின்ற மைந்தன் ஆனாய்

மடைதிறந்த வெள்ளம் போல் நாவன்மை உடையாய்
மாத்தமிழர் உரிமைக்கு பெரும் துணையாய் இருந்தாய்
மாக்களைப் போல் நாம் வாழாமல் மானுடராய் வாழ
மதிப்புமிகு உன் உயிரை மண்ணுக்கு நீ தந்தாய்

காந்தியத்தின் பாதையிலே பயணம் செய்த உன்னை
காலனவன் கைகளிலே போட்டுவிட்டுச் சென்றார்
காவியமாய் நம் மனத்தில் நிலைத்து விட்ட உன்னை
காலம் பல சென்றாலும் நாம் மறவோம் என்றும்

உண்ணாமல் உயிர் துறந்த உயர்ந்தோன் நீ
உருவிழந்து ஒளி தந்த மெழுகுத்திரி
தளராமல் தடம் போட்ட தவப் புதல்வன்
தமிழர் நெஞ்சில் தணியாத ஈகைச் சுடர்.

*- இளங்கோ*



பசித்தது
அவனே உணவானான்

*- கவிஞர் காசி ஆனந்தன்*

## தியாகத் தீபம்

திலீபன் அண்ணா ! உங்களுக்கு
பசியால் பார்வைமங்குவது
எனக்குத் தெரிகிறது. இங்கிருக்கும் மக்கள் கூட
உங்களிற்கு மங்கலாய் தெரிகிறார்கள்
ஆனால் தமிழீழம் மட்டும்
தெளிவாகத் தெரிகிறது.

திலீபனண்ணா !
எனக்குத் தெரியும்

நீங்கள் சாகும்போதும்
சிரித்துக் கொண்டே சாவீர்கள் !

மௌனமாய் அழைக்கும்
மரணித்த நண்பர்களிடம்
போகப் போகிறேன்
என்று மக்களிடம் சொல்கிறீர்கள்.

அவர்கூட நீர் அருந்தி நீண்ட நாட்கள்
நினைவோடு இருந்தாரே !
நீங்கள் ஏன் அண்ணா அருந்தக் கூடாது!
எனக்குத் தெரியும்
நீங்கள் அருந்தமாட்டீர்கள் !
தமிழீழ தாகத்திற்குத்
தண்ணீர் அருந்த மாட்டீர்கள் !

*- திலீபனின் உண்ணாவிரதப் பந்தலில் சகோதரி ஒருவரால் படிக்கப்பட்ட கவிதை*

## தியாகத் தீபம்

ஆயுதம் ஏந்தவே எம்மவர் கூட்டம் என்ற
சொல்லடை நீ மாற்றினாய்!! அமைதிப்படை
என்று வந்தவர் அட்டூழியம் அண்ணலே!
கோடிட்டு நீ காட்டினாய்!!

நல்லூரின் வீதியில் நாயகா நீயொரு
அஹிம்சையை நிலைநாட்டினாய்!
தியாகத்தின் பாதையில் நடை போட்டே
அண்ணா அநீதியை நீ சாடினாய்!

பன்னிரு நாட்களாய் கடும் தவம்
புரிந்தவா!! தமிழ் மானம் அரங்கேற்றினாய்!
விடுதலைப் போரிலே உனக்கென ஓர்
வரலாறை உருவாக்கினாய்!

அடங்கிக் கிடக்கவோ தமிழன்
என்றே நீ கூவினாய்!! அஹிம்சையே
தம் நாடென்று சொல்பவர் நாடகம்!
வெளிப்படுத்தவே தியாகியானாய்!!

"எலிக்குக்கூட தனிவளை வேண்டுமே
எமக்கு வேண்டாமோ? தமிழினமே!
இன்னும் அடிமையாய் வாழ்வதோ?
விடுதலை வேண்டாமோ?!!

"ஒன்றாகி ஓர் பாதை ஓர் நெறி
கொண்டிட்டால் ஈழமே எங்கள் பக்கம்!
வியட்நாம் மக்கள் கொண்டது அவ்வழி
அதனால் அங்கு சொர்க்கம்"

இத்தனை பாடங்கள் எமக்காய் தந்தவா!!
தியாகியே திலீபன் அண்ணா!. எத்தனை
காலங்கள் கடந்தாலும் உன்பெயர் மன
ஏட்டில் இருக்கும் அண்ணா!.

உன் வழி சென்றாலும் நல்வழி நின்றாலும்!!
செவிடர் காதில் விழுமோ?!!.இன்னும்
எம்மினம் அடக்கு முறைக்குள் அடங்கியே
கிடத்தல் நலமோ?!!"

காற்றினை மட்டுமே ஏற்று நீ
வாழ்ந்திட்ட பன்னிரு நாட்கள் சாட்சி!
முடிந்ததோ! விடிந்ததோ! அரக்கரின்
கொடுமைகள் இன்னுமே அவர்கள் ஆட்சி!

அண்ணனே!! உன்னிடம் சத்தியம்
செய்கின்றோம் நீதிகள் தோற்பதில்லை!!
விரைவினில் கொடும்பகை அழித்தே வெல்வோம்
இனி ஈழத் தமிழன் அழுவதில்லை!!..அழிவதில்லை!!

வென்றிடும் காலம்! வெற்றியின் கோலம்!
ஈழப் படையினால் உருவாகும்! நீ சென்றிட்ட
தலைமையின் ஒளியிலே எம் இருள்
விரைவினில் வெளியேறும்!..

*— தமிழ்த்தங்கை*

## தீபமே!

அசோக சக்கரத்தின்


அஹிம்சை முகமூடியினை

கிழித்தெறிந்தவனே

அகிலம் உள்ளவரை

அண்ணா உன் நினைவிருக்கும்

*-ஜனனி*

**Sri GuruPramma Astrological Centre**

**ஸ்ரீகுருப்பிரம்மா ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் (Bramhacharya) **ஜெயராம் மகாயோகி சாஸ்திரி**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாமநட்சத்திரம், ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒருமுறை சந்தித்துப்பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் விசிகம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, ஜனவசிகம், செய்வினையால் பாதிப்படைந்தவர்களுக்குப் பரிகாரம் வழங்கப்படும். அனைத்துவிதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். பேசப்படும் மொழிகள் தமிழ், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம். 11 நாட்களுக்குள் உங்கள் பிரச்சினைகளுக்கு ஏற்ப பூசைகள் செய்து தீர்த்து வைக்கப்படும்.

Call: **07908 328 788**




**17A, LEE HIGH ROAD, LEWISHAM, LONDON, SE13 5LD** Near to **ARRU SUVAI** Sri Lankan & South Indian Restaurant, (Opposite Sivan Temple) ***Opening Hours:*** 8.00 a.m – 9.00 p.m Seven days a week

# அறுவைப் பக்கம்

## Modern பெண்களும் Ultra modern பெண்களும்





என்ரை பால்ய சிநேகிதன் சிவராம் அண்டைக்கு என் முன்னாலை வந்து நிண்டான். வழமையா எண்ணெய் பூசின முகத்தோடை சீலைப் பைக்குள்ளை அமத்தி வைச்சிருந்த சேட்டை அப்படியே போட்டுக் கொண்டு வாறவன் அண்டைக்கு பாத்தா விலை கூடின சேட்டை மடிப்புக் குலையாமல் போட்டு மப்பான மாலை நேரத்திலையே கண்ணுக்கு கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு வந்து அசத்தினான்.

என்னடா' விசயம் எண்டு கேக்க தன்னை ஒருத்தி லவ் பண்ணிறாளாம் எண்டதை நாலு தெரு கேக்கப் பெருமையாச் சொன்னான்.

அவன்ரை முகத்திலை உலகக் கிண்ணத்தை வெண்ட கிறிக்கெற் கப்டன்ரை முகத்திலை இருக்கிற அளவு பெருமை.

சரி நீ லவ் பண்ணுற பெண் மொடெர்னா இல்லாட்டி அல்ரா மொடேர்னா எண்டு கேக்க திரு திரு எண்டு முழிச்சான்.

அடக் கடவுளே பொம்பிளைகளைப் பற்றின அடிப்படை விசயமே தெரியாமல் இருக்கிறானே எண்ட கவலையிலை அவனுக்குக் கொடுத்த விளக்கத்தை உங்களுக்கும் தாறன். படிச்சுப் பயன்பெற வாழ்த்துக்கள்

Modern Girls

T-Shirt போட்டுக் கொண்டு மங்களகரமா சுத்துவாங்க

Ultra Modern Girls

அதே T-Shirt ஐ கையை கிழிச்சுவிட்டிட்டு கையில்லாத பனியனோட பரிதாபமா உலாவருவாங்க

Modern Girls

லூசு மாதிரி லூசா ஒரு ஜீன்ஸ் போட்டுக் கொண்டு சுத்துவாங்க

Ultra Modern Girls

போட்டிட்டுத் தச்சாங்களோ அல்லது தச்சிட்டுப் போட்டாங்களோ எண்ட கவலையை உண்டாக்கிற மாதிரி ஒரு ஜீன்ஸோட கலவரமா உலாவருவாக

Modern Girls

ஜீன்ஸ் டிசர்ட் போட்டுக் கொண்டு ஏதோ hair band எல்லாம் ஹேர்லதான் போட்டுக் கொள்ள வேணும் எண்ட பழைமைவாதத்தில சடைபின்னி அதுல இந்த hair band போட்டுக் கொண்டு சுத்திக் கொண்டு இருப்பாக

Ultra Modern Girls

எங்க அவுக போட்டு இருக்குற டிசர்ட்டு ஜீன்சை 'டச்' பண்ணி டார்ச்சர் கொடுத்துடுமோங்கற கவலையில ஜீன்ஸுக்கு பாதமகமில்லாம ஒரு டிசர்ட்டை போட்டுக் கொண்டு அப்படியே hair band எல்லாம் கையில போடுறதுக்குதான் எண்ட வாழ்க்கைத் தெளிவோட தலைவிரிகோலமா கலவரமா சுத்திகிட்டு இருப்பாக !

Modern Girls

அதிகபட்சமா short சுரிதார் போட்டுக் கொண்டு வாய பொளந்துகிட்டு பாக்கிறவங்களை 'அற்பனே' ன்னு ஒரு 'லுக்' விட்டுக் கொண்டு சீனைப் போடுவாங்க.

Ultra Modern Girls

இவங்களும் short சுடிதான் போடலாம்னு நெனச்சுக் கொண்டு உள்ள போடுற 'ஸ்லிப்'பையே கலர் கலரா குழந்தை மனசோட போட்டுகிட்டு வந்து பாகுறவுக மனசை தவழ வைச்சிடுவாங்க.

Modern Girls

முக்கா காலுக்கு ஒரு பாவாடைய போட்டுக் கொண்டு தேம்ஸுக்கு பக்கத்துலதான் என்ரை வீடு எண்ணிற ரேஞ்சுக்கு அலப்பறை வுடுவாங்க

Ultra Modern Girls

இவுக 'கால்' காலுக்கு கொஞ்சம் கீழ வரைக்கும் பாவாடைய போட்டுக் கொண்டு ஜெனிபர் லோபஸ் தங்கச்சி ரேஞ்சுக்கு சிலுப்பிக் கொண்டு இருப்பாக

Modern Girls

இவங்க அப்படியே டக்கு டகுன்னு ஹைஹில்சை போட்டுகிட்டு நடந்தா ஏரியாவே அதிர்ரும்ல ?

Ultra Modern Girls

இவுக ஏரியாவுக்கு வந்தாலே பால்குடி பாலகன் முதல் நாளைக்கு பால் ஊத்தபோற தாத்தா வரை பாக்குறவுக மனசெல்லாம் சும்மா அதிர்ரும்லே ??

என்ன கண்ணுகளா ஏதோ நம்மளால முடிஞ்ச அளவுக்கு விளக்கத்தை அள்ளித் தெளிச்சிருக்கிறேன். மார்டன் பொண்ணுகளுக்கும் அல்ட்ரா மார்டன் பொண்ணுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை தெரிஞ்சு கொண்டு ஜென்ம சாபல்யம் அடைஞ்சு கொள்ளுங்க

*- ஜொள்ளுப்பாண்டி*

## புதுக்குறள்

*எண்ணிப் பெறுக பிள்ளைகள்—பெற்றபின்*
*எண்ணுவம் என்ப திழுக்கு*

❖ ❖ ❖

*உண்டதனாலாய பயனென்கொல்— உண்டபின்*
*ஏப்பம் நன்கு வாராதெனின்*

❖ ❖ ❖

*சிக்சர் அடித்தாரே வாழ்வாங்கு வாழ்வார்*
*சிங்கிளடித்தார் ஓடியே சாவார்*

❖ ❖ ❖

*நாம் நோக்கும் பெண் நம்மை நோக்காக்கால்*
*நான்நோக்கி என்ன பயன்*

❖ ❖ ❖

*கற்க கசடறக் கற்க கற்றபின*
*விற்க கொப்பியைக் கடைக்கு*

## வைத்தியசாலைச் சிரிப்புகள்

| | |
|---|---|
| நோயாளி | டொக்டர், என்ரை ஒப்பரேசனை இந்த கிழமை வைக்காமல் அடுத்த கிழமைக்கு மாத்துறியளா? |
| வைத்தியர் | ஏன்? |
| நோயாளி | எனக்கு இந்த வார ராசி பலனிலை நீண்ட தூரப் பயணம் எண்டு போட்டிருக்குது. அதுதான் பயமாக் கிடக்குது |

❖ ❖ ❖

| | |
|---|---|
| நேர்ஸ் | டொக்டர் ஒப்பரேசன் முடிஞ்சுதா? நோயாளியைக் கூட்டிக் கொண்டு போகட்டா எண்டு சொந்தக்காரர் கேக்கினம் |
| வைத்தியர் | எடுத்துக் கொண்டு போகச் சொல்லுங்கோ |

❖ ❖ ❖

| | |
|---|---|
| நோயாளி | டொக்டர் வயிறு எரிஎரியெண்டு எரியுது |
| வைத்தியர் | எப்ப இருந்து இப்படி இருக்குது |
| நோயாளி | பக்கத்து வீட்டுப் பரிமளம் புதுசா 4 பெட்றூம் ஹவுஸ் வாங்கினதிலை இருந்து |

❖ ❖ ❖

| | |
|---|---|
| நோயாளி | டொக்டர் வாய் நாறுது |
| வைத்தியர் | எப்ப இருந்து? |
| நோயாளி | நீங்கள் இப்ப வாயைத் திறந்ததிலை இருந்து |

❖ ❖ ❖

| | |
|---|---|
| நோயாளி | ஒப்பரேசனை எப்ப முடிப்பீங்கள் டொக்டர்? |
| வைத்தியர் | எப்ப நீங்கள் முடியிறீங்களோ அப்ப முடிச்சுடுவன் |

❖ ❖ ❖

| | |
|---|---|
| வைத்தியர் | உங்கடை கணவனுக்குத் தான் ஒரு வருத்தமும் இல்லையே. பிறகேன் எக்ஸ்றே ஸ்கான் எல்லாம் எடுக்க வேணும் எண்டு சொல்லுறியள் |
| பெண் | அப்ப தானே அவரின்ரை மனசிலை என்ன இருக்கு எண்டு அறியலாம் |

❖ ❖ ❖

| | |
|---|---|
| நேர்ஸ் | நாளைக்கு ஒப்பரேசன் பண்ண வேண்டிய நோயாளியைக் காணேல்லை டொக்டர் |
| வைத்தியர் | சரி பிழைச்சுப் போறார் விடு |

❖ ❖ ❖

*- பத்மநாதன்*

## குரங்காம்பாள் சோதிட நிலையம்



*கைரேகை, முகநாடி, எண்கணிதம், கிரகநிலை எல்லாம் பாவித்து உங்களுக்கு முன்னுக்கு நடந்தது இனி நடக்கப் போறது எல்லாம் தெள்ளத் தெளிவாக சாதகம் இன்றியே கணிக்கும் வல்லமை பெற்ற குரங்காம்பாள் சாத்திரி உங்களுக்காக நடுக்காட்டிலிருந்து இங்கு வந்திருக்கிறார்.*
*உடனே பை நிறையப் பணத்துடன் வாருங்கள்....*

# சினிமா

## சினித்துளி

### 'கந்தசாமி'



கந்தசாமி படத்தில் வித்தியாசமான 5 தோற்றங்களில் வருகிறாராம் விக்ரம். அதில் காட்டுவாசி தோற்றம் புது மாதிரியாக வந்து அசர வைக்குமாம்.

இதற்காக ஆபிரிக்க பழங்குடிவாசிகளை நேரில் கண்டு வந்திருக்கிறார் இயக்குனர். நடிகர் விக்கிரமும் இதற்கான தயார்படுத்தல்களில் முழுமூச்சாக இறங்கி விட்டாராம்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு விக்ரம் ரசிகர்களுக்கு நல்ல விருந்து காத்திருக்கிறது என்று திரையுலக வட்டாரங்களில் பேசப்படுகிறது

### 'டாக்டர்' விஜய்



பலரின் எதிர்ப்பையும் மீறி நடிகர் விஜய்க்கும் இயக்குனர் ஷங்கருக்கும் டாக்டர் பட்டம் வழங்கி பெருமை கொண்டது எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம். இதை எம்.ஜி.ஆரே நேரில் வந்து கொடுத்த பட்டமாகவே எண்ணிப் பெருமை அடைகிறேன் என்று நாத்தழுதழுக்கக் கூறினாரம் விஜய்..

தன் தங்கை வித்யா பெயரில் ஒரு அறக்கட்டளை துவங்கி ஏழை மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி செய்கிறாராம் நடிகர் டாக்டர் விஜய். எப்படியோ நல்ல காரியங்கள் நடந்தால் சரி!

### தலையில் காயம்



படப்பிடிப்பில் சண்டைக் காட்சிகளில் அதிகம் ஆர்வமாக ஈடுபாடு காட்டும் நடிகர்களில் தனுசிற்கும் ஒரு இடமிருக்கிறது.

அண்மையில் பொல்லாதவன் படப்பிடிப்பின் போது தனுசும் டேனியல் பாலாஜியும் கத்தி சண்டை போடும்போது தனுசிற்கு நெற்றியில் கத்தி காயம் ஏற்பட்டு விட்டதாம்.

உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தலையில் தையலோடு ஒரு வாரம் மருத்துவ மனையில் தங்கியிருந்தாராம். ஆக விழுப்புண் கண்ட நடிகர் தனுஸ் என்டு யாராவது பட்டம் கொடுக்கலாமே?

### சினேகாவின் மயக்கம்



அண்மையில் படப்பிடிப்பில் சினேகா மயங்கி விழுந்த செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டது.

என்னதான் நடந்தது என்று சினேகாவிடமே கேட்டபோது தொடர்ந்து எட்டு நாளாக படப்பிடிப்பு நடந்தது.. மாலை ஆறுமணிக்கு சூட்டிங் ஆரம்பிச்சா, மறுநாள் காலை ஆறுமணிக்குதான் முடிஞ்சுது. இப்பிடியே தொடர்ந்து எட்டு நாட்கள். இதனால் டயர்டாகி மயக்கமாயிட்டேன்' என விளக்கம் அளித்தார்

குளுக்கோஸ் செலுத்திய பிறகு, பழைய ஆரோக்கியம் சினேகாவுக்கு திரும்ப கிடைத்துள்ளது. இதனால் தொடர்ந்து படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்.

## சிறுதுளி !

குணசித்திர வேடங்களில் கலக்கிக் கொண்டிருந்த 'காதல்' சுகுமார்,இப்போது கதாநாயகனாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

'செவளை' என்ற படத்தில் சுகுமாருக்கு கதாநாயகன் வேடம். ஆபாவாணனின் உதவியாளர் ராஜசேகர் இந்த படத்தை இயக்குகிறார்.

❖ ❖ ❖

விஜய் நடிக்கும் அழகிய தமிழ் மகன் படத்தில் 'வலயப்பட்டி தவிலே அடி சிமிக்கி போட்ட மயிலே' என்ற தத்துவம் நிறைந்த பாட்டுக்கு ஸ்ரேயாவும் விஜயும் ஒரு கலக்கல் நடனம் ஆடியிருக்கிறார்கள். இதில் மீண்டும் பிரபு தேவாவுடன் இணைந்திருக்கிறார் விஜய்

❖ ❖ ❖

'சினிமாவில் இதுவரை எந்த ஆணும் என் மனதைக் கவரவில்லை. அப்படி யாரேனும் கவர்ந்தால் அவரை காதலித்து மணம்புரிவேன்' என்கிறாரம் நடிகை பாவனா. யாருக்கு அடிக்கிறதோ சான்ஸ்!

❖ ❖ ❖

மாரடைப்பால் மரணமடைந்த இயக்குனர் ஜீவாவின் தாம் தூம் படத்தை அவரது மனைவி அனிஸ் ஓசையின்றி இயக்கி வருகிறார்.

❖ ❖ ❖

தாம் தூம் படத்தில் அதிக கவர்ச்சியாக நடிக்கிறாராம் நடிகை காம்னா. சம்பளத்தை இதற்காகவே உயர்த்தி இருக்கிறார்களாம் தயாரிப்பாளர்கள்.

❖ ❖ ❖

கவர்ச்சியாகவே நடித்து வந்த நடிகை கிரண் இப்போது மாறுதலுக்காக படு கவர்ச்சியாக நடிக்கிறார். படம் வசூல், வசூல் அள்ளுமா?

❖ ❖ ❖

இளையராஜாவின் பழைய பாடல்களை மலையாளத்தில் ரீ மிக்ஸ் செய்து வெளியிட்டதில் அவை பயங்கர ஹிட்டாம். லோலம் பாடி அசைந்தாடும் காற்றே என்ற பாடல் ரீமிக்ஸில் சூப்பர் ஹிட்டாம்!

❖ ❖ ❖

இயக்குனர் சுந்தர்.சி நடிகராகி ஒவ்வொரு படத்திலும் ஒரு புது நடிகையோடு ஜோடி போடுகிறார்

சுந்தர் அடுத்து நடிக்கும் தீ படத்திற்குக் கதாநாயகியாக குஷ்பூ தேர்ந்தெடுத்தது அவருடைய உறவுப் பெண்ணான ராகினியையாம் .



## திரிசாவின் திரில்லான பதில்கள்

பல புதுப் புது நடிகைகள் வந்தும் போயும் கொண்டிருக்கும் தமிழ்த் திரைப்பட உலகில் கடந்த சில வருடங்களாய் தொடர்ந்தும் தன் பெயரைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர் திரிசா. அவரிடம் சற்று சர்ச்சைக்குரியதான கேள்விக் கணைகளைத் தூக்கி வீசிய போதும் சளைக்காமல் அவரிடமிருந்து பதில் மழைகள் சிதறின. இதோ உங்களுக்காக அவரின் பதில்கள்

*வெறும் நல்ல பிள்ளை வேடம் போதுமா? நெகடிவ் ரோல் செய்யும் விருப்பம், எண்ணமில்லையா?*

நான் என்னைக்கும் அப்படிச் சொல்லலை. தமிழ் சினிமாவுல ஹிரோயின்னா இப்படின்னு ஒரு ஸ்கேல் வச்சிருக்கிறாங்க. அதிலும் கமர்ஷியல் படம்னா அது மாறுவதில்லை. அதனால இப்படி நடிக்க வேண்டியிருக்கு. ஆனா எனக்கு உள்ளுக்குள் நெகடிவ்ரோல் பண்ண ஆசை இருக்கு தெரியுமா? அதுவும் 'படையப்பா' படத்துல வர்ற ரம்யாகிருஷ்ணன் பண்ணின நீலாம்பரி கேரக்டர் மாதிரி வரணும். ஒரு கலக்கு கலக்கணும்னு ஆசை இருக்கு.

*மொழிக்கு ஒரு கொள்கை வைத்திருக்கிறார் த்ரிஷா என்கிறார்களே... தெலுங்கு என்றால் கிளாமர் காட்டுவார், தமிழில் மாட்டார்... இப்படி?*

இது தவறான பேச்சு. நான் எல்லா மொழிகளுக்கும் ஒரே மாதிரியான ஸ்கேல் வச்சிதான் படம் செலக்ட் பண்றேன். நடிக்கிறேன் அதனால இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

*ரசிகர் மன்றம்... ஆரம்பிப்பது ஓவராகத் தெரிகிறது என்கிறார்களே?*

ஒருத்தரை ஒருத்தருக்குப் பிடிக்கிறது கஷ்டம். அபிமானியா இருக்கிறது அதை விடக் கஷ்டம். என் மேல அபிமானம் வச்சிருக்கிற ரசிகர்கள் என் பேர்ல நல்ல காரியங்கள் செய்ய விரும்புறாங்க அது எவ்வளவு பெரிய விஷயம்? அதுக்கு ஏன் நான் குறுக்கே நிற்கணும். அதை நான் ஊக்கப்படுத்துறதுல என்ன தப்பு?

நான் அவங்களிடம் கட்அவுட் வைக்கக் கூடாது. பாலாபிஷேகம் செய்யக் கூடாது. வேணும்னா அதுக்குப்பதிலா உருப்படியான காரியமா ரத்ததானம் செய்யுங்கள்னு சொல்றேன். அதுக்கு ஒரு பவுண்டேஷன் இருக்கு. அதுல என் ரசிகர்கள் சேர்ந்து நல்லது பண்றாங்க. இது தவறா? எனக்கு இனி விளம்பரம் தேவையா?

*தமிழ், தெலுங்கு அடுத்தது.. இந்தியா...?*

இந்தியில் நடிச்சுத்தான் ஆகணும்னு கட்டாயம் இல்லை. நல்ல கேரக்டர் வரணும். இப்போ தமிழ், தெலுங்குக்கே நேரம் சரியா இருக்கு.

*சினிமாவில் உங்களுக்கு புதிராக உள்ள விஷயம் எது?*

நிறைய இருக்கு. ஒவ்வொரு நாளும் ஒண்ணு தோணும். ஊருக்கு உபதேசம் சொல்வாங்க. அவங்க சரியா நடந்துக்க மாட்டாங்க. இது இப்ப தெரிஞ்சுக்கிட்ட விஷயம்.

*நன்றி இந்தியா எம்.எஸ்.என்*




K Autos
Your Reliable Motoring Centre

Specialists in
▶ Tyres ▶ Servicing ▶ Brakes ▶ Electrical Work ▶ Recovery Service ▶ Clutches
▶ Mechanical Repairs ▶ Exhausts ▶ Rebuild Engine & Gear Boxes ▶ MOT

அனைத்து வகையான மோட்டார் வாகன திருத்த வேலைகளையும் பல வருட அனுபவமும், திறமையும் கொண்டவரினால் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

மணியுடன் தொடர்பு கொள்ளுங்கள்
T: 020 8540 3847 / M: 07961265 232
98A Robinson Road, Colliers Wood, London SW17 9DR

## சினிமா

# My daughter - The terrorist

### கரும்புலிகள் பற்றிய ஆவணப்படம்

உருவாக்கத்திற்கான தோற்றுவாயைப் பற்றிப் புரிந்து கொள்ளாது பல விடயங்கள் சர்வதேசத்தால் பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் விடுதலைப் புலிகளின் ஒரு அங்கமான கரும்புலிகள் அமைப்பை மையப்படுத்தி 'எனது மகள் பயங்கரவாதி!(My daughter - The terrorist) என்ற 60 நிமிடங்கள் நீளங்கொண்ட ஆவணத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெண்-கரும்புலிகள் பற்றிப் பேசும் இந்த ஆவணத்திரைப்படம் நோர்வேயிய ஊடகவியலாளரும் திரைப்பட இயக்குனருமான Beate Arnestad என்ற பெண்மணியால் உருவாக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா மீதான தாக்குதலின் தொலைக் காட்சிச் செய்திக்காட்சியுடன் ஆவணம் தொடங்குகின்றது.

புகழ்ச்சுடர், தர்சிகா என்ற இரண்டு பெண் கரும்புலிகள் மற்றும் தர்சிகாவினுடைய தாயார் ஆகியோர் திரைப்படத்தில் வலம் வரும் பாத்திரங்களாவர். நேர்காணல் வடிவத்தில் அவர்களின் அனுபவங்களைப் பதிவு செய்வதான கதை சொல்லும் உத்தி கையாளப்பட்டிருக்கின்றது.

அதனூடாக கரும்புலிப் போராளிகளாக அவர்கள் இணைந்ததன் பின்னணிகள் விபரிக்கப்படுகின்றன. நிகழ்வுகளை மீள்பார்வை செய்வதனூடு ஆவணக் காட்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன என்பது கதையோட்டத்திற்கு வலுச்சேர்த்துள்ளது.

தர்சிகாவின் தாயாருடனான உரையாடல் மூலமாக தர்சிகா போராட்டத்தில் இணைந்த பின்னணி சொல்லப்படுகின்றது. இரு போராளிகளினதும் சொந்த இடம் யாழ்ப்பாணம். யாழ். பேருந்து நிலையத்தில் சிறிலங்கா அரச வான்படைகளின் குண்டுவீச்சுத் தாக்குதலில் பல அப்பாவிப் பொதுமக்களோடு, தர்சிகாவின் தந்தையாரும் கொல்லப்பட்ட துயரம் சொல்லப்படுகின்றது.

தந்தையின் இழப்பு தர்சிகாவை வெகுவாகப் பாதித்ததன் விளைவாகவும், சிறிலங்கா இராணுவத்தின் அடக்குமுறைக் கொடுமைகளை சிறு பராயத்திலிருந்தே நேரில் கண்ணுற்றும் அனுபவித்தும் வந்த தாக்கத்தின் விளைவாகவும் தர்சிகா புலிகள் அமைப்பில் இணைகின்றார்.

யாழ். இடப்பெயர்வு அவலத்தை நேரடியாக அனுபவித்த பின்னணியில் புகழ்ச்சுடர் போராட்டத்தில் இணைகின்றார். ஒரே நாளில் ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த கொடூரத்தின் மூலக்காட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் மீது சிங்கள அரச படைகள் நடாத்திய இனப்படுகொலைகள், பள்ளிகள் மீதும், வணக்கத்தலங்கள் மீதும் அடைக்கலம் தேடிய மக்கள் மீது குண்டுகள் கொட்டி இனப்படுகொலைகளை மேற்கொண்ட கொடுமைகள் நேர்காணல்கள் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது. சில மூலக்காட்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

ஒடுக்கப்படும் இனத்தின் சுதந்திரத்திற்காக அடக்குமுறையாளர்களை எதிர்த்துப் போராடுபவர்கள் மீதும், போராட்டத்தை முன்னெடுக்கும் போராட்ட அமைப்பு மீதும் மிக எளிதில் பயங்கரவாத முத்திரையினைக் குத்துகின்றது இன்றைய மேற்குலகம். 'நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல. இனத்தின் உரிமைகளை மீட்டெடுக்கும் உன்னத இலட்சியத்திற்காக உயிர்களை ஈகம்செய்யும் விடுதலைப்போராளிகள்' என்று பெண்-கரும்புலிகளின் வாக்குமூலம் பதிவாகியுள்ளது.

தர்சிகாவின் தாயார் கூறுகையில், தனது மகள் சிறுவயதில் இறைபக்தி நிறைந்தவராக தவறாது தேவாலயத்திற்குச் சென்று வழிபடுபவராக விளங்கியதாகவும் சொல்கின்றார். கன்னிகாஸ்திரியாகி இறைபணி புரிய விரும்பிய இளம்பெண் கரும்புலிப் போராளியாகத் தன்னை மாற்றிக்கொண்டுள்ளாள் எனும்போது, அவளைப் பாதித்த அடக்குமுறைக் கொடுமைகள் எத்தகையன என்பதைப் பார்வையாளர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒப்பீட்டளவில் போரின் அவலங்களும் தமிழர் தரப்பு நியாயமும் இரண்டு கரும்புலிப் போராளிகள் மற்றும் தர்சிகாவின் தாயார் ஆகியோருடனான நேர்காணல்கள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சம்பவம் பற்றிக் கருத்துக் கூறுமுன்னர் அந்தச் சம்பவத்திற்கான காரணம், அந்தச் சம்பவத்தின் தோற்றுவாய் என்பனவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்ற உண்மை இந்தப் படத்தைப் பார்ப்பவர்களுக்குப் புரியவே செய்யும்.

இத்திரைப்படம் நோர்வேயைத் தொடர்ந்து ஜப்பான், டென்மார்க், ரஸ்யா, உக்ரைன், கனடா போன்ற நாடுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. ரஸ்யாவின் சென்.பீற்றர்ஸ்பர்க்கில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சிறந்த ஆவணத்திரைப்படத்திற்கான விருதினை வென்றுள்ளதோடு நோர்வேயில் நடைபெறவுள்ள குறும்பட விழாவில் போட்டியிடுவதற்கும் தெரிவாகியுள்ளது. இந்நிலையில் இது அனைத்துலக ரீதியில் கவனக்குவிப்பினைப் பெற்றுள்ளது எனலாம்.

*- ரூபன் சிவராஜா*



### விமர்சனம்

# மருதமலை

நீண்ட நாட்களுக்குப் பின் அக்சன் கிங் அர்ஜூன் நடித்து வெளிவந்திருக்கும் படம் மருதமலை

படத்தில் அர்ஜூனுடன் நிலா, சரண்ப்ரீத்தி, வடிவேலு, லால், நாசர், ரகுவரன் உள்ளிட்ட பலர் நடித்திருக்க யு.கே.செந்தில்குமார் ஒளிப்பதிவு செய்ய டி இமான் இசையில் சுராஜ் இயக்கியுள்ள ஆஸ்கார் பிலிம்ஸின் படம் இது.

அநியாயக்காரர்களை அழிக்கும் நாயகன் பாணியில் ஒரு கதை. ரவுடிகளை ஒழிக்கும் ஒரு போலீஸ்காரரின் வாழ்க்கை... இப்படி மாமூலான சிந்தனைதான் கதைக்களம்.

லால் ஒரு ரவுடி. அரசியல் செல்வாக்கும் அராஜக பலமும் கொண்டவர். நாச்சியார்புரம் தனித்தொகுதியாக அறிவிக்கப்பட்டதும் அங்கு பதினாறு ஆண்டாக தேர்தல் நடத்தவிடாமல் தடுக்கிற அளவுக்கு ஆள் பலம் லாலுக்கு.

அப்படிப்பட்ட லாலை அவ்வூருக்கு வரும் சாதாரண போலீஸ் கான்ஸ்டபிள் அர்ஜூன் எதிர்த்து ஜெயிக்கும் கதைதான் 'மருதமலை.'

லாலை எதிர்த்து அஞ்சாமல் தேர்தல் நடத்துவேன் என்கிறார் ரகுவரன். இவர் தேர்தல் ஆணைய அதிகாரி. அவர் எண்ணப்படி தேர்தல் நடக்கிறது. ஆனால் வாக்களிக்க யாரும் வராத நிலை. காரணம் வாக்காளர்களை அடித்து துவம்சம் செய்கிறார் லால். இந்த அநியாயத்தைக் கேட்க ஆளே இல்லையா என்று பதறுகிறது ஊர்.

இதை எதிர்த்துக் கேட்ட அர்ஜூனின் தந்தை நாசரை லால் தாக்குகிறார். தன் தந்தையின் மேல் கை வைத்ததால் அர்ஜூனுக்குள் பதுங்கியிருந்த புலி சீறி வெளியே வருகிறது. அப்புறமென்ன சூரசம்ஹாரம்தான்.

வெகுண்டெழுந்த அர்ஜூன் வேங்கையாக மாறுகிறார். லாலை அடித்து நொறுக்கி சிறையில் தள்ளுகிறார். அர்ஜூனை பழிவாங்க லாலும் திட்டம் போடுகிறார். ரவுடியிசமா... நேர்மையான போலீசா... எது ஜெயிக்கிறது என்பதுதான் கதை முடிவு.

ரவுடி, போலீஸ் என்றதும் ஐயோ மீண்டும் அர்ஜூன் வித் போலீஸ் ஸ்டோரியா என்று கவலை மீண்டும் நமக்குள் தொற்றுகிறது.

ஆனால் தேர்தல் களத்தை விரிவாக விசாலமான தளமாக்கியிருப்பதால் நிம்மதி பெருமூச்சு விட முடிகிறது! இந்தப் பின்புலமே படத்துக்கு புதிய நிறத்தை தந்திருக்கிறது.

பாப்பாப்பட்டி கீரிப்பட்டி பிரச்சினையை எடுத்துக் கொண்டு சினிமா முலாம் பூசப்பட்ட கதை என்று சொல்லத் தோன்றுகிறது. இருந்தாலும் பிரம்மாண்டமும் விறுவிறுப்பும் காட்டி மிரட்டியிருக்கிறார் சுராஜ்.

இதுவரை உயர் போலீஸ் அதிகாரியாக வந்த அர்ஜூன் இதில் சாதாரண கான்ஸ்டபிள் என்பது வித்தியாசம்.

முதல் பாதியில் வடிவேலுவுடன் சேர்ந்து தீராத விளையாட்டுப் பிள்ளையாக கலகலப்பூட்டும் அர்ஜூன் மறுபாதியில் லாலை எதிர்த்து ஆக்ஷன் கிங்காக அசத்துகிறார்.

படத்தில் தேர்தல் அதிகாரியாக வரும் ரகுவரன் சரியான தேர்வு. லாலை எதிர்த்து சவால் விட்டு தேர்தலை நடத்தும் துணிச்சலில் ஒளிவிடுகிறார். லாலும் மிரளவைக்கும் நடிப்பு.

கொஞ்சம் கொஞ்சல், சீண்டல், சிணுங்கல் என்று கறிவேப்பிலையாக தாளிக்கப் பயன்பட்டு இருக்கிறார் நாயகி நிலா. போஸ் வெங்கட், காதல் தண்டபாணி, சண்முகராஜன் போன்றோரும் மனதில் பதியும் வில்லன் கூட்டணிக் கட்சித் தலைவர்கள்.

படத்தின் பலம் அடிதடி ஆக்ஷன் ஒரு பக்கம் என்றால் சரவெடி காமெடி மறுபக்கம் எனலாம். பலபேர் சேர்ந்து ஆக்ஷன் மேளா நடத்த, அர்ஜூன் - வடிவேலு இருவர் மட்டுமே சேர்ந்து நடத்தும் காமெடி மேளா ரசிக்க வைக்கிறது.

அந்த என்கவுண்டர் ஏகாம்பரம் வடிவேலு ஏகத்துக்கு கிச்சுகிச்சு மூட்டுகிறார். வடிவேலுவை அடித்து பிரபலமாகும் ரவுடிகள் என்கிற கற்பனை வெடிச்சிரிப்பை வரவழைக்கும்

படத்தில் இடம்பெற்றிருந்த அந்த அர்ஜூனின் முறைப்பெண் கதை மனதில் ஒட்டவில்லை.

ஒரு ஆக்ஷன் கதையை பிரம்மாண்டமாகக் காட்டி முழுப் படத்தையும் போரடிக்காமல் கொண்டு சென்ற வகையில் இயக்குனர் சுராஜ் சபாஷ் பெறுகிறார்.

*- இந்தியா எம்.எஸ்.என்*

precise design & print
you imagine we implement

creative artwork from **concept to design**

**seven** | zero
graphic designers
**020 7043 4319**

45B crusoe road | mitcham | Surrey CR4 3LJ



அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் | அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

# தரிசனம்

உலகத் தமிழரின் உணர்வுகளை
ஒளிப்படுத்த ஒரு தொலைக்காட்சி

Tharisanam TV : Europe
TUNING PARAMETERS
Satellite Name : Eutelsat HotBird (13oE)
Frequency : 11.470 GHz
Polarization: Vertical
Symbol Rate : 27.500
FEC: 5/6
**www.tharisanam.tv**

## தரணியெங்கும் தமிழ் ஒளி பரவிட...

*Further details:*

**020 8920 2111**

# மதுரம்

தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா..

TBO Tamil Box Office movie channel.
Mathuram TV is a new tamil television channel for the Europe!
Information can be found on
**www.mathuramtv.tv**



Special Introduction Offer

**£99***

*Conditions apply


**72 Chase Side, Southgate, London N14 5PH** Fax: **020 8886 7508**

# WEMBLEY HOPPER HUT

**Wembley Appa Kade**

## Great news for Sri Lankans!

அம்மா சுட்ட அப்பம் மாதிரி. சும்மா அசத்துற அப்பம்



### Hopper Night

**Eat as much as you like**

Hoppers, Egg Hoppers, Milk Hoppers, String Hoppers, Pittu, Thosai with Fish Curry, a Vegetable Curry, Seeni Sambol, Pol Sambol and Katta Sambol with a Dessert all for just **£6.95**

***Every Friday, Saturday & Sunday from 7.30pm till 11pm***

*Sunday* - Lunch Time Buffet 12.30 to 5.00pm with Meat / Fish, Cashew Curry, Fried Brinjal and many more just for **£6.50**

**NEW!**

Kothu Roti
&
Gothamba Roti







**Free Parking Available**

Arrack, Lion Beer available. Takeaway packs availabe. Suitable for home freezing. We cater for any occassion.
Home catering service now available - We can make Hoppers in your venue.

Call for Reservation / Information

**020 8902 9041 / 07956 344 738**

**Chicken & Pizza Restaurant**
2-4 Empire Way, Wembley HA9 0EF

***www.hopperhut.co.uk***

### Special Voucher

Get **20%** off from your total bill offer valid until 30/08/07. Please present the voucher to the cashier.



# T·J·T

# தினேஸ்

ஜீவல்லர்ஸ் - டெக்ஸ்டைல்ஸ்

## திறப்பு விழாவை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

### மலிவு விற்பனையுடன் பரிசுப் பொருட்களும் வழங்கப்படும்.

ஆண்கள், பெண்களுக்கான, நவநாகரீக ஆடைத் தேர்வுகளையும், பனாரஸ் தங்கவேட்டை - அரசி - சிவாஜி, பஞ்சாபி, பாம்பே சில்க் சாரீஸ் வகைகள் இன்னும் பலவிதமான புடவைகளையும், அன்பளிப்பு பொருட்களையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

£500 மேல் தங்க நகை கொள்வனவு செய்பவர்களுக்கு £50 மதிப்புள்ள ஒரு புடவை இலவசம்

£100 ஆடைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு 40% கழிவு வழங்கப்படும்.

## Thinesh Jewellers & Textiles

No.27, Lewisham High Street, Lewisham, London, SE13 6JZ

**Tel: 020 8613 9569**

பழைய தங்கமாளிகை இருந்த அதே இடத்தில்.

www.Thinesh-JT.com





